Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
රූපා 13/50
දිනමුරසු වාරමලර් செப்.30-ஒக்.06, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 427

## நன்னடத்தை சவால்கள்
## ஜே.வி.பியின் சங்கடம்

## மனிதச் சங்கிலியும் தேசிய அவமானமும்



## இருட்டில் நடந்த திருட்டுப் பரிமாற்றம்

## ஆன்மீகம்

### தீமைகள் அகல திருநீறு அணிவோம்



சைவ சமயிகள் சரீரத்திலே அவசியமாக தரிக்கவேண்டிய அடையாளச் சின்னம் 'விபூதி' மகத்துவம் வாய்ந்த விபூதி பற்றிய விளக்கம் கீழே தரப்படுகிறது.

பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாக்கியது தான் 'திருநீறு' இது வெள்ளை நிறமாகவிருக்க வேண்டும். இதனை பட்டுப் பையிலேனும், சம்புடத்திலேனும் எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும். விபூதியினை வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு தரித்தல் வேண்டும். அதுவும் நிலத்திலே விபூதி சிந்தாவண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி வலக் கையின் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும். அப்படியின்றி சிறிது நீறாகினும் நிலத்திலே சிந்தினால் சிந்திய விபூதியை எடுத்துவிட்டு அந்த இடத்தைச் சுத்தம் செய்ய வேண்டும். நடந்து கொண்டாயினும் கிடந்துகொண்டாயினும் திருநீற்றை அணியலாகாது. அதிசக்தி வாய்ந்த அற்புத திருநீற்றை அவசியமாக நித்திரை செய்யப் புகும் போதும், தந்தசுத்தி செய்தவுடனும், சூரியன் உதிக்கும்போதும், மறையும் போதும், ஸ்நானம் செய்தவுடனும், உணவருந்தச் செல்லும்போதும் தவறாது தரித்தல் வேண்டும்.

பூசகர் அ. அரசரெத்தினம்-சேனையூர்-06.

### மது அருந்தாதே!

"ஒருவன் மது அருந்தினால் அவனுடைய ஈமான் பறி போய் விடும்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும், "மது அருந்துபவனின் நாற்பது நாள் தொழுகை இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவன் சுவனம் புக மாட்டான். மறுமையில் அவன் துர் நாற்றமுடையவனாகவும், தண்ணீர் தாகமுடையவனாகவும் வருவான்.

மதுவருந்திய நிலையில் இறப்பவன் ஈமான் இழந்து காஃபிராய் இறப்பான். மது அருந்துதல் பாவங்களிலெல்லாம் பெரும் பாவம் ஆகும்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே மேற்கண்ட தீய விளைவுகளை நெஞ்சிலிருந்தி ஒருவன் மது அருந்துவதை விட்டும் தன்னைத் தற்காத்து கொள்வது இன்றியமையாததாகும். குடும்பத்தில் கணவன் மது அருந்துவானாயின் இல்லற வாழ்வில் எத்தனை பெரிய நாசம் விளைகிறது என்பதனை விவரிக்க வார்த்தைகளே இல்லை.

ஏ.எஸ்.எப். முபிதா, ஹபுகஸ்தலாவ.

### தயவு செய்யும் கர்த்தர்

"இன்று உனக்கு தயவு செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்...."


(ரூத் 4: 14)

அன்பானவர்களே, இன்று கர்த்தர் அநேக காரியங்களில் தயவு கிடைக்கச் செய்கிறார். எப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தருடைய தயவு கிடைக்கிறது என்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முழுமனதோடு ஏற்றுக் கொண்டு அவர் வழிகளில், கற்பனைகளுக்கு கீழ்படிந்து வாழ்ந்தால் மட்டுமே தயவு கிடைக்கச் சித்தமுடையவராக இருக்கிறார்.

அதிகாரிகளின் கண்களில் தயவு, பெரியவர்களின் கண்களில் தயவு இவ்விதமான பல காரியங்களில் கர்த்தர் தயவு கிடைக்கச் செய்து கொண்டே இருப்பார். தகுதியற்ற நமக்கு தேவன் தம்முடைய இரக்கத்தை ஒவ்வொரு நாளும் அருளிச் செய்து கொண்டு இருப்பார். தானியேல் தன்னுடைய நாட்டை விட்டு சிறைப்பட்டு வந்தவன். தன் உள்ளத்தில் தன்னை தீட்டுப் படுத்தாதபடி காத்துக்கொள்ள தீர்மானம் செய்தான். தன் தீர்மானத்தை நிறைவேற்ற பிரதானிகளின் தலைவனிடம் விண்ணப்பம் செய்தபோது, தேவன் தானியேலுக்கு பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார்". (தானியேல் 1: 19) என்று வாசிக்கிறோம். கர்த்தரை நாம் எல்லோரும் தேடும் போது நம் வாழ்க்கையில் தயவு கிடைக்கச் செய்வார்.

சா. அனிற்ரா, களுதாவளை.

## கவிதைப் போட்டி இல.427



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 06.10.2001

கவிதைப் போட்டி இல.427
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.424

### பரிசுக்குரிய கவிதை

#### நீர்க்குமிழி வாழ்வு

ஊதும் விளையாட்டில்
உல்லாசம் காணும்
சிறுவர்களே!
மேதினியில் நம் வாழ்வும்
இப்போது
மிதந்துடையும்
நீர்க்குமிழியாச்சுதடா!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



#### கூறிடுவீர்

நீர் நமிழியப்பா இவ்வுலகு-அதிலும்
நிலையில்லையப்பா இவ்வுடம்பு
அழித்து விட்டாரே இவ்வுலகை-இனியும்
அழிந்து விடாது காக்க
கூறிடுவீர் ஓர் உறுதி மொழி.

ம. கிறிஷாந்தி-திருமலை.

#### ஊதல்!

சின்னவயதில் எம்போல்
சவர்க்கார நுரையில்
வண்ண வண்ணமாய்
வட்டமும் முட்டையுமிட்டோர்
பென்டகனையும் இன்று
பெரிய கட்டடங்களையும்
என்ன நினைத்தோ இன்று
இப்படி ஊதிவிட்டார்கள்!

மெய்யன் நடராஜ்-கொழும்பு-04.

#### எத்தனை

சவர்க்கார முட்டை யிட்டு
சந்தோஷமாய் விளையாடும்
குழந்தைகள் இருவர்தானோ!
இங்கு முட்டையளவு
உணவில்லாமல் வாடும்
குழந்தைகள் எத்தனை?

த. மதன்-மூதூர்.

#### கனவுகள்

போரிருள் மூடிய பூகம்ப நாட்டிலே
காரிருள் தேசத்தில் மலர்ந்த
இவர்கள் கனவுகள் விடியுமோ?

தெ. லோஜனா-கொழும்பு-06.

#### சோதனை மேல் சோதனை

அடிமேல் அடியாக
ஆண்டவன் சோதனையாய்
குடி நீருக்காய் ஏங்கும்
குடிமக்களா இவர்கள்...?

எம்.எச். யுனைதீன்-எறாவூர்-06

#### சிதறல்கள்

உள்ளத்து ஆசைகளை
ஊதி நிரப்பிவிட்டு
பையப் பைய உயருமென்று
பார்த்துப் பார்த்து இருக்கையிலே
பாதியிலே உடைந்ததடா
பாழும் நெஞ்சு கொதிக்குதடா!

எம். நிரஞ்சலாதேவி-மொனராகலை.

#### கல்வி சீர்த்திருத்தம்

சீர்திருத்தமென்று
வரலாறுகள் மாற்றியபின்
இந்த தலைமுறைக்கு
தெரியுமா நாட்டின்
வரலாறு....?

எஸ்.பி. பாலமுருகன்-பதுளை.

#### யாரை நம்புவது

மரம் விட்டு மரம் தாவும்
மந்தியைப் போன்று
மனம் விட்டு மனம் வைத்துப்
பேசும் மனிதர்களை நம்பாதே.

எஸ். நடேஸ்-ஈச்சிலம்பற்று

#### தூதுவர்கள்

தாய் தந்தையரை இழந்து
அநாதையாகி விட்ட நாம்
உதவிக் கரம் நீட்டும்
பிஞ்சுகள் அல்ல:
சமாதானத்தின் பால்
நாட்டை ஈர்த்தெடுக்கும்
எதிர்கால தூதுவர்கள்.

ஓ. ஸப்ரான் ஜலீலா-பொலன்னறுவை.

#### நேரமெடுங்கள்

சின்னஞ் சிறுசுகளே!
விளையாடி மகிழ்ந்திட
மட்டுமன்றி
சிந்தனை செய்யவும்
நேரமெடுங்கள்!

அ. யாழினி-மட்டக்களப்பு.

#### ஆர்வம்

பிரச்சனைகளை ஊதித்தள்ளுவோமென
இப்பொழுதே கங்கணமா அல்லது
வாழ்வின் நிலையாமையைக் கண்டுரை
சந்தர்ப்பமிது என்ற அவாவா?

ச. ஜெகதீஸ்வரன்-நாவலப்பிட்டி.

## வாசக[ர்] சாலை

### அமெரிக்காமீதான தாக்குதல் அனைவருக்கும் ஒரு பாடம்

முரசே!

அமெரிக்காமீது தொடுக்கப்பட்ட சற்றும் எதிர்பாராத தாக்குதல் உலகையே அதிரவைத்துள்ளது. அமெரிக்காவை எதிரியாகக் கருதி அந்நாட்டை அச்சுறுத்த நினைத்தவன் எவனோ, அவன் எதிரி நாட்டுக்குள்ளேயே ஊடுருவி அந்நாட்டின் சாதனங்களைத் தனது திட்டத்துக்கு அனுசரணையாக்கி, அந்நாட்டுக்குச் சொந்தமான விமானங்களையே ஆயுதமாகப் பயன்படுத்தி, ஒரே நிமிடத்தில் சர்வநாசத்தை ஏற்படுத்தியிருக்கிறான்.

சந்திர மண்டலத்திலேயே முதன்முதலில் காலடிவைத்த பெருமைக்குரிய நாடு வெட்கித் தலை குனியும் அளவு இந்த விபரீதத்தை விளைவித்திருக்கிறான். பலப்பல நவீன ஏவுகணைகளையும் ஏன் அணுகுண்டையுமே முதன் முதலில் உற்பத்தி செய்து உலகையே அச்சுறுத்திய அமெரிக்காவை மிக அற்பத்தனமாக எள்ளி நகையாடக்கூடிய வகைக்குச் சிறுமைப்படுத்தி விட்டான்.

இன்றைய உலகிலேயே ஒரேயொரு வல்லரசென நிமிர்ந்து நின்ற செல்வச் சிறப்புப் பெற்ற நாடு சிறுமைப்பட்டுப் போய் நிற்கிறது.

அமெரிக்காமீது இன்று விழுந்துள்ள பேரிடி சர்வஉலகத்துக்குமே ஒரு பெரும் சவாலாகும். வல்லவனுக்கு வல்லவன் என்றும் தோன்றாமல் போய்விட மாட்டான் என்பது இதனால் உறுதி செய்யப்பட்டுவிட்டது. இனிமேல் எந்த நாடும் அமெரிக்காவைக் கண்டு பயப்படப் போவதில்லை. அந்நாட்டின் ஆதிக்கம் ஆட்டம் கண்டுவிட்டது.

அந்த நாட்டுக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலை, மனித குலத்துக்கு மட்டுமல்ல, 'தாங்கள் தான் பெரியவர்கள்; மற்றவர்களெல்லாம் தங்களைப் பணிந்து போக வேண்டும்' என்று கருதுபவர்கள் அனைவருக்கும் ஒரு பெரும் பாடமாகும்.

எம். ஈஸ்வரராசா, திருகோணமலை.

### மின்வெட்டு நீங்க...!

முரசே,


தொடரும் மின் வெட்டினால் இன்று மக்கள் படும் தொல்லை சொல்லும் தரமன்று. வாழ்க்கையில் சகல தரப்பினரும் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகி விடுகின்றனர்.

பாரிய அணைகளைக் கட்டி, நீர் தேக்கி வைத்து அதன் மூலம் மின் சக்தி பெறப்படுகிறது. ஒருவருடம் போதுமான அளவு மழை பெய்தால், அடுத்த வருடம் மழைகுறைந்து, நீரேந்து பகுதிகளில் வரட்சி ஏற்படுகிறது.

மின்வெட்டு அவசியம் என்ற நிலை ஏற்படும்போது மட்டும் 'புதிய முறைகளைக் கையாள வேண்டும்' என்று கொக்கரிக்கும் மின்சார சபையினர், மழை பெய்யத் தொடங்கி, அணைகள் நிரம்பி, மின் வலு போதுமான அளவு கிடைக்கும் போது, மீண்டும் மழை பொய்க்கும் காலம் வரும் என்பதை மறந்து போய்விடுகிறார்கள். இந்த நிலை மாறி மின்சாரம் நிரந்தரமாகக் கிடைப்பதற்கு வழி காண வேண்டும்.

இனிமேலாவது முன்கூட்டியே ஏற்பாடுகளைச் செய்வார்களா?

வி. பரமானந்தன், காரைதீவு.



தேனிலும் இனிய முரசே!

வாரம் ஒருமுறை மலர்ந்து வாசகர் இதயத்தில் இடம் பிடித்த இனிய முரசே! உன் இனிய சேவையை என்னால் பாராட்டாமல் இருக்கவே முடியாது. 'தேன் கிண்ணம்' 'அனிதாவின் காதல்கள்', 'பாப்பா முரசு', 'வாசகர்சாலை' இவை அனைத்தும் என்னை மட்டுமன்றி பல இதயங்களையும் கொள்ளைகள் கொண்டுள்ளன. அதிலும் 'உங்கள் பக்கம்' அனைவருக்கும் பயனுடையதாக உள்ளது. முரசே, உனது இனிய பணி மேலும் மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

பி. யசோதினி, நெடுந்தீவு-02.

தமிழ் மக்களிடத்தில் தனியான வரவேற்பை பெற்றுள்ள முரசே!

உன்னில் வரும் எம்.பி.எம். பர்ஸானின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'மதி', 'இராஜதந்திரி'யின் அரசியல் கட்டுரைகள், நாட்டில் ஏற்படும் அரசியல் மாற்றங்களை துல்லியமாக எடுத்துரைக்கின்றன. மற்றும் 'அதிரடி அய்யாத்துரை', 'தகவல் பெட்டி', 'ஸ்போர்ட்ஸ்', 'இலக்கிய நயம்', 'சிந்தியா பதில்கள்', 'சினி விசிட்' ஆகியன வித்தியாசமாக அமைகின்றன.

பி. ரெங்கநாதன். அசோக்குமார், டிக்கோயா.

### அறிவித்தல்

உங்கள் கரம்சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

## உங்கள் பக்கம்

### மற்றொரு தற்கொலைக்கு முன்னர்...

பசறை கல்வி வலயத்தில் உள்ள பிரபல தமிழ் வித்தியாலயம் ஒன்றில் ஆசிரியர்களது ஒழுங்கீனமான நடவடிக்கைகள் குறித்து மாணவர்களும் பெற்றோரும் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இந்த பாடசாலை ஆசிரியர்களினதும் அதிபரதும் முறைகேடுகள் குறித்து பிரதேசத்தில் உள்ள பொறுப்பு வாய்ந்த கல்வித் துறை அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தபோதும், இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இங்கு ஆசிரியர்கள் மாணவர்களை தவறான வழியில் இட்டுச் செல்வதாக தமிழ் தேசிய பத்திரிகைகள் இதற்கு முன்னரும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் இருவர் தோளில் கைபோட்டு நடந்ததற்காக வகுப்புக்கு அனுமதிக்காது அவர்களை வெளியேற்றிய ஆசிரியர் ஒருவர் குறித்து முறையிடச் சென்ற மாணவனின் தாய் பாடசாலையில் வைத்து அதிபரினால் தரக்குறைவான வார்த்தைகளால் தூஷிக்கப்பட்டுள்ளார். சில ஆசிரியர்களின் தவறுகளை மூடி மறைக்க அதிபர் பெரும் பிரயத்தனம் மேற்கொள்வதை அவதானிக்க முடிகிறது.

கடந்த காலங்களில் இந்தப் பாடசாலையில் ஆசிரியர்கள் மாணவிகளை காதலிப்பதும், ஆசிரியைகளுக்கு திருமணயோசனை சமர்ப்பிக்கும் இடங்களாக வகுப்பறைகளை பயன்படுத்துவதும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

இது தவிர இந்தப் பாடசாலை அதிபரின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் குறித்து பலர் விசனம் தெரிவித்துள்ளனர். இந்த பாடசாலையில் ஆங்கிலப்பாடத்துக்கென ஆசிரியர்கள் போதுமான அளவு இருக்கும் போது, தனது உறவினரான ஒருவரை வேறு பாடசாலையில் இருந்து மாற்றம் செய்து எடுத்துள்ளார். அத்தோடு கொடுப்பனவுகள் கிடைக்கும் சில கல்விச் செயற்பாடுகளை தனது உறவினருக்கு மாத்திரம் பெற்றுக் கொடுக்கும் போக்கையும் இந்த அதிபர் கடைபிடித்து வருகின்றார். இதற்கான சான்றுகள் பல உள்ளன.

மலையகக் கல்வி நிலைமை குறித்து ஆழமான ஆராய்ச்சிகள் அவசியமில்லை. வளப்பற்றாக்குறையும் புறக்கணிப்புக்களும் தொடரும் இன்றைய சூழ்நிலையில் இத்தகைய அதிபர் ஆசிரியர்களினால் நிலைமை இன்னும் மோசமாவதைத் தவிர எவ்வித பலனும் கிடையாது.

அண்மையில் தலவாக்கலையில் நடைபெற்ற துரதிஷ்டவசமான சம்பவத்தை போன்ற எதுவும் பசறையிலும் நடைபெற்று விடக்கூடாது என்பதே எமது விருப்பம்.

இந்த பாடசாலையின் செயற்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள்

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

# ஐந்தாம் திகதிக்குள் அரசியலமைப்பு பேரவை அமைக்க நடவடிக்கை

# தமது யோசனைகளில் 75 சதவீதம் நிறைவேறியிருப்பதாக கூறுகிறார் ரணில்

**க**டந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்களை நியமிக்கும் சட்ட மூலத்தின்படி அரசியலமைப்பு பேரவை எதிர்வரும் 5ம் திகதிக்கு முன்னர் அமைக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலத்தின்படி 4 ஆணைக் குழுக்களையும் அமைக்கும் பொருட்டு 10 பேர் கொண்ட அரசியலமைப்பு பேரவை ஒன்று நிறுவப்படவேண்டும். இதில் 3 சிறுபான்மை உறுப்பினர்களும் இடம்பெறுவர். இந்தப் பேரவையினாலேயே ஆணைக்குழுக்கான அங்கத்தவர்கள் சிபார்சு செய்யப்படுவார்கள்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, 5ம் திகதிக்குள் அரசியலமைப்பு பேரவை நிறுவப்படும் என்றும் அதன் பின்னர் ஆணைக்குழுக்களை அமைக்கும் பணியை அந்தப் பேரவை மேற்கொள்ளும் எனவும் கூறினார்.

இது தொடர்பாக செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் கருத்துத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது:-

அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் காணப்பட்ட இணக்கப்பாட்டுக்கு முரணான வகையிலேயே ஜே.வி.பி.யும் அரசும் சேர்ந்து முன்வைத்த யாப்புத் திருத்த யோசனைகள் அமைந்திருந்தன. இதன் காரணமாகவே முதலில் நாம் ஆதரவளிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

திங்கட்கிழமை நண்பகல் வரை அரசு தன் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள முன்வரவில்லை. அதன் கார்ணமாகவே வாக்களிப்பிலிருந்து ஒதுங்கியிருப்பது குறித்து ஆலோசித்தோம். ஆனால் நண்பகலுக்குப் பின்னர் அரச தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட கலந்தாலோசனை காரணமாகவும் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட கூட்டு எதிர்க் கட்சிகளால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட யோசனைகளில் 75 வீதமானவற்றுக்கு அரசு உடன்பட முன்வந்தது. இந்தத் திருத்தங்களுக்கு அரசு தரப்பில் உடன்பட்டதன் காரணமாக திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிப்பது என முடிவு செய்தோம்.

மீதமுள்ள 25 சதவீத யோசனைகளை நிறைவேற்றிக் கொள்வது குறித்து அடுத்தடுத்து நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

அக்டோபர் 5ம் திகதி அரசியலமைப்பு பேரவைக்கும், அதனூடாக அமைக்கப்படவுள்ள நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் உறுப்பினர்களை நியமிப்பதில் நான் எந்த விதமான பாரபட்சமும் காட்டப் போவதில்லை. அவை சுயாதீனமாக இருக்க வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும். அதே போன்று அரசும் பாரபட்சமின்றிச் செயற்படுமென்றே நாம் எதிர்பார்க்கிறோம்.

இந்தளவு விரைவாக சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடனான உறவை முறித்துக் கொண்டதுதான் பிரதான காரணமாக அமைந்தது. முஸ்லிம் காங்கிரஸ் விலகிக் கொண்டதன் மூலம் அரசு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இழந்ததன் விளைவே அரசு அவசரப்படக் காரணமாக அமைந்தது.

தமிழ்க் கட்சிகளும், சிஹல உறுமயவும் ஆணைக்குழுக்கள் அமைவதை எதிர்க்கவில்லை. அவர்கள் தங்களின் வேறு நிலைப்பாடுகள் காரணமாகவே வாக்களிக்க முன்வரவில்லை. அவர்களைப் பொறுத்தவரை நியாயமாகவே படுகின்றது.

ஆணைக்குழுக்கள் நீதியான முறையில் இயங்குவதற்கான வழிவகைகளை நாம் ஒன்றுபட்டு முன்னெடுக்க வேண்டும்.

சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட்டவுடன் தற்போதைய தேர்தல் ஆணையாளர் மாற்றப்பட்டு ஆணைக் குழுவினால் புதிய ஆணையாளர் நியமிக்கப் படுவார். ஆனால் நீதிச்சேவை ஆணைக்குழுவைப் பொறுத்தவரை பிரதம நீதியரசர் தொடர்ந்து இயங்குவார். ●

## கிழக்கில் திலீபன் நினைவுதின நிகழ்ச்சிகள்

இந்தியப்படையினருக்கு எதிராக உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த திலீபனின் நினைவையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத பிரதேசங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. இப்பகுதிகளில் வீதிகள் தோறும் சோடனைகளும் பதாகைகளும் தொங்கவிடப் பட்டுள்ளன. திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்துவதைக் காணமுடிகின்றது.

திலீபனின் நினைவாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை அரசியல் பிரிவு விடுத்துள்ள பிரசுரத்தில், விடுதலைப் போராட்ட வரலாற்றில் எமது போராளிகள் ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும் தாங்கி அளப்பரிய சாதனைகளையும், அர்ப்பணிப்புக் களையும் செய்திருக்கிறார்கள்.

ஆனால், திலீபன் ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும் இந்திய அரசிடம் ஒப்படைத்துவிட்டு ஆயுதங்களற்ற நிலையிலும் மண்ணுக்காக,மக்களுக்காகத் தன்னை அணு அணுவாகச் சித்திரவதைக்குள்ளாக்கிப் பாரத அரசு கற்பித்த அஹிம்சைப் போரில் தன்னை ஆகுதியாக்கிவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனிநபர் நம்பிக்கையில்லா பிரேரணை
### சபாநாயகரிடம் சமர்ப்பிப்பு

**அ**ரசாங்கத்துக்கு எதிராக தனி நபர் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்கவின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் ஒரு ஷரத்து மாத்திரமே இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட 80 உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு முன்னதாக இது சபாநாயகரிடம் சமர்பிக்கப்பட்டுவிட்டது.

இவ்வாறான தனிநபர் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை அவசரமாக சமர்ப்பித்ததன் நோக்கம் தெளிவுபடுத்தப்படாத போதும் ஏதேனும் ஒரு அரசியல் தந்திரோபாயமாகவே இது நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ●

## 'போலியோ' போர் நிறுத்தம் மீறப்பட்டதாக
### வழமைபோலவே இம்முறையும் பரஸ்பரம் குற்றச்சாட்டு

**இ**ளம்பிள்ளை வாதத் தடுப்பு சொட்டு மருந்து வழங்கும் தினத்தன்று கடைப்பிடிக்க ஒப்புதலளித்திருந்த யுத்த நிறுத்தத்தைப் புலிகள் மீறியுள்ளதாகப் படையினர் குற்றம் சாட்டுகின்ற அதேவேளை இவ்வாறான குற்றச்சாட்டை படையினர் மீது புலிகளும் சுமத்தியுள்ளனர்.

இம்மாதம் 22ம் திகதி போலியோ மருந்தை வடக்கு கிழக்கிலுள்ள சிறார்களுக்கு வழங்குவதற்காக அன்றைய தினமும் அதற்கு முந்திய நாளும் யுத்த நிறுத்தத்தை இரு தரப்பும் கடைப்பிடிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. யுனிசெப் அமைப்பு இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தது.

எனினும் யுத்த நிறுத்த தினங்களில் வடக்கு கிழக்கின் வெவ்வேறு இடங்களில் சில தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு-கிண்ணையடியில் 21ம் திகதி பகல் இடம் பெற்ற மிதி வெடிச் சம்பவத்தில் பந்துல பத்மசிறி (31) என்ற படைவீரர் தனது வலது காலை இழந்தார். மேலும் 2 படையினர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் முகமாலை முன்னரங்க பாதுகாப்புப் பகுதிகளில் 21ம் திகதி மாலை 4.30 மணியிலிருந்து சுமார் 2 மணித்தியாலங்களாகப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகப் படையினர் தெரிவித்துள்ளனர். சென்ற ஆண்டும் போலியோ சொட்டு மருந்து வழங்கலுக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் மீறப்பட்டது என்று பரஸ்பரம் இரு தரப்பினரும் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

## கணவன் முன்னால் மனைவி சுட்டுக்கொலை
### இலங்கை தமிழ் பெண்ணுக்கு கனடாவில் நேர்ந்த கதி

**க**டந்த வாரம் கனடாவில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற இரு சம்பவங்களில் ஒரு குடும்பப் பெண்ணும், ஒரு இளைஞனும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சென்ற 16ம் திகதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சரவணன் யோகராஜா என்ற 24 வயது வாலிபர் கனடாவில் வைத்து இனந் தெரியாத பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த 21ம் திகதி இரவு-கனடா-ஸ்காப்ரோவில் முகமூடியணிந்த ஆயுத பாணிகள் பெண்ணொருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். இவர் யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்தவராவார்.

'சேலைகளின் சோலை' என்ற தமது ஜவுளிக் கடையிலிருந்து கணவனும் மனைவியும் திரும்பிக் கொண்டிருந்தபோதே வெள்ளை நிறவாகனமொன்றில் வந்தவர்கள் சிவமலர் (45) என்ற பிரஸ்தாப நபரை மாத்திரம் இலக்கு வைத்துச் சுட்டுக் கொன்றுள்ளனர். இச்சம்பவங்கள் தொடர்பாக கனேடியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கனடாவில் உள்ள இலங்கைத் தமிழ் சமூகத்தினரிடையே இடம் பெற்று வரும் கோஷ்டி மோதல்கள், சாதிப்பிரச்சனைகள், இயக்க மோதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. ■

## 'முழு ஊரும் சேர்ந்து எதிர்ப்புத் தெரிவியுங்கள்'
### படையினர் வேண்டுகோள்

**கி**ழக்கில் சிறுவர்களைப் பலாத்காரமாக புலிகள் பிடித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பெற்றோர் தம்பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தி படையினர் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர்.

"எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தில் உறுப்பினர்களின் தொகையில் பற்றாக்குறை தோன்றியிருப்பதால் பிள்ளைகளை கடத்துகின்றனர். பொதுமக்களாகிய நீங்கள் புலிகளுக்கு ஒரு போதுமே ஆதரவில்லை என்பது எமக்கும் தெரியும். புலிகள் முழு தமிழ் மக்களையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கிறனர். அத்துடன் கிழக்குப் பகுதியிலிருந்து இயக்கத்தில் சேர்த்துக் கொண்டவர்களையே வட பகுதி மோதல்களில் ஈடுபடுத்துகிறனர்.

அதனால் பயனற்ற இந்த யுத்தத்தினால் கிழக்குப் பிரதேசத்தின் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இறந்து போனது ஒரு சிறிய ரகசியமல்ல. அவர்கள் மீண்டும் இப்பொழுது கிழக்கில் உங்கள் பிள்ளைகளைக் கடத்திச் செல்லத் தொடங்கியுள்ளனர். எனவே உங்களின் பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். பிள்ளைகளைக் கடத்திச் செல்லவரும் வேளையில் முழு ஊரும் சேர்ந்து புலிக்கு எதிர்ப்புத் தெரிவியுங்கள்.

உங்கள் அனைவரையும் புலிகளால் கொன்றுவிட முடியாது. சிலர் புலிகளுக்குப் பயந்திருக்கலாம். ஆனால் நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து புலிகளுக்கு எதிராக எழுந்தால் அவர்களால் எதுவுமே செய்ய முடியாது. புலிகளது அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயல்படக் காலம் வந்துள்ளது. உங்களின் பிள்ளைகளை படுகொலைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை நாம் தருகிறோம்" இவ்வாறு படையினர் விநியோகித்துள்ள 'உங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்' என்ற அந்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ■

## இருபாலை அமுக்கவெடி சம்பவத்தில்
### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் பரிதாப மரணம்

**யா**ழ். கோப்பாய் தெற்கு பகுதியில் ஆட்டோவொன்று அமுக்க வெடியில் அகப்பட்டதனால் அதில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் மரணமடைந்தனர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அமுக்கவெடியில் சிக்கி மரணமான குடும்பத்தினர் இருபாலையைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து விமானம் மூலம் கொழும்பு புறப்படும் நோக்கத்துக்காக யாழ். ரயில் நிலைய கட்டடத்தில் இயங்கும் நிருவாக அலுவலகத்துக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இப்பரிதாப முடிவு ஏற்பட்டுள்ளது.

இருபாலையிலிருந்து அதிகாலை வேளை ஆட்டோவொன்றை வாடகைக்கு அமர்த்திய இவர்கள் கட்டைப்பிராய், குருக்கண்டி ஒழுங்கை வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது அமுக்கவெடி வெடித்துள்ளது.

அமுக்க வெடிச் சத்தம் அப்பிரதேசத்தையே அதிர வைத்துள்ளது. ஆட்டோ வண்டி சுக்கு நூறாகியதுடன் அதில் சென்றோர் நாலாபுறமும் தூக்கி வீசப்பட்டனர். கொல்லப்பட்ட இருவரின் உடல்கள் அடையாளம் காண முடியாதபடி உருக்குலைந்துபோயுள்ளன. மேலும் இருவரின் உடல்கள் யாழ்.வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. அமுக்கவெடித் தாக்குதல் நடந்த இடம் யாழ். நகரிலிருந்து சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அவ்விடத்தில் மூன்று அடி ஆழமான குழி ஏற்பட்டுள்ளது.

குமாரசாமி ராஜேந்திரன் (52 வயது-தந்தை), தெய்வநாயகி (47 வயது-தாய்), திருமதி பிருந்தா கமலேஸ்வரன் (19 வயது -மகள்), கிருபா (15 வயது-மகள்), அரியரட்ணம் கமலேஸ்வரன் (26 வயது-மருமகன்), பிரியவதனி (1 வயது-பேத்தி) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

ஆட்டோ சாரதியான இரு பாலையைச் சேர்ந்த முத்துலிங்கம் சதீஸ்வரன் (35 வயது) படுகாயங்களுடன் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆட்டோவின் சில பகுதிகள் மரம் ஒன்றில் தொங்கிக் காணப்பட்டன.

கொழும்பு-13, ஆட்டுப்பட்டித் தெருவில், 248/1 இல் இருக்கும் அரியரட்ணம் கமலேஸ்வரனின் வயோதிபப் பெற்றோரை பார்வையிடுவதற்காகவே இந்த குடும்பத்தினர் கொழும்பு செல்ல இருந்தனர் எனவும் கனடா செல்ல ஆயத்தங்களை மேற்கொண்டதாகவும் இருவேறு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மரண விசாரணைகளையடுத்து சடலங்கள், இறந்தவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில்,

புத்தூர்-யாழ்ப்பாணம் வீதி இருபாலைப் பகுதியில் விடுதலைப்புலிகளால் வெடிக்க வைக்கப்பட்ட சக்திமிக்க குண்டில் ஆட்டோ ஒன்று சிக்கியதில், யாழ்ப்பாணம் நோக்கி பயணம் செய்த ஏழுபேர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## பதுளை மாவட்டத்தில் வரட்சி நிவாரணம் இல்லை

**ப**துளை மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படுவதாக பதுளை மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்தபோதும், எந்தவொரு தொழிலாளருக்கும் நிவாரணம் வழங்கப்படவில்லையென தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர் உள்ளிட்ட 29 ஆயிரம் குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்படுவதாகவும், தொழில் இல்லாதிருக்கும் தொழிலாளர் குடும்பங்களுக்கு 600 ரூபா முதல் 1200 ரூபாவரையிலான உலருணவு நிவாரணம் வழங்கப்படுவதாகவும் பதுளை அரசாங்க அதிபர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பதுளை பகுதி தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள எந்தவொரு தொழிலாளிக்கும் நிவாரணம் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்தனர். ●

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்களுக்கு
### பாதுகாப்புக்கு விசேட கமாண்டோக்கள்!

**வி**மானங்களை கடத்தி அவற்றை பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது தொடர்பான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதையடுத்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானங்களில் கமாண்டோ படையினரை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் 4 விமானங்கள் கடத்தப்பட்டு பாரியநாசகார முயற்சிகளுக்கு பயன்படுத்தப்பட்டதையடுத்தே இது குறித்து கவனம் செலுத்த நேரிட்டதாகவும் விமான நிலையம் மீதான எல்.ரீ.ரி.ஈ. தாக்குதலை தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும்,

கத்தி, கத்திரிக்கோல் போன்ற சிறிய ஆயுதங்கள் கொண்டே அமெரிக்காவில் விமானங்கள் கடத்தப்பட்டதால் ஸ்ரீலங்கன் விமானங்களில் கத்தி, கத்தரி போன்றவற்றின் பாவனையை நிறுத்தி பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'காமாண்டோ' படை வீரர்களை விமானங்களில் சேவையில் ஈடுபடுத்துவது குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்த நிறுவனம் உத்தேசித்துள்ளது.

தலிபானுக்கு எதிராக பாரிய தாக்குதலொன்றை நடத்த அமெரிக்கா தயாராவதால் ஆப்கான் நாட்டவர்கள் இலங்கைக்கு வருவதை தடுக்கவும் விமான நிலையத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ●

## தீவிர கண்காணிப்பு

**ம**ட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஈச்சந்தீவுப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலின் பின்னர் அந்தப் பகுதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு அதுவழியாக போக்குவரத்து செய்வோர் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றனர்.

இந்தப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் புலிகளின் கிழக்குப் பிராந்திய வீடியோ பிரிவின் முக்கியஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். ■

## கடற்படையுடனான மோதலில் தமது தரப்பில்
### மூன்று பேர் பலியானதாக புலிகள் அறிவிப்பு

**மு**ல்லைத்தீவு கடற்பரப்பில் ஞாயிற்றுக்கிழமை காலை கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற கடும் சமரில் கடற்படையினரின் அதிவேக டோரா பீரங்கிப் படகொன்றும், கடற்புலிகளின் நான்கு படகுகளும் அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு நகருக்கு வடக்கே சுமார் 57 கி.மீ. தூரத்தில் ஞாயிறு காலை 10 மணியளவில் இந்தச் சமர் நடைபெற்றுள்ளது.

இந்த சம்பவம் குறித்து 'புலிகளின் குரல்' வானொலி தெரிவிக்கையில்;

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின் டோராப் படகுகளை வழிமறித்துக் கடற்கரும்புலிகளும், கடற்புலிகளும் கடும் தாக்குதலைத் தொடுத்துள்ளனர்.

டோராப் படகுகள் மீது புலிகள் கடும் தாக்குதல்களைத் தொடுத்தபோது கடற்படையினருக்கு உதவியாக, காங்கேசன் துறை மற்றும் திருகோணமலைத் துறை முகங்களிலிருந்து மேலதிக கடற்படைப் படகுகள் சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதியை வந்தடைந்து தாக்குதல் நடத்தின.

இவர்களுக்கு உதவியாக கிபீர் விமானங்களும் குண்டுத் தாக்குதலை நடத்தின.

இந்தச் சமரில் கடற்கரும்புலிகளின் தாக்குதலால் இரு டோராக்கள் பலத்த சேதமடைந்தன. அத்துடன், இவற்றிலிருந்து 11க்கும் மேற்பட்ட கடற்படையினரும் உயிரிழந்துள்ளனர்.

இதன் போது கடற்புலிகளின் படகொன்று இயந்திரக் கோளாறு காரணமாகப் பழுதடைந்துவிடவே அதனைக் கடற்புலிகள் தகர்த்து மூழ்கடித்துள்ளனர்.

இந்தச் சமரில் கடற்கரும்புலிகளான மேஜர் நல்லமுத்து அல்லது சிவாகரன் (கார்த்திகேசு செந்தில்குமார்-வவுனியா), கப்டன் பொய்மகள் (முத்துலிங்கம் யசோதா-உடையார்கட்டு), கடற்புலியான மேஜர் திருமலை உருத்திரசிங்கம் (ரவிநந்தன்-யாழ்ப்பாணம்) ஆகிய மூவர்களப்பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அன்றைய தினம் மாலை தென்மராட்சிப் பகுதியில் புலிகள் படையினரின் நிலைகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தியதில் ஒரு அதிகாரி உட்பட மூன்று படையினர் கொல்லப்பட்டதுடன், 7 படையினர் படுகாயடைந்துள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. ■

# முரசம்

## தமிழ்க்கட்சிகளின் கவனத்திற்கு....

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கவும் அவற்றிக்கான உறுப்பினர்களை பிரேரிக்கும் அரசியலமைப்பு பேரவை ஒன்றை நிறுவவும் இலங்கைப் பாராளுமன்றம் கடந்த திங்கட்கிழமை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அங்கீகாரம் வழங்கியது.

225 உறுப்பினர்களில் 210 பேர் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.
13 பேர் அச்சமயம் சபையில் இருக்கவில்லை.
சிஹல உறுமய பிரதிநிதி வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்த ஆணைக்குழுக்களின் உள்ளடக்கத்தில் ஒரு சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டாலும்கூட பொதுவான நோக்கில் இது மிகச் சிறந்ததொரு முன்னேற்றப்படி.

இந்த பிரேரணையின் பிரகாரம் பொலிஸ், நீதி, பொதுச் சேவை மற்றும் தேர்தல் தொடர்பான விடயங்களைக் கையாள சுயாதீனமான ஆணைக்குழுக்கள் நிறுவப்படும்.

இன்றோ நாளையோ அதிகாரத்தை கைப்பற்றி விடலாம் என்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சிகூட தமது அரசியல் எதிர்த்தரப்பான பொதுஜன ஐக்கிய முன்னணியினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரிக்கிறதென்றால் இந்த சட்டமூலம் தவிர்க்க முடியாத ஒரு ஜனநாயக மறுசீரமைப்பு திட்டம் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் எதிர்ப்பதைத் தவிர வேறெதனையும் அறியாத தமிழ்க்கட்சிகள் இதையும் எதிர்த்து வெளிநடப்பு செய்தன.

மேற்சொன்ன நான்கு துறைகளும் சுயாதீனமாக செயற்படும் போது அதன் பயனை தமிழ் மக்களும் சேர்ந்துதான் அனுபவிக்கப் போகிறார்கள்.

அரசியல் காரணங்களுக்காக எவரையும் பழிவாங்க முடியாத நிலை தோன்றுவதில் சிங்கள மக்களுக்கு மாத்திரம்தான் நன்மை என்றில்லை!

விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களுக்கு விமோசனம் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்பைக் கூட சுயாதீன பொலிஸ், நீதிச் சேவை ஆணைக்குழுக்கள் மூலம் பெற முடியும்!

இப்படியிருக்க தமிழ்க்கட்சிகள் இதனை எதிர்த்ததன் நோக்கம் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கிறது!

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து இதேபோன்று அதனையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறச் செய்யும் பொறுப்பு தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு இருக்கிறது!

'நாம் எல்லாவற்றையும் எதிர்த்து வெளிநடப்பு செய்து விட்டு எமக்கு ஏதாவது கிடைக்கும் போது மட்டும் எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் அமர்ந்து ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது'

இந்த யதார்த்தத்தை தமிழ்க் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும்!

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நன்னடத்தை சவால்கள்
# ஜே.வி.பியின் சங்கடம்

திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு 17ஆவது திருத்தச் சட்டம் மீதான வாக்கெடுப்பு நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. 7 மணிக்கு பின்னர் கூட ஐக்கிய தேசியக்கட்சி இறுதி முடிவெதனையும் எடுத்திருக்கவில்லை. அதனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இந்த சட்ட மூலத்தை நிறைவேற்ற முடியாமல் போகலாம் என்ற சந்தேகம் இறுதி நேரம்வரை காணப்பட்டது. ஆனால் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை வாக்கெடுப்பின்போது ஆதரவாக புள்ளடியிட்டார்கள்.

உத்தேச சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பான பிரேரணை ஏதோ ஒரு கட்டத்தில் கைவிடப்படும் என்றே ஆரம்பம் முதல் எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறெனினும் அனைத்து எதிர்வு கூறல்களையும் பொய்யாக்கிவிட்டு 210 வாக்குகளால் பிரேரணை நிறைவேறியது. இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் இது மிக முக்கியமானதொரு திருப்புமுனை என்பதில் சந்தேகமில்லை. ஜே. ஆர். ஜயவர்தனவின் எதேச்சதிகாரமான பாராளுமன்ற நிருவாகத்தின் பின்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் முக்கியமானதொரு திருத்தம் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தின்படி நான்கு சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைக்கப்படும். இந்த ஆணைக்குழுக்களுக்கு ஆட்களை தெரிவு செய்யும் அரசியலமைப்பு சபை ஒன்றும் நிறுவப்படும். அரசியலமைப்பு சபைக்கு உறுப்பினர்களை பிரேரிப்பது தொடர்பிலேயே அரசாங்கத்துக்கும் ஐ.தே.க.வுக்கும் இடையில் இழுபறி நிலை காணப்பட்டது. இறுதியில் எதிர்க்கட்சிகளின் திருத்தங்களையும் ஏற்றுக் கொண்டதன் பின்னர் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இதன்படி நன்னடத்தை அரசாங்கம் குறித்த ஜே.வி.பி.யுடனான ஒப்பந்தத்தில் உள்ள பிரதான கோரிக்கையின் பூர்வாங்கக்கூட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. இத்துடன் பிரச்சனை தீர்ந்துவிட்டதாகவோ கடந்த சில மாதங்களாக சூழலும் அரசியல் நெருக்கடி முடிவுக்கு வந்து விட்டதாகவோ கருதமுடியாது ஏனெனில் ஐ.தே.க. அதன் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியின் அடுத்த கட்டத்தையும் உடனடியாக ஆரம்பிக்கவிருக்கிறது.

நன்னடத்தை அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க ஐ.தே.க. தயாராகி வருகிறது. இந்த புதிய நம்பிக்கையில்லா பிரேரணையில் தமிழ்க்கட்சிகளும் கையொப்பமிட்டுள்ளன. உண்மையில் ஐ.தே.க.வை பொறுத்தவரையில் இரண்டாவது கட்டம் முன்னையதை விட கடினமாக இருக்கப் போகிறது.

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி 109 ஆசனங்களுடன் இருந்தபோது பாராளுமன்றத்தை ஒத்தி வைத்து நம்பிக்கையில்லா பிரேரணைக்கு முகம் கொடுப்பதை தவிர்த்து உயிரை பாதுகாத்துக் கொண்டது. இப்போது ஜே.வி.பி.யின் 10 பேரும் மேலதிகமாக அரசுக்கு ஆதரவு வழங்கும் நிலையில் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை திரட்டுவது இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை. எனினும் இதை கருத்தில் கொண்டு அமைதியாக இருக்கும் நிலையில் ஐ.தே.க. இல்லை. ஏனெனில் கட்சிக்குள்ளும், ஆதரவாளர்கள் மத்தியிலும் இப்போதே கடும் அதிருப்தி தோன்றியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஆணைக்குழுக்கள் அமைக்கப்படாமல் இருந்தால் ஒருவேளை அரசாங்கம் பாராளுமன்றத்தை கலைத்து விட்டு பொதுத்தேர்தலை நடத்தக்கூடிய வாய்ப்பிருந்தது. ஆனால் இனிமேல் அடுத்த ஒரு வருட காலம் வரை யாவது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சியில் நீடிக்கும் சாத்தியம் ஏற்பட்டிருக்கிறது.

எவ்வாறெனினும் இந்த சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படுவதில் பல நன்மைகள் இருப்பதை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். உத்தேச ஆணைக்குழுக்கள் 100 சதவீதம் சுதந்திரமாக செயற்படும் நிலையில் இல்லாவிட்டாலும்கூட தற்போது இருக்கும் மோசமான அரசியல் தலையீட்டை ஓரளவுக்கேனும்' கட்டுப்படுத்த இது உதவும்.

சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கவும் கண்காணிக்கவும் அரசியலமைப்பு சபை ஒன்றை நிறுவும் முறை நவீன ஜனநாயக மரபில் காணப்படும் ஒரு அம்சமாகும். 1990ம் ஆண்டு நேபாள நாட்டு அரசியலமைப்பில் இவ்வாறான சபை ஒன்று நிறுவப்பட்டது. இதன் பிரதான நோக்கு ஜனநாயக ரீதியிலான அமைப்புக்கள் அரசியல் மயப்படுத்தப்படுவதை தவிர்ப்பதுதான்.

தற்கால அரசியலமைப்பு உருவாக்கத்தில் காணப்படும் ஒரு பிரதான இலட்சணம் அந்தப் பணியில் அதிக அளவில் மக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதுதான். மக்கள் அமைப்புக்களுடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி அரசியலமைப்பு சீர்த்திருத்தங்களை செய்வது நவீன அரசியலமைப்புத்துறையில் காணப்படும் மிக முக்கியமானதொரு அம்சம். ஆனால் துரதிஷ்டவசமாக கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பான பிரேரணையின் பரிபூரண உள்ளடக்கம் குறித்து இந்த நாட்டு மக்களுக்கு போதியளவு தெளிவுபடுத்தப்படவில்லை.

இந்த செயற்பாட்டில் மக்கள் பங்களிப்பை ஓரளவுக்கேனும் பெற்றுக்கொள்ளும் பொருட்டு குறைந்த பட்சம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பி.யிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளையாவது உடனுக்குடன் வெளியிட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறான எதுவும் நடைபெறவில்லை.

எப்படியிருந்தாலும் ஜே.வி.பி.யினால் முன் வைக்கப்பட்ட பிரதான நிபந்தனை நிறைவேற்றப்பட்டாகிவிட்டது. அப்படியிருந்தும்கூட நன்னடத்தை அரசாங்கம் அதன் முன்னால் உள்ள சவால்கள் அனைத்தையும் வென்று விட்டதாக கூறிவிட முடியாது. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி நடத்த எதிரணியில் இருக்கும் ஜே.வி.பி. மக்களின் காவலனாக தம்மை அடையாளம் காட்டுகிறது. இது அரசாங்கத்தை பொறுத்தமட்டில் தர்மசங்கடமான விடயம்.

கல்வி அமைச்சின் கீழ் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானவர்கள் விடயத்தில் பெருவாரியான மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக ஜே.வி.பி. கடந்த வாரம் அரசாங்கத்தை குற்றஞ்சாட்டியதுடன் இந்த நிலைமை சீராக்கப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. இது வெற்றியடையுமாயின் ஜே.வி.பிக்கு மிகச் சிறந்த சாதகத் தன்மை ஒன்றை உருவாக்கிக் கொடுப்பது மாத்திரமன்றி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிராக குளவிக்கூடொன்றை குழப்பிவிட்டது போன்ற நிலைமைதான் உருவாகும். ஏனெனில் அமைச்சு மட்டத்திலான இத்தகைய ஊழல் மோசடிகளை தீர்க்கும் பணியை ஜே.வி.பி. பொறுப்பேற்குமாயின் முடிவே இல்லாத அளவு முறைப்பாடுகள் கிடைக்கும்.



நாவலப்பிட்டியில் ஐ.தே.க.வினரின் கூட்டம் ஒன்றை பொதுஜன ஐக்கிய முன்னணி காடையர்கள் சிலர் குழப்பினார்கள். இது தொடர்பில் நீதி பெற்றுத்தருமாறு ஜே.வி.பி. காரியாலயத்துக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதிலிருந்து தற்போதைய அரசியல் நிலைமையை ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

மறுபக்கத்தில் ஜே.வி.பி.யிற்கு சில சங்கடங்களும் இருக்கவே செய்கின்றன. அமைச்சரவை 20ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் பதவி இழந்த அமைச்சர்களும் முன்னைய சலுகைகளை அனுபவித்து வருவதாக கூறப்பட்டுள்ளது. இதனை கண்காணிப்பது இலகுவான காரியமல்ல. ஆனால் ஜே.வி.பி. செய்துதான் ஆகவேண்டும். அப்போதுதான் அமைச்சரவை குறைத்து பணத்தை மீதப்படுத்தி மக்களுக்கு பெற்றுக்கொடுத்த புகழ் அவர்களை சென்றடையும்.

இந்த அரசியல் குளறுபடியை ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து மிகவும் பரிதாபத்துக்குரியவர்கள் தமிழ்க்கட்சியினர்தான். 'ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும்' என்ற பெயரில் ஐக்கிய தேசிய கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தும் போது தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் ஜனநாயக சீர்திருத்த யோசனைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோது ஒரேயடியாக இனப்பிரச்சனை பற்றிய கவலையை வெளியிட்டு வெளிநடப்பு செய்தார்கள்.

**எம்.பி.எம். பர்ஸான்**

இதில் வேடிக்கை என்னவெனில் கடந்த காலங்களில் ஐ.தே.க. நடத்திய ஆர்ப்பாட்டங்களின் அதன் பிரதான கோஷம் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு ஜனநாயகம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதுதான். அங்கே எவரும் இனப்பிரச்சனையைப்பற்றி கதைக்கவில்லை. அப்போது ஐ.தே.கவுடன் சேர்ந்திருந்த தமிழ்க்கட்சிகள் கவலைக்கிடமான முறையில் வெளிநடப்பு செய்ய ஐக்கிய தேசியக் கட்சி சட்ட மூலத்துக்கு ஆதரவளித்தது. தமிழ்க்கட்சிகள் தனிமைப்பட்டன. தனக்குத் தேவையென்றால் ரணில் மீண்டும் தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுப்பார். இவர்களும் போய் மேடையில் பேசுவார்கள், ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணி சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்க முன்வந்ததன் மூலம் ஐ.தே.க.வின் கையில் இருந்த துருப்புச்சீட்டை செயலிழக்கச் செய்யும் அரசியல் தந்திரத்தை செயற்படுத்தியிருக்கிறது.

சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவி ஜனநாயத்தை நிலைநாட்ட ஐ.தே.க அரசொன்று உருவாக வேண்டும் என்றே அந்தக் கட்சி கூறிவந்தது. இப்போது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆணைக் குழுக்களை நிறுவியுள்ளது.

'இதை செய்யத்தானே நீங்கள் ஆட்சிக்கு வரத்துடித்தீர்கள். அதை நாங்களே செய்து விட்டோம்' என்பது போன்ற நிலையை உருவாக்கி விட்டுள்ளது. இனிமேல் இதிலுள்ள ஏதாவது குறைபாட்டை சுட்டிக் காட்ட முடியுமே தவிர ஆணைக் குழு அமைக்க வேண்டும் என ஐ.தே.க.வினால் கோஷமெழுப்பமுடியாது.

அத்துடன் இப்போதிருப்பது பழைய பொதுஜன ஐக்கிய முன்னணியில்லை ஜே.வி.பி.யுடன் சேர்ந்த புதிய அரசு. எனவே பழைய நம்பிக்கையீனங்களை இப்போது வெளியிடத் தேவையில்லை என்ற கருத்தை பரப்பும் முயற்சியும் மறைமுகமாக நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது.

இது ஐ.தே.க.வின் பழைய தந்திரங்களில் ஒன்றுதான். 1994ம் ஆண்டுக்கு முன்னர் டி.பி. விஜேதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது 'இது 17 வருடம் ஆட்சி செய்த பழைய ஐ.தே.க. அல்ல. இவர் நல்லவர் இப்போதிருப்பது புதிய தலைமை, புதிய கட்சி' என்று கூற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பிரேமதாச அரசாங்கத்தில் இருந்த இறுக்கமான பல கட்டுப்பாடுகளை தளர்த்திய டி.பி.விஜேதுங்க தன்னை ஒரு ஜனநாயக சீர்த்திருத்தவாதியாக காண்பிக்க முயற்சி செய்தபோதும் அதன் பின்னர் வந்த தேர்தலில் மக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியையே வெற்றிபெறச் செய்தனர்.

தற்போதைய அரசாங்கம் தலைமைத்துவத்தில் மாற்றம் செய்யாவிட்டாலும் புதிய கூட்டணியொன்று ஜே.வி.பி.யுடன் அமைத்துக்கொண்டு தன்னை புதுப்பொலிவுள்ள அரசாங்கமாக காண்பிக்க எத்தனிக்கின்றது. மக்கள் மத்தியில் இந்த அரசியல் தந்திரம் செல்வாக்குச் செலுத்துமா என்பதை தேர்தலொன்றின் மூலம் மாத்திரம்தானம் அறிய முடியும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து கோரிக்கைகளை வென்றெடுப்பதுடன் தமது புரட்சிகரமான போக்கின் தனித்துவத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய சவாலை ஜே.வி.பி. எதிர்நோக்குகின்றது.

நன்னடத்தை அரசாங்கத்தால் பதவி இறக்கப்பட்ட அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல் சக்திகள் ஐ.தே.க.வுடன் இணைந்துவிடாமல் பாதுகாக்கும் சவாலுக்கு அரச தரப்பு முகம் கொடுக்கின்றது.

அரசாங்கமும் ஜே.வி.பி.யும் இணைந்து வீசிய நன்னடத்தை சுழல் பந்திலிருந்து தனது விக்கெட்டை பாதுகாத்துக் கொண்டு வசதியான முறையில் 'புல்டோஸ்' பந்துகள் கிடைக்கும் எனக் காத்திருப்பதைத் தவிர ஐ.தே.க.வுக்கு வேறு வழியில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் துரதிஷ்டமோ என்னமோ நன்னடத்தை அரசாங்கத்தின் முதல் 15 ஓவர்களும் தாக்குதல் நடத்தும் வாய்ப்பில்லாத சுழல் பந்துகளாக அமைந்துவிட்டன.

ஆனால் ஆரம்ப ஓவர்கள் மாத்திரம் ஆட்டத்தின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதனால் நன்னடத்தை ஆட்டத்தின் வெற்றி தோல்வியை உறுதியாக நிச்சயிக்கும் நிலை இன்னமும் இல்லை. நடுவர்களாகிய மக்கள் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகளின் நெருக்குதலில் இருந்து தப்பிக்க 'நன்னடத்தையில்' ஈடுபடுவது இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கும் கதையாக இருக்கிறது என ஜனாதிபதி கருதும்பட்சத்தில் அனைத்து போட்டி விதிகளையும் புதிதாக எழுத வேண்டி ஏற்படும்!

# அண்டை மண்டலத்தில்..

கானகன்

ஒரு வழியாக ஜெயலலிதா முதல்வர் பதவியிலிருந்து இறங்கிவிட்டார். அவரது உடன்பிறவா சகோதரி சசிகலாவின் அக்காள் மகன் தினகரனுக்கு நெருக்கமானவராக கருதப்படும் பெரியகுளம் பன்னீர் செல்வம் புதிய முதல்வராக பதவியேற்றிருக்கிறார். ரிமோட் கன்ட்ரோல் எப்படி இயங்கும், எப்படியெல்லாம் பன்னீர் செல்வம் அவமதிக்கப்படுவார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அரசு இயந்திரம் இயங்குவது ஏறத்தாழ நின்றுவிடும், போயஸ்தோட்டமே தலைமைச் செயலகமாக இயங்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் புரட்சித்தலைவி அத்துடன் திருப்தி அடைந்துவிடமாட்டாரே .உச்சநீதிமன்ற தீர்ப்புவந்த மாலை ஆளுநரைச் சந்தித்து, புதிய தலைவரை அ.இ.அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சி தேர்ந்தெடுக்கும் என்று கூறிவிட்டு, வெளிவந்தவுடன் செய்தியாளர்களை சந்திக்கும்போதே, ஜெயலலிதா திட்டவட்டமாகக் கூறிவிட்டார்- இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான், டான்சி வழக்குகளில் வெற்றிபெற்று, தேர்தலில் நிற்கும் தகுதியினைப் பெற்று, போட்டியிட்டு, மீண்டும் முதல்வராகிவிடுவேன்.

டான்சி வழக்குக்களில் வெற்றி பெறாவிட்டால் என்னவாகும்? இல்லை, இழுத்துக் கொண்டே போகிறது விசாரணை, பொறுமையிழந்து ஜெயலலிதா என்ன செய்வார்? அவரளவிற்கு தீவிரமாக கருணாநிதி, ஸ்டாலின் மற்றவர்களை சிறையிலடைக்க பன்னீர்செல்வம் ஆர்வமாக செயல்படுவாரா? ஏகப்பட்ட கேள்விகள். விடைகள்தான் யாருக்கும் தெரியாது. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், டான்சிக்குச் சொந்தமான நிலங்களை, முந்தைய ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில், ஜெயா பப்ளிகேஷன்ஸ், சசி என்டர்ப்ரைசஸ் ஆகிய இரு தனியார் நிறுவனங்களுக்கு, சந்தை விலையைவிட குறைத்து விற்றதில் அரசுக்கு பல லட்ச ரூபாய் நஷ்டம் என்று வழக்கு தொடுக்கப்பட்டு, மொத்தம் ஐந்தாண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார் புரட்சித்தலைவி.

இரண்டாண்டுகளுக்கு மேல் ஊழல் வழக்கில் சிறைத் தண்டனை பெற்றால் ஒருவர் தேர்தலில் நிற்கும் தகுதியினை இழக்கிறார். அதன்படியே நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல்களில் அவருடைய வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ஆயினுங்கூட அவரது கட்சி மகத்தான வெற்றி பெற்றதை அடுத்து, அன்றைய ஆளுநர் ஃபாத்திமா பீவி அ.இ.அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சி ஜெயலலிதாவை தங்களது தலைவராகத் தேர்ந்தெடுத்ததை ஏற்றுக்கொண்டு, உடனடியாக அவரை முதலமைச்சராக நியமித்தார்.

அவ்வாறு நியமனம் செய்தது செல்லாது என ஒரு சிலர் உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கினைத் தொடர, ஐந்து நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் ஒன்று செப்டம்பர் 21ஆம் நாளன்று, அவர்களது வாதம் சரிதான், தேர்தலில் நிற்கும் தகுதியினையிழந்த ஒருவரை முதல்வராக்க முடியாது என்று தீர்ப்பளித்தது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 164 (4)ன் கீழ் சட்டமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவரை முதல்வராக நியமிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உண்டு. ஆனால் அவ்வாறு நியமிக்கப்படுபவர் ஆறுமாதங்களுக்குள் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இந்தப்பிரிவினைப் பயன்படுத்தியே பீவி ஜெயலலிதாவை ஆட்சி அமைக்க அழைத்தார். சட்டமன்ற உறுப்பினரல்லாத எவரையும் முதல்வராக்கலாமென்றால் மனநிலை சரியில்லாத ஒருவரை, 25 வயதுக்குட்பட்டவரை, வெளிநாட்டவரை, இப்படி எவரை வேண்டுமானால் முதல்வராக்கலாம் என்ற நிலைமை உருவாகிவிடும். அது நாட்டுக்கு பேரழிவை ஏற்படுத்தும் என்று தங்கள் தீர்ப்பில் நீதிபதிகள் கூறினார்கள்.

## ஜெயலலிதா பதவி இழந்தார்,


## புதிய முதல்வர் சசிகலா குடும்ப விசுவாசி

அரசியல் அமைப்புச் சட்டம் உருவானபோது, தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிடமுடியாமல் செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டதையும், ஆனால் அப்படிப்பட்டவர்களை மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எனவே அதற்காக தனி ஒரு சட்டம் தேவையில்லையென்று மேதை அம்பேத்கர் கூறியதையும் நீதிபதிகள் நினைவு கூர்ந்தனர்.

தவிரவும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளுக்கு எதிராக இருக்கும்வேளையில், அது மக்கள் தீர்ப்பானாலும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் அவர்கள் கூறிவிட்டனர். இனி எதிர்காலத்தில் இப்படி ஒரு சூழல் வராமல் இருக்க தேவையான சட்ட திருத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்றும் நீதிபதிகள் ஆலோசனை கூறினர். இந்தியாவில் மக்களாட்சி சந்தி சிரித்துக் கொண்டுதான் இருக்கிறது. எல்லா அமைப்புக்களும் செல்லரித்துப்போய்க் கொண்டிருக்கின்றன. நீதிமன்றம் ஒன்றும் சிறப்பாய் செயல்பட்டுவிடவில்லை. அரசியல் சூழலை அனுசரித்தே தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. ஆனாலும் நல்லவேளையாக இன்னமும் சரியோ, தவறோ நீதிமன்றத் தீர்ப்புக்களை அரசியல்வாதிகள் மதிக்கின்றனர், அல்லது மீறுவதற்கு தயங்குகின்றனர், அது லல்லுவாக இருந்தாலும் சரி, பால் தாக்கரேயாகவிருந்தாலும் சரி.

ஜெயலலிதாவும் மூச்சுவிடாமல், தீர்ப்பு வந்தவுடன் ஒதுங்கிக்கொண்டார். அவர் முரண்டுபிடித்திருந்தால் மத்திய அரசு தலையிட்டு சட்டமன்றத்தையே கலைத்து, குடியரசுத்தலைவர் ஆட்சியை அமுல்படுத்தியிருக்கும் என்ற பயம் என்பது வேறு. எப்படியோ தீர்ப்பு வந்த ஒரு சில மணி நேரங்களிலேயே புதிய சட்டமன்றக் கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டார்.

யார் இந்த பன்னீர்செல்வம்? இரண்டாண்டுகளுக்கு முன் நாடாளுமன்றத் தேர்தல்களில் பெரியகுளத்தில் தினகரன் போட்டியிட்டபோது அவருக்காக கடுமையாக உழைத்து, அவரிடம் நற்பெயர் வாங்கி, பின்னர் சசிகலா குடும்பத்தின் நம்பிக்கைக்குரியவரானவர் அவர். அதிக வசதியில்லாதவர். எளிமையானவர். ஒரு சில ஆண்டுகளில் கட்சியில் நன்கு வளர்ந்துவிட்டாலும்கூட ஆடம்பரம், படாடோபம் ஆகியவற்றை தவிர்த்து வந்தவர். கட்சியில் எந்த கோஷ்டிப்பூசலிலும் சிக்காதவர். தவிரவும் தேவரினத்தைச் சார்ந்தவர். ஜெயலலிதா தொடரமுடியாத, சசிகலா தண்டிக்கப்பட்டவர், தினகரன் மீதும்



அந்நியச் செலாவணி மோசடி வழக்குகள் இருக்கின்றன, ஆளுநர் ரங்கராஜனும் சட்டமன்ற உறுப்பினரல்லாத ஒருவரை முதல்வராக நியமிக்கமுடியாது என்று சூசகமாகக் கூறியிருக்கிறார், இச்சூழலிலேயே பொன்னையன், தம்பிதுரை போன்ற மூத்த அமைச்சர்கள் ஏமாந்து போக, பன்னீர்செல்வம் முதல்வராக்கப்பட்டிருக்கிறார்.

விழுந்தது லாட்டரி பரிசா அல்லது பெரும் தண்டனையா என்று மற்றவர்கள் வியக்கும் அளவு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலைகிறார் பன்னீர் செல்வம்.

பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்ட போதுகூட மேடையில் அமர தைரியமில்லாமல் புரட்சித்தலைவி மற்றும் அவரது தோழி அமர்ந்திருந்த சோஃபாவிற்கு அருகே ஒரு சாதாரண நாற்காலியைப் போட்டுக்கொண்டு, அதன் நுனியில் அமர்ந்தார் அவர்.

பதவிப்பிரமாணத்திற்குப் பிறகு தலைவி காலில் விழுந்து ஆசி பெற்றார். மறுநாள் போயஸ் தோட்டத்திற்குச் சென்று அவரை சந்தித்த பிறகே தலைமைச் செயலகத்திற்குச் சென்றார். அலுவலகத்திலும் ஜெயலலிதா வழக்கமாக அமரும் பெரிய ராஜநாற்காலியை தள்ளிவைத்துவிட்டு, சாதாரண நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

எல்லாமே அம்மாதான், அவரே தமிழகத்தின் காவல் தெய்வம், தனது ஆட்சி தற்காலிகமானதுதான் என்றார் அவர்.

அவர் இல்லத்திற்கு வரும் கட்சிக்காரரிடமிருந்தோ, ஊர்க்காரர்கள் உறவினரிடமிருந்தோ மாலை மரியாதை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். பன்னீர் செல்வம் வாழ்க என்ற ஒலி எந்த மூலையிலிருந்தும் எழாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மனிதர் அரண்டுதான் போயிருக்கிறார் போலிருக்கிறது. எதையாவது சொல்லப்போய், செய்யப்போய், அதை தலைவி தவறாக எடுத்துக்கொண்டுவிடக்கூடாதே என்று சர்வ ஜாக்கிரதையாய் செயல்படுகிறார். இப்படிப்போனால் ஆட்சி என்னவாகும்? அதைப்பற்றி யாருக்கென்ன கவலை?

ஜெயலலிதாவின் இன்றைய கவலையே எப்படி டான்சி வழக்குக்களில் சாதகமான தீர்ப்பினைப் பெறுவதென்பதுதான். அக்டோபர் முதல்வாரத்தில் புதிதாக ஒரு நீதிபதி, தினகர். மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்கவிருக்கிறார். நாலைந்து நாள் வேகமாக விசாரணை நடந்து கொண்டிருந்தபோதுதான், சிறப்பு அரசு வழக்கறிஞர் வேங்கடபதி உச்சநீதி மன்றத்திற்குச் சென்று, நீதிபதியையே மாற்றியது பற்றி நாம் வாசகர்களுக்கு ஏற்கெனவே கூறியுள்ளோம்.

டான்சி வழக்குக்களைப் பொறுத்தவரை சென்னை உயர்நீதிமன்றத்தின் அணுகுமுறை தங்களுக்கு கட்டோடு பிடிக்கவில்லை என்பதை வெளிப்படையாகக் கூறித்தானே உச்சநீதி மன்ற நீதிபதிகள் சம்பந்தப்பட்ட நீதிபதியை மாற்றி, புதிதாக விசாரணை தொடங்க ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதுவும் புதிய நீதிபதி தினகர் கண்டிப்புக்குப் பெயர்போனவர். வேங்கடபதிக்கு எல்லா ஆவணங்களும் இப்போதுதான் வழங்கப்பட்டிருக்கின்றன. டான்சியில் இரு வழக்குகள், ப்ளசென்ட் ஸ்டே ஒன்று ஆக மூன்று வழக்குகளின்மேல் முறையீட்டு மனுக்கள் விசாரிக்கப்படவிருக்கின்றன. இச் சூழலில் ஜெயலலிதாவிற்கு சாதகமாக தீர்ப்பு வரும் என்பதற்கான உத்திரவாதமென்ன?

தவிர அவரையும் சேர்த்து மொத்தம் 18 மனுதாரர்கள் வேண்டுமென்றே வேங்கடபதி வழக்கை இழுத்தடிக்கலாம். ஆனால் நவம்பர் 14க்குள் விசாரணையை முடிக்கவேண்டுமென்ற அவசியம் இப்போது இல்லையே. ஜெயலலிதாதான் பதவியையே இழந்துவிட்டாரே. இருந்திருந்தால் நவம்பரில் ஆறுமாதக் கெடு முடிவடைகிறதே என்ற கவலை இருக்கும்.

அதே நேரம் இன்னொரு பக்கத்தையும் கவனிக்கவேண்டும். முதலில் கூறியதுபோல் எவ்வளவு விரைவில் வழக்குக்களை முடித்துக்கொண்டு, தேர்தல்களில் போட்டியிடும் தகுதியைப் பெறமுடியுமோ அந்த அளவு தனக்கு பாதுகாப்பு, நல்லது என்று நினைக்கிறார் புரட்சித்தலைவி.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு எந்நேரமும் வரலாம், பதவி பறிபோகலாம் என்ற நிலை. அப்போது ஆண்டிப்பட்டி அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் ராஜினாமா செய்கிறார். சரியாக செப்டம்பர் 15 ஆம் நாளன்று.

இடைத்தேர்தல் ஒன்றுக்கு உத்திரவிட மத்திய தேர்தல் ஆணையத்திற்கு ஒரு மாத கால அவகாசம் வேண்டும். பிரச்சாரத்திற்கு ஒரு மாதம் ஒதுக்கப்படும் என்பதுதான் கணக்கு. அதாவது ஜெயலலிதா நவம்பர் 14வரை தொடரப்போகிறார். டான்சியிலும் வெற்றி பெற்றுவிடுவார். எனவே ஒரு நாள்கூட பதவிவிலக நேரிடாமல், தொடர்ந்து நீடிக்க, அவசர அவசரமாக சட்டமன்றத்தில் ஒரு காலி இடம் உருவாக்கப்படுகிறது.

என்ன அக்கறை, என்ன கணக்கு, என்ன சுறுசுறுப்பு பாருங்கள். யாரையும் ஜெயலலிதா நம்ப மறுக்கிறார். தானே முதல்வராக இருக்கவேண்டுமென்பதில் வெறியாக இருக்கிறார். அந்தக் கணக்கெல்லாம் தவறிப்போயிருக்கிறது. முதலில் வழக்குகள் முடிந்தாகவேண்டும், அவர் வெற்றி பெற்றாக வேண்டும், தேர்தல் ஆணையும் தேர்தலுக்கு உத்தரவிட வேண்டும், இந்த ஆண்டு முடிவிற்குள் இதெல்லாம் சாத்தியம் என்று தோன்றவில்லை.

மத்திய அரசு தயவிருந்தால் ஏதோ ஒரு சில சாதகங்களாவது இருக்கும். வாஜ்பேயியும், அத்வானியும் மசியமாட்டேனென்கிறார்களே. பட்டதுபோதும் பெண்ணாலேயென்று போயஸ் தோட்ட திசைக்கே கும்பிடு போடுகின்றார்களே.

இடையிலே உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. பாட்டாளி மக்கள் கட்சி அந்தப்பக்கம் தாவிவிட்டது. மூப்பனார் உயிருடன் இல்லை. காங்கிரசுடன் நல்லுறவில்லை. பெரிய அளவில் அ.இ.அ.தி.மு.க. வெற்றி பெறாவிட்டால், ஜெயலலிதாவிற்கு இன்னமும் நெருக்கடி கொடுக்கும் மத்திய அரசு. சோதனைக்காலம் அவருக்கு தொடர்கிறது என்றே கூற வேண்டும்.

---

# மனிதச் சங்கிலியும் தேசிய அவமானமும்

மாதக்கணக்காக பத்திரிகை விளம்பரம் செய்து இந்த நாட்டில் உள்ள சக்தி மிக்க சிவில் அமைப்புக்களின் ஒத்துழைப்போடு கடந்த வாரம் சமாதானத்துக்கான மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

வர்த்தக சமூகத்தினதும் ஏனைய பலரினதும் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மனிதச் சங்கிலி நிகழ்வில் நாடு முழுவதிலும் சுமார் பத்து இலட்சம் பேர்வரை பங்கு கொண்டதாக ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

சமாதானத்துக்கான மக்கள் ஆதரவை வெளிப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி இறுதியில் 'சமாதானம்' என்ற சொல் எத்தனை பெரிய பேரினவாத அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கின்றது என்பதை உணர்த்தப்போதுமாக அமைந்துவிட்டது.

மனிதச் சங்கிலிகளாக தமது வேலைத் தலங்களுக்கு அருகில் நின்றிருந்த பலருக்கு தலை நகரில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

நகர மண்டபத்துக்கு முன்னால் நின்றிருந்த சிலரை சிஹல உருமய அமைப்பை சேர்ந்தவர்கள் தாக்கி காயப்படுத்தினார்கள். ஸ்ரீ லங்கா First என்று எழுதப்பட்டிருந்த பதாகையை வீதியில் விரித்து புத்த பிக்குகள் அதை மிதித்துக் கொண்டு நடக்க இன்னும் சிலர் தேசிய கீதம் பாடியதைக் கேட்க முடிந்தது.

அஸ்கிரிய மகாநாயக தேரர் மனிதச் சங்கிலிப் போராட்டம் புலிகளுக்கு ஆதரவானதெனக் கண்டித்திருந்தார். இத்தகைய கண்டனங்களுக்கு சிங்கள வெகுஜன ஊடகங்கள் பெரும் முக்கியத்துவம் அளித்து தமது 'இதயங்களின் உண்மை நிலைமை'யை நிரூபித்திருந்தன.

வெறுமனே வீதியோரத்தில் கைகோர்த்து நிற்பதால் சமாதானம் ஏற்படப்போவதில்லை என்ற பேரினவாதிகளின் கூற்றில் உண்மை இருந்தாலும் சமாதானத்தின் மீதான மக்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஒருசெயலை குறைத்து மதிப்பிடக்கூடாது. அத்தோடு மக்கள் வீதியோரத்தில் கைகோர்த்து நிற்பதைக்கூட புலிகளுக்கு ஆதரவான செயல் என்று கூறுவோர் மீது அனுதாபப்படுவதைத்தவிர வேறு வழியில்லை. இந்தளவு தூரம் மட்டமாக சிந்திப்பவர்கள் கூட பாராளுமன்றத்தை பிரதி நிதித்துவம் செய்கிறார்கள் எனும்போது இந்த நாட்டுக்கு கடவுள்தான் துணை! இது ஒரு தேசிய அவமானம்தான்!

இதேவேளை யாழ்ப்பாண மக்களும் வீதியோரங்களில் கைகோர்த்து நின்று தமது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்கள். ஆனால் துரதிஷ்ட வசமாக இந்த நிகழ்வு வெளியுலகுக்கு இருட்டடிப்பு செய்யப்பட்ட அவலம் நடந்தது.

குடா நாட்டில் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தை ஈ.பி.டி.பி.யினர் ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் இதனை கட்சி அரசியலோடு பிணைத்து நோக்கிய பத்திரிகைகள் சமாதானத்தின் மீதான மக்கள் ஆர்வமாகக் காண மறுத்து விட்டன.

யாழ். குடாநாட்டைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் பலர் வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வசிக்கின்றனர். இலங்கையில் யுத்தம் ஒய்ந்தால் இவர்கள் அனைவரும் திருப்பி அனுப்பப்பட்டுவிடுவார்கள். அதனால் யாழ்ப்பாண மக்கள் சமாதானத்தை விரும்பவில்லை போர் தொடர்வதே அவர்களது விருப்பம்' என்றொரு அபிப்பிராயம் தென்னிலங்கையில் முன்வைக்கப்படுகின்றது. ஆனால் இது தவறான அபிப்பிராயம் என்பதையும் குடாநாட்டு மக்கள் மற்றனைவரைவிடவும் சமாதானத்துக்காக ஏங்குகிறார்கள் என்ற உண்மையையும் அம்மக்கள் பல தடவை நிரூபித்திருக்கிறார்கள். கடந்த வாரம் நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டம்

## குடா நாட்டில் மனிதச் சங்கிலிப் போராட்டம் ஊடகங்களால் புறக்கணிப்பு

இருட்டடிப்பு செய்யப்பட்டதன் மூலம் யாழ்ப்பாண மக்கள் குறித்து ஒரு தவறான எண்ணக்கருவை வளர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஈ.பி.டி.பி ஏற்பாடு செய்தாலும் எவர் செய்தாலும் சமாதானத்துக்கு மக்கள் மத்தியில் இருக்கும் ஆர்வம் அழுத்தமாக வெளியுலகத்துக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய செயற்பாடுகளை அரசியல் ரீதியிலான காரணங்களுக்காக மறைப்பதன் மூலம் யார் இலாபம் பெற்றாலும் குடாநாட்டு மக்களுக்கென்றால் அது நிச்சயம் நஷ்டத்தில் தான் முடியும்.

---

# பழுதடைந்த கப்பலில் படையினரை ஏற்றிச் சென்றதாக குற்றச்சாட்டு

கடந்த 16ம் திகதி வடபகுதிக் கடலில் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான பிரைட் ஒப் சவுத் துருப்புக்காவிக் கப்பல் படையினர் பயணம் செய்யும் அளவு நல்ல நிலையில் இருக்கவில்லை என்றும் அந்தக்கப்பலில் படையினரை திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்ததில் 'ஏதோ' சதி நடந்துள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களில் ஆராயப்படுகின்றது.

இந்தக் கப்பல் படையினரை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் புறப்பட முன்னர் கிழக்குப் பிராந்திய கடற்படை கட்டளை அதிகாரியினால் கொழும்பு கடற்படை தலைமையகத்துக்கு அனுப்பப்பட்ட தகவலில் பிரைட் ஒப் சவுத் கப்பல் படையினர் பயணிக்க ஏற்ற நிலையில் இல்லை என்றும் பழுதடைந்த இந்தக் கப்பலால் மணிக்கு 5 கடல் மைல் வேகத்திலேயே பயணம் செய்ய முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கொழும்பிலிருந்து கிடைத்த தகவலின்படி அதிவேக டோரா படகுகளின் பாதுகாப்புடன் கப்பலில் படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது தொடர்பாக இப்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. பிரைட் ஒப் சவுத் 'மாஸ்டர் டைவர்ஸ்' தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பல். இத்தனை பழைய கப்பல் எவ்வாறு துருப்புக் காவிக்கப்பலாக பாவிக்க அனுமதிக்கப்பட்டதென கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

எவ்வாறெனினும் 1250 பேருடன் கப்பல் தாக்கியழிக்கப்பட்டிருக்குமாயின் பிரச்சனை பூதாகரமாகியிருக்கும். இந்த சம்பவத்தில் காவலுக்கு சென்ற படகில் இருந்த 12 படையினர் கொல்லப்பட்டனர். அத்துடன் பிரான்ஸில் இருந்து வாங்கப்பட்ட சிமோனோ மெரீன் என்ற கரையோர பாதுகாப்பு படகுடன் 11 கடற்படையினர் காணாமல் போயினர்.

பருத்தித்துறையில் இருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ள கடற்பரப்பிலேயே பிரைட் ஒவ்சவுத் தாக்குதலுக்கு இலக்கானது. இது கடந்த 14ம் திகதி மாலை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டது. ஆனால் 16ம் திகதி அதிகாலை 5 மணியளவிலேயே தாக்குதல் இடம்பெற்றது. திருமலைக்கும் காங்கேசன் துறைமுகத்துக்கும் இடையில் 120 கடல்மைல் தூரமே காணப்படுகின்றது. இதிலிருந்து குறிப்பிட்ட கப்பல் பயணம் செய்த வேகத்தை புரிந்துகொள்ள முடியும்.

இலங்கையின் பாதுகாப்புத்துறைக்கு பொருட்களை வழங்கும் தனியார் முகவர்கள் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து தரமற்ற சாதனங்களை படையினரின் பாவனைக்கு விநியோகம் செய்வதாக நீண்டகாலமாகவே குற்றஞ்சாட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சுவிஸ். பேர்ண் மாநகரில் புதிய உதயம்.

**விதுஜா ஏசியன் சொப் வாக் ஹவுஸ்**
**காசே பசாஜ் .8-3011. பேர்ண். சுவிற்சர்லாந்து.**

லைக் டொனாட் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்திருக்கும் கட்டிட 1ம் மாடியில்.

எமிடம் இந்தியா, சிங்கப்பூர் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குழந்தைகளுக்குரிய கோட், சூட், குருத்தா, ரீசேட், சோட்ஸ், கவுண், பஞ்சாபி, வெல்வெட் பஞ்சாபி, பெண்களுக்கான பஞ்சாபி, சுரிதார், சோலி, வெல்வெட் பஞ்சாபி, மற்றும் புடவைகள், பனாரஸ், கோலம், ஆர்வா, காஞ்சிபுரம், மைசூர்சில்க், ரூபிகுயின், சமர்குல்ட், ஆண்களுக்கான ஜிப்பா, சேட், பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, என பல்வேறுபட்ட தெரிவுகளை பெற்றுக் கொள்ளவும் மற்றும் பழைய புதிய திரைப்பட பிரதிகளையும் நாடகப்பிரதிகளையும் 2 str வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும் மற்றும் அனைத்து மளிகைச் சாமான்களையும் அன்பளிப்பு பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் எம்மை நாடுங்கள். தொலைபேசி அட்டைகள் யாவும் 26 str மட்டுமே. மற்றும் சிங்கப்பூரில் இருந்த இறக்குமதி செய்யப்பட்ட அசல் 22 கரட். தங்கநகைகள் எங்கள் விற்பனையில்.

தொடர்புகளுக்கு ஆனந்தன் சுவிஸ் T.P 031 311 35 10 or 076 530 67 55 or 031 992 82 67.



சுவிஸ் பேர்ண் மாநகரில்.

**Suji Jewellery Works**

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

K. Thurai
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
T.P. 0041-31-8191837

உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.



**Vella Maxi Credit**

சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு
கந்தராஜா பிரபு

**Vella Credit**
Spltalgasse 16 (4ம் மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509



**RECOVA***




நீண்ட நாட்களாக மூட்டு வலியால் அவஸ்த்தைப் படுபவர்களுக்கு மூட்டுக்களை புனரமைக்கும் ''ரிகோவா'' முற்றாக நிவாரணம் அளிக்கின்றது. தற்போது இலங்கையில் முன்னணி பார்மசிகளில் ''ரிகோவா'' கிடைக்கப் பெறுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு:
Tel : 01-470290, 077-805738



## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் வந்து திருமணப்பதிவு செய்து, திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியுடன் தங்குமிடவசதியும், திருமணம் இலங்கை முறைப்படியோ அல்லது விடியோ போட்டோவைப் பார்த்து வசதிக்கேற்பவோ தீர்மானிக்கலாம்.

விபரத்திற்கு:- அப்புலிங்கம் சிங்கப்பூர் கைதொலை பேசி என்:-
Tel:- 00 65 9 7514941. Tel. Fax:- 0065 2857494.

**LINGAM WEDDING SERVICE**
TELE: (65) 4533308



## அற்புத சித்தர் மாந்திரீகம்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் அதில் உடன் வெற்றிகாண மட்டக்களப்பு-மலையாள-சோதிட மாந்திரீகச் சித்தர். பேராசிரியர்-கலாநிதி. "சக்திசரவணா" வுடன் தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம், குடும்பப் பிணக்கு, தொழில் விருத்தி, திருமணத் தடங்கல், பிரயாணத்தடை, சத்துரு ஜெயம் முதலான சகல விடயங்களிலும் நிச்சயம் வெற்றி பெறலாம். ஏழு தலைமுறை பாரம்பரியமும், 30 வருட சுய அனுபவ ஆற்றலும் கொண்ட "சக்தி சரவணா"வினால் நினைத்த காரியம், ஜாதகபலன், சோதிட அருள்வாக்கு, எண்சோதிடம் முதலான பிற சோதிட சேவைகளும் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரிதசேவை மேற்கொள்ளப்படுகிறது. தபால் மூலம் தொடர்பு கொள்ளும் உள்ளூர் அன்பர்கள் 20 ரூபா முத்திரையுடன் தொடர்பு கொண்டு பதில் பெறலாம். இரகசியங்கள் அந்தரங்க மாகப் பேணப்படும். காலதாமதம்-பணவிரயம் இன்றி உடன் பரிபூரண வெற்றி பெற தொடர்பு கொள்ளுங்கள். நேரில் சந்திக்க- காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை. **தொடர்பு** **(வியாழன் விடுமுறை)**


HON.PROF.DR.SHAKTHY SARAVANA;
Majestic Inn, Room-203
49, Galle Road, Colombo-04.
556322, 556323

தொலைபேசி தொடர்பு காலை 9முதல் இரவு 9 வரை வெளிநாட்டினர் தொடர்பு கொள்ள
0094-1 556322, 0094-1 556323



## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம். வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.


நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

தாயின் கரங்களில் 01 06 1963



மண்ணின் கரங்களில் 19 09 2000

**அமரர் நாகரட்ணம் பாஸ்கரன்**

(தோழர்: ரஜனி /ஜெயம்) திதி: 08.10.2001

அன்பிற்கு அன்பாய் அரவணைத்த தெய்வமே!
இவ் அவனியில் எங்களுடன் நீ வாழ்ந்த காலம்
மிக இனிமையானது.
காலன் அழைத்தான் என்று நீ எங்களை விட்டு
பறந்து சென்றாய்!
ஆனால் எம் நெஞ்சிலே என்றும் உன் நினைவு மொட்டுக்கள்!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது ஆத்மா சாந்தியடைய் பிரார்த்திக்கும்,
தாய், தந்தை, தம்பி, மைத்துனி, பெறாமக்கள், தோழர்கள்

தகவல்:- தம்பி என். பிரபாகரன்.
கௌரி வீடியோ மூவிஸ்: 536/44, கோவிந்தன் வீதி,
திருக்கடலூர், திருகோணமலை.


## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் செப்டெம்பர் 22-27 வரை**
DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.
கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் செப்டெம்பர் 29,30 திகதிகளில்**
ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் ஒக்டோபர் 06, 07 திகதிகள்**
T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஒக்டோபர் 13, 14 திகதிகள்**
(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

**எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்**



K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind- S.M.P

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள். ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கைவலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

**RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM**
**ராஜ வஜீகரண (ரசாயண) லேகியம்**

(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது.)



சாலாமிசிரி, பாதாம்பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாசவாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்கவல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப்போக்கும். இருமல். மார்பு. இடுப்புவலி. கால்கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும். நீரிழிவு. பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும். சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது. நாட்பட்ட பீனிசம். இளைப்பு. இருமல். மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500gram 300/-, 250gram 150/-
விபிபி ஆடர்கள் கவனிக்கப்படும்.

TALENT A&M

வார நாட்களில் காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணிமுதல் பகல் 12 மணிவரை வைத்தியரை சந்திக்கலாம்

**Ayur Dr.K.Sivasubramaniam முருகானந்தா வைத்தியசாலை**

G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி) கொழும்பு -11. Tel : 384645


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 23 * 08 * 1941



உதிர்வு 27 * 08 * 2001

திருமதி.புஷ்பதேவி விவேகானந்தன்

திதி.நவமி 26.09.2001

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
அமைதியின் திருவுருவாய் இருந்த
எங்கள் குடும்ப குலவிளக்கே
நீங்கள் மறைந்தாலும்
உங்கள் அன்புருவம் மறையாது
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

தகவல்:கணவர் மு.விவேகானந்தன்
5, Creston Way,Worcester Park,
Surrey CR 4 ins,
U.K.

குடும்பத்தினர்
வட்டு.தென்மேற்கு
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

# நெருக்கடி நிலையை மோசமாக்கும் பேரினவாதம்!

அலசுவது - இராஜதந்திரி

அமெரிக்கா எவ்வேளையிலும் ஆப்கானிஸ்தானில் தனது விரோதியான ஒசாமா பின் லாடனைக் கைப்பற்றும் யுத்தத்தை முடுக்கி விடலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தான் ஏற்கனவே பெரும் பாதிப்புக்களை சந்தித்த ஒரு நாடாக இருக்கின்றது. சீரற்ற அரசியல் நிலபரம், உள்நாட்டுயுத்தம், தலிபான் ஆட்சியாளரது அதிதீவிர மதச்சார்புக் கொள்கைகள், பாதகமான புவியியல் தன்மை போன்றவற்றினால் ஆப்கானிஸ்தானில் வறுமை, பசி, பட்டினி, நோய், பிணி என்பவை ஏக காலத்தில் தாண்டவமாடி வருகின்றன.

இத்தகைய மிகப்பாரதூரமான ஒரு சூழ்நிலையிலேயே அமெரிக்க வல்லரசு தனது அசுரக்கரங்களையும் ஆப்கானிஸ்தானுக்குள் புகுத்துவதற்குத் தயாராகி வருகின்றது.

நியூயோர்க்கின் உலக வர்த்தக மையக் கட்டங்கள் மீதும், வாஷிங்டனில் அடைந்துள்ள பென்டகன் இராணுவத் தலைமையகம் மீதும் கடத்தப்பட்ட விமானங்கள் நடத்திய தாக்குதல் அமெரிக்காவின் வல்லரசுப் பலத்தைச் சீண்டி விட்டிருந்தது.

இதனையடுத்தே ஒப்பரேஷன் 'வியாபித்த நீதி' (Operation in finite Justice) என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையொன்றை ஒசாமா பின்லாடனைத் தேடிப்பிடிக்கவென அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கை ஒசாமா பின்லாடனைக் கைப்பற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளதாயினும் சர்வதேச ரீதியாக பயங்கரவாதத்தை முறியடிப்பதும் இதன் நோக்கமாக இருக்கின்றதென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சர்வதேச பயங்கரவாதம் என்பது இன்று மிகவும் விரிவடைந்ததொன்றாகவே இருக்கின்றது. பயங்கரவாதத்தின் கெடுபிடிக்குள்ளாகாத ஒரு நாடே இல்லையென்று கூறுமளவுக்கு பல்வேறு வடிவத்திலும் அமைதியையும், சமாதான-சகவாழ்வையும் உருக்குலைக்கும் சம்பவங்கள் தினமும் உலகில் ஏதாவதொரு பகுதியில் இடம்பெற்று வருவதாகவே இருக்கின்றது.

ஒசாமா பின்லாடனை இன்று ஒரு மிகப்பெரும் பயங்கரவாதியாக அமெரிக்கா கருதுகின்றது. ஆனால் பலவருடங்களுக்குமுன்னர் அன்றைய சோவியத் யூனியனுடன் அமெரிக்கா பகைமை கொண்டிருந்தபோது ஒசாமா பின்லாடனை அமெரிக்காவே ஓர் உளவாளியாகப் பயன்படுத்தியிருந்தது. அத்துடன் அவருக்கு அமெரிக்காவே பயிற்சிகளையும், வழங்கியிருந்தது.

ஆனால் தற்போது 'வளர்த்த கடாவே மார்பில் பாய்ந்த' ஒரு நிலைக்கே அமெரிக்கா உள்ளாகியிருக்கின்றது.

உலக வல்லரசுகள் அரசியல், பொருளாதார, இராணுவ விடயங்களைக் கையாளும் போது எப்போதுமே தமது சுயநலன்களுக்கே முன்னுரிமை அளிக்கின்றன.

மத்தியகிழக்கு, வளைகுடா ஆகிய பிராந்தியங்களிலும் அமெரிக்காவின் போக்கு, அதன் சுய நலத்தை முதன்மைப்படுத்தியதாகவே இருக்கின்றது.

ஈரானில் மன்னர் ஷாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதும் ஈராக்கிற்கு ஆதரவாக அமெரிக்கா இருந்து வந்தது. ஈரான், ஈராக் ஆகிய நாடுகளுக்கிடையே யுத்தம் பலவருடங்களாக நீடித்தபோது ஈராக்கிற்கே அமெரிக்கா ஆதரவளித்தது.

ஆனால் தற்போது வளைகுடாவில் நிலைமை மாற்றங்கண்டுள்ளது. ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனையும் அமெரிக்கா தனது விரும்பத்தகாதவர்கள் பட்டியலிலேயே சேர்த்துக் கொண்டுள்ளது.

அத்துடன் ஈராக்கியத் தலைவர் சதாம் ஹுசைனுக்கெதிராக அமெரிக்கா கொண்டுள்ள கடும் போக்கு, லட்சோப லட்சம் அப்பாவி ஈராக்கிய மக்களையும் பாதித்துவிடுவதாக இருக்கின்றது.

மத்தியகிழக்கில் கூட அண்மைக்காலம் வரை இஸ்ரேலிய-பாலஸ்தீனிய யுத்தத்தில் இஸ்ரேல் சார்பாகவே அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் நடந்து கொண்டிருந்தன.

ஆனால் தற்போது நடுநிலை பேணுவது போல இஸ்ரேலிய, பாலஸ்தீனத்தலைவர்களுடன் அமெரிக்கா உறவு பாராட்டிவருகின்றது.

நெடுங்காலமாகவே மத்திய கிழக்கில் அமெரிக்கா தனது சுயநலத்தைப் போணும் வகையில் முன்னெடுத்த அரசியல், இராணுவ நடவடிக்கைகளே, இன்று இஸ்லாமிய தீவிரவாதம் அமெரிக்காவுக்கு எதிராகத் திரும்பவும் முக்கிய காரணமாக இருக்கின்றது.

நியூயோர்க், வாஷிங்டன் ஆகிய நகரங்களில் நடத்தப்பட்டுள்ள கடுந்தாக்குதல் களையடுத்து அமெரிக்கா யுத்த சன்னதம் கொண்டுள்ளது.

இதுவரை காலமும் அமெரிக்கா தொடுத்த யுத்தங்கள் அரசியல், இராணுவ, பொருளாதாரக் காரணிகளை மையமாகக் கொண்டவை. ஆனால் தற் போது திட்டமிடப்பட்டுள்ள 'வியாபித்த நீதி' என்ற இராணுவ நடவடிக்கை பயங்கரவாதத்தை களையெடுப்பதையே இலக்கு வைத்துள்ளதென அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்காவின் இப்புதிய யுத்தப் பிரகடனத்தையடுத்து, இலங்கையிலுள்ள பேரினவாத சக்திகள் 'மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும்' முயற்சியில் குதித்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இலங்கையிலுள்ள வர்த்தக சமூகத்தினர் 'ஸ்ரீலங்காவுக்கு முதன்மை' (SriLanka First)என்ற தொனிப் பொருளில் சமாதானத்தை வலியுறுத்தும் நடவடிக்கையொன்றைக் கடந்த வாரம் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஒரே நாளில் அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து இலங்கையில் சமாதான-சகவாழ்வுக்கான அறைகூவலை விடுப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

இனவேறுபாடு, வயது வேறுபாடு, தொழில் மற்றும் ஏனைய வேறுபாடுகளைக் கடந்த நிலையில் 'ஸ்ரீலங்காவுக்கே முதன்மை' என்ற சமாதானப் பிரசாரத்துக்காக பல தரப்பட்டவர்களும் வீதியில் இறங்கி கைகோர்த்து நின்றனர்.

அச்சமயம் அணிதிரண்ட கும்பலொன்று ஊர்வலமாக வந்து சமாதானக் கோஷமெழுப்பியவர்களை மூர்க்கத்தனமாகத் தாக்கியிருந்தது. சிஹல உறுமய என்ற கட்சியைச் சேர்ந்தவர்களே இந்த கும்பலில் அடங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் நடவடிக்கை இலங்கையில் ஒருபோதும் இன ஐக்கியத்துக்கோ, சமாதான-சக வாழ்வுக்கோ இடமில்லையென்பதையே புலப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

சில பௌத்த பிக்குமார்களும் இக் குழப்பக்காரர்கள் மத்தியில் காணப்பட்டதுடன் சமாதானக் கோஷம் எழுப்பியவர்கள் தாங்கி நின்ற பதாகைகளையும் நிலத்தில் போடச் செய்து அவற்றின் மீது பிக்குமார்கள் நடந்து வந்ததையும் காணமுடிந்தது.

இதுதவிர சிஹல உறுமய கட்சியின் தலைவரான திலக் கருணாரட்ண, கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரக அதிகாரியான ஜேசன் வாட்சன் என்பவரிடம் அமெரிக்காவின் பயங்கர வாதத்துக்கெதிரான நடவடிக்கை, தமிழீழ விடுதலைப்புலிகளையும் இலக்கு வைப்பதாக அமைய வேண்டுமெனக் கோரி கடிதமொன்றையும் கையளித்திருந்தார்.

அக்கடிதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேச வேண்டுமென சர்வதேச சமூகம் வலியுறுத்தக் கூடாது எனவும் திரு.திலக் கருணாரட்ண கேட்டிருந்தார்.

ஆனால் அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் 'ஸ்ரீலங்காவுக்கே முதன்மை' என்ற வர்த்தக சமூகத்தினரின் ஏற்பாட்டிலான சமாதானப் பிரசார நடவடிக்கைகளில் பங்குபற்றி வீதியில் இறங்கிக் கைகோர்த்தும் நின்றனர்.

அதேசமயம் கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்தைச் சேர்ந்த மற்றுமொரு அதிகாரியான ஸ்டீபன் ஹொல்கேட் என்பவர், அமெரிக்கா ஆரம்பித்துள்ள பயங்கரவாதத்துக் கெதிரான யுத்தத்தில் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு உள்ளடக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையிலான பிரச்சனை வேறானது. அப்பிரச்சனையில் இவ்விரு தரப்பும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டுமென்பதையே அமெரிக்கா எப்போதும் வலியுறுத்தி வருகின்றது எனவும் திரு.ஸ்டீபன் ஹொல்கேட் தெரிவித்திருந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜெனரல் கொலின் பவல் அவர்களை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வாஷிங்டனில் சந்தித்திருந்தார்.

அச்சமயம் ஜெனரல் கொலின் பவல் திரு.கதிர்காமரிடம் இலங்கை இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வொன்றைக் காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டுமென்பதையும் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

ஆனால் இலங்கையிலுள்ள பேரினவாத சக்திகளின் போக்கு சமாதானத்துக்கான அணுகுமுறைகள் அனைத்தையுமே அடித்து நொறுக்கிவிடுவதாக இருக்கின்றது.

'ஸ்ரீலங்காவுக்கே முதன்மை' என்ற சமாதான அறைகூவலை முன்வைத்த வர்த்தக சமூகத்தினர் அரசியல், மற்றும் வேறு பக்கச் சார்பான நலன்களுக்கு அப்பாற்பட்ட நிலையிலிருந்தே தமது சமாதான அறை கூவலை விடுத்திருந்தனர்.

இலங்கையின் இன்றைய நெருக்கடிநிலையை நன்கு உயர்த்துணர்ந்தவர்களாகவே வர்த்தக சமூகத்தினர் இருக்கின்றனர். இலங்கைப் பொருளாதாரம் என்றுமில்லாதவாறு பாரிய நெருக்கடிகளைச் சந்தித்திருக்கின்றது.

இந்த நெருக்கடிக்கு நேரடியாகவே முகங்கொடுத்தவர்களாகவே வர்த்தக சமூகத்தினர் காணப்படுகின்றனர்.

உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அடிமட்ட வர்த்தகர் முதற் கொண்டு முன்னணி வர்த்தகர்கள் வரை பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியோராக இருக்கின்றனர்.

இவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் நாட்டின் அனைத்துத் துறைகளிலும் பிரதிபலிப்பதாகவும் இருக்கின்றது.

இதன் காரணமாகவே வர்த்தக சமூகத்தினர் நாட்டில் அனைத்துத் தரப்பினரிடையேயும் சமாதான விழிப் புணர்வைத் தோற்றுவிக்கும் விதத்தில் 'ஸ்ரீலங்காவுக்கே முதன்மை' என்ற பிரசாரத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆனால் இந்த அரசியல் கலப்பற்ற நன்முயற்சிமீதும் பேரினவாதக் கும்பல் தாக்குதல் நடத்தித் தமது சுயரூபத்தை வெளிப்படுத்தியிருந்தது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்கள் இன்று மிகவும் நெருக்கடியான நிலையையே எதிர்நோக்கியோராக இருக்கின்றனர். இருப்பினும் அவர்கள் ஓர் அரசியல் தீர்வின் மீதும், சமாதான-சகவாழ்வின் மீதும் நம்பிக்கை இழக்காதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

ஆனால் தென்னிலங்கையின் பேரினவாத சக்திகளது கடும்போக்கு சமாதானத்துக்கான அனைத்துக் கதவுகளையும் மூடி விடுவதாகவே இருக்கின்றது.

சிஹல உறுமயக் கட்சித்தலைவர் அமெரிக்கத் தூதரகத்திடம் இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டுமென சர்வதேச சமூகம் வலியுறுத்தக் கூடாதெனத் தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் அக்கட்சி சாதிக்க நினைப்பது யாது? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

எந்தவொரு பிரச்சனையையும் தீர்ப்பதற்கு ஜனநாயக நாடொன்றில் பேச்சுவார்த்தைகளே முக்கிய சாதனமாக விளங்குகின்றது.

ஆனால் இன்று முழு உலகுமே ஒரு யுத்த நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் தருணத்தில் இலங்கையிலுள்ள பேரினவாதிகள் நடந்து கொள்ளும் போக்கு, வல்லரசுக் கெடுபிடிகளை இலங்கையிலுள்ளும் வலிந்து வர வழைப்பதாகவும், எரியும் நெருப்பை மேலும் கொளுந்து விட்டெரிய வைப்பதாகவுமே இருக்கின்றது. ■




## அதிரடி அய்யாத்துரை



**கண்ணைக்கட்டி** நடுக் காட்டில விட்டது மாதிரி எந்தப் பக்கம் போவதென்று புரியாமல் தலைகுழம்பிப் போயிருக்கும் அழுக்கு சங்கரியார் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு ஆலோசனை சொல்லி அனுதாபம் அனுப்பியிருக்கிறார் பார்த்தியளே... அமெரிக்க தாக்கு தலை கண்டிக்கிறார் மனுஷன். பயங்கரவாதத்தை உந்தளவு வளர விட்டது தப்பாம். உதை முளையிலேயே கிள்ளியெறியோணமாம். இது எங்களுக்கும் ஒரு பாடம் என்று வேறு சொல்லியிருக்கிறார். ஏதோ மற்ற விஷயங்களை உடனே புரிஞ்சு கொள்ளுறவர் மாதிரி பயங்கரவாதிகள ஏன் உப்பிடி நடந்துகொள்ளினம் என்று தனக்குப் புரியவில்லை என்று கவலைப் பட்டிருக்கிறார். This is to lesson for us too என்று அழுக்கு சங்கரி ஆங்கிலத்தில சொல்லி தனது இதயத்தில் உள்ள ஒரு உண்மையையும் வெளியிட்டிருக்கிறார்!

**சபாநாயகரும், ஐ.தே.க.** எம்.பி.ரவிகருணாநாயக்கவும் பல விஷயங்களில் நெருங்கிய சகாக்களாக இருந்தவர்கள். கடைசியில் சபையில் வந்து ஆளாளுக்கு திட்டித்தீர்க்கும்படி ஆகிப்போச்சு. ரவிக்கு எதிராக வழக்குப்போடப்போகிறேன் என்றார் அனுரா. நீதிமன்றத்துக்குப் போக தனக்கும் வழிதெரியும் என்ற தொனியில் பதில் சொல்கிறார் ரவிகருணாநாயக்க. இவர்கள் இருவருமே ரணிலுக்கு மிக நெருக்கமானவர்கள். யார் பக்கம் வாதாடுவதென்று புரியாமல் குழம்பிப் போயிருக்கிறார் அவர்.

**பொதுவாக ஒருவர்மேல்** ஒருவர் சேறு பூசும் அவதூறுப் பத்திரிகைகளை அரசியல் எதிரணியினரை மையமாக வைத்து வெளியிடுவதுதான் வழக்கம் ஆனால் பாருங்கோ... இங்கே நிலையே வேறு. ஒரே கட்சிக்குள் ஒருவரை ஒருவர் சாடும் அவதூறுப் பத்திரிகைகள் புறக்கோட்டை பஸ்நிலையம் தொடக்கம் பல இடங்களில் விநியோகப்படுகிறது. அவற்றின் மொழி நடையையும், உள்ளடக்கத் தையும் பார்க்கும் போது இந்த நாட்டுப் பத்திரிகை சுதந்திரத்திற்கு என்ன குறை இருக்கிறது என எண்ணத் தோன்றுகிறது.

**ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில்** 8ம் கொலனி என்றொரு பின் தங்கிய கிராமம். வரட்சியால் பாதிக்கப்பட்டு பாதி வயிறு பட்டினியாக மூவினங்களையும் சேர்ந்த மக்கள் வாழ் கிறார்கள். கடந்த வாரம் தென்னிலங்கையில் இருந்து நிவாரணம் கொண்டு சென்ற பௌத்த அமைப்பொன்று அவற்றைப் பெற்றுக் கொள்ள சிங்கள மக்கள் மாத்திரம் விகாரைக்கு வருமாறு ஒலி பெருக்கியில் அழைப்பு விடுத்தது. பசியின் கொடுமையை முழுமையாக உணர்ந்திருந்தாலும் அந்த நிவாரண உதவிகளை வாங்க எவரும் விகாரைப் பக்கம் செல்லவில்லை. தகவலொன்று அனுப்பப்பட்டது. 'பட்டினிக்கு தமிழ் சிங்கள, முஸ்லிம் என்ற வேறு பாடு கிடையாது. இருப்பதை எல்லோருக்கும் பிரித்துத்தருவதாயின் பெற்றுக் கொள் கிறோம். இல்லாவிடின் உங்கள் நிவாரணங்களை திருப்பிக் கொண்டு போங்கள்'. அரசியல்வாதிகளின் வெறித்தனங் களைத் தாண்டியும் நாட்டின் ஏதோ ஒரு மூலையிலாவது இன்னும் 'இலங்கை மக்கள்' வாழத்தான் செய்கிறார்கள்!

**சுற்றுமதில் கட்டி,** கதவுகளை மூடிக்கொண்டு அடுத்த வீட்டில் நிகழ்ந்த மரணத்தைக்கூட பத்திரிகையில் பார்த்து அறிந்து கொள்ளும் நகர வாழ்க்கையைப் பற்றி தாரோ என்பவர் சொல்வதைக் கேளுங்கள் அழகாக இருக்கிறது.

**நகர வாழ்க்கை என்பது**
**இலட்சக்கணக்கான மக்கள்கூடி தனிமையில் வாழ்வது!**

# உண்மைத் தொடர் 25

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

**யூத** இளைச்சிறுவர்கள் படிக்கும் பள்ளிக்கூடம் ஒன்றில் தீ பிடித்து விட்டதாக மியுனிச் நகரெங்கும் செய்தி பரவிக்கொண்டிருந்தது. பெற்றோரும் நகர மக்களும் பாடசாலைக்கு படையெடுத்தார்கள். ஆனால் அவர்கள் அங்கு போய்ச் சேரும் போது அனைத்தும் முடிந்திருந்தது. அரைச் சுவர் கட்டப்பட்ட வகுப்புகளில் இருந்தவர்கள் தப்பித்து வெளியில் ஓடியிருக்கிறார்கள். உள்ளே அகப்பட்ட நூற்றுக்கணக்கான சிறுவர்கள் தீயில் கருகி மாண்டார்கள். இதற்கான காரணத்தை கண்டறிய விசாரணை நடைபெறுமென்று பொலிஸார் உறுதியளித்தனர். ஆனால் 'மேலிடத்து' உத்தரவால் இரண்டு நாளில் விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்த பாடசாலை அமைந்திருந்த நிலம் எஸ்.எஸ். அமைப்பின் ஜெனரல் ஒருவருக்கு சொந்தமானது பாடசாலையை அந்த இடத்தை விட்டு அகற்ற தனது ஆட்களை வைத்து தீ வைத்தான் யூதச் சிறுவர்கள் என்பதால் தனக்கு பிரச்சனை வராது என்று தெரிந்திருந்த அவன் ஹிட்லர் மூலமாகவே விசாரணைகளையும் முடங்கச் செய்தான்.

ஹிட்லரின் கொடூர குணத்தையும் யூத எதிர்ப்புக்கொள்கையையும் அவனைச் சுற்றியிருந்த அதிகாரிகள் தங்களது தனிப்பட்ட நலன்களுக்காக பெரிதும் பயன்படுத்திக் கொண்டார்கள். பொருளாதார நிலைகளை சூறையாடுவதற்கென்றே பலர் அரச பயங்கரவாதத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

இவ்வாறு தான் தோன்றித்தனமாக நடந்த அதிகாரிகள் அனைவரும் ஹிட்லரை கடவுள் என்று கூறி வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

யூத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட ஹிட்லரின் அதிகாரிகளது வரிசையில் கோயபல்ஸ்சும், ஹிட்லர் என்பவனும் முதலிடம் பெறுகின்றனர். இதில் கோயபல்ஸ் ஹிட்லரின் ஆலோசகராகவும் ஹிட்லர் எஸ்.எஸ்.அமைப்பினதும் ஜெர்மன் பொலிஸினதும் தலைமை அதிகாரியாக விளங்கினர்.

1939ம் ஆண்டளவில் யூதர்களுக்கு எதிரான செயற்பாடுகள் வேகம்பெற ஆரம்பமாகியிருந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் நாட்டை விட்டு விரட்டப்பட்டார்கள்.

அவ்வாறு வெளியேற மறுத்தவர்கள் மீது மிகக் கடுமையான பொருளாதார அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. ஜெர்மனியிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டுமாயின் யூதர்கள் தமது சொத்துக்களின் மூன்றில் ஒரு பகுதியை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டுமென ஹிட்லர் நிருவாகம் உத்தரவிட்டது. நாடு முழுவதிலும் பரவலான வன்முறைகள் இடம்பெற்றன. சித்திரவதைக் கூடங்கள் யூதர்களால் நிரப்பப்பட்டது.

இத்தகைய நிலைமையில் வெளிநாட்டில் வாழும் யூதர்களை தமது நாட்டுக்குள் அனுமதிக்க போலாந்து மறுப்புத் தெரிவித்தது. ஹிட்லரின் கொடுமை தாங்காது போலாந்துக்குள் பிரவேசிக்க முயற்சி செய்த ஆயிரக்கணக்கான குடும்பங்களை எல்லைப்படையினர் திருப்பி அனுப்பினர். ஜெர்மனிய யூதர்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளானார்கள்.

இவ்வாறு போலாந்துக்குள் புக முயற்சி செய்து திருப்பியனுப்பப்பட்ட குடும்பத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் பிரான்ஸில் வசித்தார்.

ஜெர்மனியில் யூதர்களுக்கு எதிராக நடக்கும்அட்டூழியங்களை கண்டித்து பாரிஸ் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஹேர்ச்சல் கிரைன்ஸ் பென் என்ற அந்த வாலிபர் பாரிஸில் உள்ள ஜெர்மனி தூதுவராலய அதிகாரியான ஏனஸ்ட் வான் ராத் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்.

இதனை சிறந்த வாய்ப்பாக பயன்படுத்திய கோயபல்ஸ் நவம்பர் 8ம் திகதி இரவு யூதர்களுக்கு எதிரான மாபெரும் வன்முறை ஒன்றை ஜெர்மனிக்குள் கட்டவிழ்த்து விட்டான்.

சிறிய கிராமம் ஒன்றில் வசித்த 90 யூதர்களை கொலை செய்ததோடு அந்த மனித சம்ஹாரம் ஆரம்பமானது. நூற்றுக்கணக்கான வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான யூத இளைஞர்கள் சித்திரவதை முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். அதன் பின்னர் அவர்கள் வீடு திரும்பவே இல்லை.

முன்னைய நாள் இரவில் ஆயிரக்கணக்கான யூதர்களை கொலை செய்யப்பட்ட செய்தியை ஜெர்மன் வானொலி ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

ஈவா பிரவுனின் மடியில் சாய்ந்தபடியே காதுகளை செய்தியறிக்கையிலும் கைகளை அவளது களுத்திலும் பதித்து வைத்திருந்தான் ஹிட்லர். கொல்லப்பட்ட யூதர்களின் தொகையை பெரிய அளவில் கூறும் போதும் அவனுக்குள் உள்ளூர ஏற்படும் மகிழ்ச்சியின் காரணமாக தன் காதலியின் இடம்வலம் தெரியாத நிலைகளில் எல்லாம் முத்தமிட்டான்.

ஈவாவின் பருத்த மார்பகங்கள் ஹிட்லரின் மெலிந்த உடலில் நசுங்கிக் கிடந்தது. ஆடைகளையும் தாண்டி அந்த அழுத்தத்தை அனுபவிக்க விரும்பிய அவள் நெஞ்சை இறுக்கியிருந்த பொத்தான்களை ஹிட்லரைக் கொண்டே அகற்றுவித்தாள். அடைத்து வைத்திருந்த முயல்களை திறந்து விட்டது போல் வெளியில் குதித்த மார்பப் பூப்பந்தில் ஹிட்லரின் விரல்கள் விளையாட ஈவா பிரவுன் தன்னை மறந்து அவனை அணைத்துக் கொண்டாள். வானொலி தன்பாட்டுக்கு நாட்டு நடப்புக்களை கூறிக் கொண்டிருந்தது. ஈவாவின் உஷ்ணத்தை பரிசோதித்துக் கொண்டிருந்தான் ஹிட்லர்.

★★★


**த**னது 'கெட்டித்தனத்தை' ஹிட்லரிடம் விபரித்துக் கொண்டிருந்தான் கோயபல்ஸ். பாரிஸில் சுட்டுக்கொல்லப்பட்ட தூதரக அதிகாரியின் மனைவி பெர்லினில்தான் வசித்தாள். அவள் அழகானவன் அந்த பெண்ணை அடையவேண்டும் என்ற திட்டம் கோயபல்ஸுக்குள் இருந்தது.

சிறிது காலம் அவளுடன் உறவு வைத்திருந்த அவன் பின்னர் அதனை துண்டித்துக் கொண்டான். இவ்வாறு பலருடன் கோயபல்சுக்கு தொடர்பிருந்தது. அவன் ஒரு பெண் பித்தனாக இருந்தான்.

தனது உதவியாளர்கள் மூலமாக யூத இன யுவதிகளை கடத்திவருவதுதான் அவனது பிரதான பொழுதுபோக்கு. ஹிட்லர் இவை எதனையும் கண்டுகொள்வதில்லை.

ஜெர்மனியின் மனித உரிமை மீறல்கள் சர்வதேச ரீதியில் கடும் கண்டனத்துக்கு உள்ளாகிக்கொண்டிருந்தது. பல நாடுகள் ஜெர்மனுடன் உறவுகளை முறித்துக் கொள்ளும் அளவுக்கு நிலைமை மோசமானது. அண்டை நாடுகளுடன் மாத்திரமன்றி, ஐரோப்பா முழுவதுடன் பனிப்போரொன்று ஆரம்பமாகியிருந்து.

இத்தகைய பின்னணியில் ஜெர்மனியின் பல முக்கிய நகரங்களில் செயற்பட்ட ஆயுத உற்பத்தி நிலையங்களும், கப்பல் கட்டும் நிறுவனங்களும் பெருவாரியான ஆயுத



தளபாடங்களை செய்து குவித்தன. ஏராளமான வெடிகுண்டு தொழிற்சாலைகள் இயங்கின.

1939ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஜெர்மன் நாட்டு ஆயுதப்படைகளுக்கு ஏராளமான போர்க்கப்பல்களும், விமானங்களும் கிடைத்தன.

டிசம்பர் 5ம் நாள் மிகப்பெரும் நீர்மூழ்கிக் கப்பலொன்று வெள்ளோட்டம் விடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஹிட்லர் நீண்ட உரையொன்றை ஆற்றினான்.

இனிமேல் ஜெர்மன் உலகில் எவருக்கும் தலைகுனியாது என கர்வத்துடன் கூறிய அவன் உலகை வெல்லப்போதுமான சக்தியை தமது நாடு பெற்றுவிட்டதெனக் கூறினான்.

ஜெர்மனியின் ஆயுத பலம் நாளுக்கு நாள் பெருக்கப்படுவதை அறிந்த அயல்நாட்டு அரசாங்கங்கள் பதற்றமடைந்தன. பதிலுக்கு அவைகளும் தமது வளங்களுக்கு ஏற்றவகையில் ஆயுத உற்பத்தியில் இறங்கின. பிரிட்டன் உட்பட சில நாடுகளிடம் ஏற்கனவே நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளிட்ட கனரக ஆயுதங்கள் இருந்தபோதும் அவை ஜெர்மனியின் வளர்ச்சியால் பதற்றமடைந்து தமது போர் சக்தியை மேலும் பெருக்குவதில் தீவிர ஆர்வம் காட்டின.

இவ்வாறான ஆயுத உற்பத்திகளின் அதிகரிப்பு ஒரு புறம் நிகழ மறுபுறத்தில் பாரிய மனித அழிப்பு நடவடிக்கைக்கு ஜெர்மனியின் உள்ளூர் இராணுவ அமைப்புக்கள் தம்மை தயார் செய்திருந்தன. எஸ்.எஸ். அமைப்பு பல பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது. யூதர்களை கைது செய்யவும், சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்து வரவும், அங்கே சித்திரவதை செய்யவுமென பல பிரிவுகளாக எஸ்.எஸ்.இராணுவத்தினர் செயற்பட்டனர்.

**ஷானு**

**வருவான்...**

## இருட்டில் நடந்த திருட்டுப் பரிமாற்றம்



**ந**ள்ளிரவு நேரத்தில் ஒரு வீட்டுக்குள் புகுந்தான் திருடன் ஒருவன். படுக்கையறையில் கணவனும் மனைவியும் நன்கு தூங்கிக் கொண்டிருந்தனர். தனது வேலையை சுலபமாக முடித்து விடலாம் என்று நினைத்த அவன் வேலையில் இறங்கினான்.

வெற்றியுடன் வீட்டில் இருந்த பெறுதியான பொருட்களைச் சுருட்டிக் கொண்டு கிளம்பினான் அவன். அந்நேரம் பக்கத்து அறையில் இருந்து வந்த வித்தியாசமான சத்தத்தைக் கேட்டு எட்டிப் பார்த்தான்.

இளம்பெண் ஒருத்தி அந்த நட்டநடு ராத்திரியில் கொட்டக் கொட்ட விழித்திருந்து ரீ.வி. பார்த்துக் கொண்டிருந்தாள். கொள்ளையடித்த பொருட்களை ஒரு மூலையில் வைத்து விட்டு அந்தப் பெண் பார்த்துக் கொண்டிருந்ததை அவனும் பார்த்தான்.

அந்தப் பெண் பார்த்துக் கொண்டிருந்தது 'சூடான காட்சி'களைக் கொண்ட நீலப்படத்தை. திருட வந்ததை மறந்து அந்தக் காட்சியில் மூழ்கிப் போனான் திருடன்.

ஒரு கட்டத்தில் உணர்ச்சியை அடக்க முடியாத அவன் அறைக்குள் நுழைந்து, அந்தப் பெண்ணைத் தொட்டான்.

அந்தப் பெண்ணும் அந்நேரத்தில் இருந்த 'மூட்'டில் அவனுக்குக் கட்டுப்பட்டாள். எல்லாம் முடிவடைந்ததும், அங்கிருந்து கிளம்பினான். கிளம்பும் போது 'அதற்குக்' கைமாறாக அந்த வீட்டில் திருடிய பொருட்களைப் பெண்ணிடமே கொடுத்து விட்டுப் போனான்.

மறுநாட்காலையில் அலுமாரி திறந்து கலைக்கப்பட்டிருப்பதையும் விலையுயர்ந்த பொருட்கள் சிதறிக் கிடந்ததையும் கண்ட அப்பெண்ணின் தந்தை, திருட்டுக்கு முயற்சி என்று பொலிஸில் புகார் செய்தார்.

அங்கு விரைந்த பொலிஸார், கைரேகைகளைப் பதிவு செய்து, தம்மிடமிருந்த திருடர்களின் கைரேகைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தனர். திருடன் பிடிப்பட்டான்.

அவனைப் பிடித்து உதைக்க, முதல் நாள் இரவு அறைக்குள் நடந்த திருட்டுப் பரிமாற்றம் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் நடந்தது தமிழகத்தின் தலைநகர் சென்னையில்.

## இன்னொரு ஏமாற்று வேலை


**சீ**னர்கள், கொரியர்கள், தாய்வான் நாட்டைச் சேர்ந்தவர்களின் நாளாந்த உணவுகளைக் கேட்டால் வாந்தி எடுப்பீர்கள். பாம்பு, பல்லி, தவளை போன்றவற்றை இரசித்துச் சுவைத்துச் சாப்பிடுவார்கள்.

இப்போது இவையெல்லாவற்றையும் தொடர்ந்து மனிதக் கருவில் கை வைத்து விட்டார்கள்.

சீனாவில் உள்ள மருத்துவமனை ஒன்று கருவில் அழிக்கப்பட்ட குழந்தைகளைச் சாப்பிடுவது நல்லது என்று தெரிவித்துள்ளது. அதுமட்டுமன்றி தாய்வான் மருத்துவமனை ஒன்றில் கருவில் அழிக்கப்பட்ட குழந்தைகளை விற்பனை செய்வதாகத் தகவல்கள் வெளியாகின.

அத்துடன் தாய்வான் நாட்டு ஹொட்டல்களில் குறைமாதத்தில் இறந்து பிறக்கும் குழந்தைகளை, பதப்படுத்தி விற்கப்படுவதாகவும் ஒரு குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த விடயம் தொடர்பாக ஆதாரபூர்வமான படங்களுடன் வெப்தளம் ஒன்றில் தகவல்கள் வெளியாகின. மனிதரை மனிதர் தின்னும் அருவருக்கத்தக்க படங்களுடன் வெளியான இந்தத் தகவலுக்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.



தாய்வான் அரசாங்கம் இவையெல்லாம் 'டுபாக்கூர்' வேலை என மறுத்து விட்டது. சீனாவைச் சேர்ந்த ஒருவர் இப்படியான படங்களை, நடிகர்கள் சிலரை வைத்து உருவாக்கி வெப்தளம் ஒன்றில் போட்டுப் பரபரப்பை ஏற்படுத்தி விட்டார்.

வெப்தளங்கள் சில ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன. அதில் இதுவும் ஒன்று.

## உதவியால் பெறப்பட்ட உபகாரம்

**எ**கிப்து நாட்டைச் சேர்ந்த இசைக்கச்சேரிகளை நடத்தும் முகவர் ஒருவர் உலக சாதனைகளைப் பதிவு செய்யும் கின்னஸ் புத்தகத்தில் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார்.

அப்படி என்னதான் செய்து விட்டார் என்கிறீர்களா?

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் வாழும் இந்த முகவரின் பெயர் முஸ்தபா ஸெமிடோ. தற்போது இவருக்கு வயது 78. இவர் 1947ம் ஆண்டு முதன் முதலில் திருமணம் செய்தார். அதனைத் தொடர்ந்து கடந்த 54 வருடங்களில் 203 பெண்களைத் திருமணம் செய்துள்ளார். அதுவும் ஆதாரபூர்வமாக.

203 மனைவிகளின் புகைப்படங்களையும் ஓர் அல்பமாகத் தயாரித்து வைத்திருக்கிறார். இவ்வளவு மனைவிகள் இருந்தாலும் இவருக்கு பிள்ளைகள் மூன்றே மூன்று தான்.

அதெல்லாம் இருக்க எப்படி இவ்வளவு பெண்களையும் மணம் முடித்தார்?

இவர் திருமணம் செய்த பெண்களில் பெரும்பாலானவர்கள் பாடகிகள்-நடனமணிகள். எல்லாருக்கும் பொருளாதார ரீதியாக உயரவும் பிரபலமாகவும் இவரது உதவி தேவையாக இருந்தது.

எனவே அவர்களுக்கு உதவி செய்து விட்டு உபகாரமாக அவர்களை அடுத்தடுத்துத் திருமணம் செய்து கொண்டார் ஸெமிடோ.

## கவர்ச்சி (கம்பியூட்டர்) கன்னி



**ப**டத்தில் இருக்கும் அழகியைப் பார்த்து கிறங்கிப் போயிருக்கும் உங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்ல வேண்டும்.

இந்தக் கவர்ச்சிக் கன்னி உயிருள்ள ஜீவன் அல்ல. கம்பியூட்டரால் சிருஷ்டிக்கப்பட்ட அழகி.

இந்த அழகுச் சிலையை 22 நாடுகளைச் சேர்ந்த வெவ்வேறு கம்பியூட்டர் கிரஃபிக்ஸ் நிபுணர்கள் ஒன்றாகச் சேர்ந்து செதுக்கியுள்ளார்கள்.

இவளை வைத்து ஒரு திரைப்படமும் தயாரித்து விட்டார்கள். 'தஸ்பிரிட்ஸ் வித் இன்' என்பதுதான் படத்தின் பெயர். அமெரிக்கத் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடும் இத்திரைப்படத்தில் இந்த அழகியின் பெயர் அகிராஸ்.

ஹொலிவூட் கவர்ச்சி நடிகைகளுடன் போட்டி போடுமளவுக்கு அகிராஸிற்கு ஏகப்பட்ட விசிறிகள். 'சூடான 100 இளம் பெண்கள்' என்று 'மாக்ஸிம்' சஞ்சிகை வெளியிட்ட பட்டியலில் அகிராஸும் இடம் பிடித்துள்ளார்.

அது மட்டுமல்ல 'யாஹூ' என்ற இண்டர் நெட் பத்திரிகையில் அட்டைப் படத்தையும் அகிராஸ் அலங்கரித்துள்ளார்.

அகிராஸ் நடித்துள்ள 'த ஸ்பிரிட்ஸ் வித் இன்' படத்தில் நடித்த ஏனைய நட்சத்திரங்களும் கம்பியூட்டரால் சிருஷ்டிக்கப்பட்டவைதான். ஆனால் இவர்களுக்குப் பின்னணிக் குரல்களை மட்டும் நிஜ மனிதர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த மாதிரி கம்பியூட்டரால் உருவாக்கப்பட்ட அழகிகள் திரைப்பட நடிகையாக வரும்போது 'அவர் இவருடன்' என்று கிசுகிசுக்க முடியாது.



## உயரம் குறைந்தவர்களின் அணிகள்

கூடைப்பந்தாட்ட வீரர்கள் என்றால் உயரமான வர்களாகத் தான் இருக்க வேண்டும் என்றில்லை. உயரம் குறைந்தவர்களும் விளையாடலாம். ஃபிலிப் பைன்ஸ் நாட்டுத் தலைநகர் மணிலாவில் உள்ள மதுச்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் சராசரி உயரத்திற்கும் சற்றுக் குறைந்தவர்கள். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இரண்டு குழுககளை உருவாக்கினார்கள். மஞ்சள் கனவு அணி, சிவப்பு கனவு அணி என்ற அந்த அணிகள் விடுமுறை நாட்களில் அடிக்கடி விளையாடிக் கொள்கின்றன.



## ஒற்றைச் சக்கர வண்டி

உலகிலேயே அதிகம் துவிச்சக்கரவண்டிகளை உபயோகிப்பவர்கள் சீனர்கள். எப்போதும் துவிச சக்கர வண்டிகளையே உபயோகித்து போரடித்து விட்டதால் ஒற்றைச் சக்கர வண்டியைக் கண்டுபிடித்துள்ளனர். துவிச்சக்கர வண்டியிலும் பார்க்க பெரிதான இந்த ஒற்றைச் சக்கரவண்டிக்கு 'டுலூன் யோனிஷ்' என்று பெயரிட்டுள்ளனர். இதன் விலை நம்மூர் மதிப்பில் சுமார் 30 ஆயிரம் ரூபாய்.



ஒரு மோட்டார் சைக்கிளில் 47 பேரைச் சைக்கிளில் ஏற்றி உலக சாதனை புரிந்துள்ளது பிரேசில் நாட்டு இராணுவப் பொலிசார் படையணி. இது நடந்தது 1995ம் ஆண்டு. இதன்பின்னர் இந்தப் படையணி அண்மையில் ஒரு மோட்டார் சைக்கிளில் பலரை ஏற்றிக் கொண்டு பயிற்சி எடுத்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இது. சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் சாகசம் செய்வதற்காகவே இப்படையணி பயிற்சி எடுத்தது.


## சாதனை படைத்த படையணி



## அஞ்சா நெஞ்சன் எமிலோ

ஸ்பெய்ன் நாட்டில் காளை அடக்கும் போட்டி ஒவ்வொரு வருடமும் நடந்து வருகிறது. அண்மையில் இங்கு நடந்த போட்டியில் ஸ்பெய்னின் பிரபல காளை அடக்கும் வீரர் எமிலோ முனோஸைத் தனது கொம்பினால் குத்தித் தூக்கி வீசியது ஒரு காளை.

இப்போட்டியைப் பார்க்க வந்த பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது இந்தக் காட்சி. உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட எமிலோ இப்போது சிகிச்சை பெற்று வருகிறார்.



## பாஸ்டைல் தினக்கொண்டாட்டம்

ஃபிரான்ஸ் நாடு ஒவ்வொரு வருடமும் ஜூலை 14ம் திகதியை பாஸ்டைல் தினமாக பாரீஸ் நகரில் கொண்டாடி வருகிறது. ஃபிரெஞ்சுப் புரட்சியின்போது பாஸ்டைல் சிறையில் அடைத்து வைக்கப்பட்ட புரட்சிக்காரர்கள் அச்சிறையை உடைத்து, விடுதலை பெற்ற நாள் தான் பாஸ்டைல் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

அண்மையில் நடந்த பாஸ்டைல் தினக் கொண்டாட்டத்தின்போது ஃபிரெஞ்சுப் போர் விமானங்கள் அந்நாட்டின் தேசியக் கொடியிலுள்ள சிவப்பு, வெள்ளை, நீல நிறங்களை வெளிவிட்டுப் பறக்கும் காட்சிதான் இது.

# ஆளவந்தான் —அடல்ஸ் ஒன்லி

கமல் இரட்டை வேடங்களில் நடித்திருக்கும் 'ஆளவந்தான்' தமிழில் வெளியாகும் அதே நேரத்தில் இந்தியிலும் ('அபய்') வெளியாகவுள்ளது. சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் ரவீனா-மனீஷா இரட்டை ஜோடிகளுடன் கமல் நடித்துள்ள இப்படத்தை பெரும் பொருட்செலவில் தயாரித்துள்ளார் கலைப்புலி எஸ்.தாணு. 36 கோடி இந்திய ரூபாய் இப்படத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இடையில் சூடான படுக்கையறைக் காட்சிகளும் பாடல் காட்சிகளும் இருப்பதால் தணிக்கைக் குழுவினர் 'ஆளவந்தானு'க்கு 'ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளனர். 'ஏ' சான்றிதழ் என்பது வயது வந்தவர்களுக்கு மட்டும் (அடல்ஸ் ஒன்லி) என்பது தெரிந்ததே.

இதற்கு முன் கமல் நடித்த 'குருதிப்புனல்' படத்திற்கு 'ஏ' சான்றிதழ் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முகப்பில்

வெங்கடேஷ் - சௌந்தர்யா

படம்: சந்நீ லைன்



# பிரதியூஷாவின் பிடிவாதம்

தெலுங்கில் இருந்து தமிழுக்கு வந்திக்கும் பிரதியூஷா நடித்த முதல் படமான 'கடல் பூக்கள்' இன்னமும் வெளியான பாடில்லை. இருப்பினம் அதன் பின் பல படங்களில் நடித்து வருகிறார்.

'மனுநீதி', 'சூப்பர் குடும்பம்' ஆகிய படங்கள் பெரிதாக வெற்றியைப் பெறா விட்டாலும் பிரதியூஷாவுக்குப் புதிய படங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

'சவுண்ட் பார்ட்டி', 'தம்பியுடையான்', 'சல்யூட்' உட்பட ஆறுக்கும் மேற்பட்ட படங்களைக் கைவசம் வைத்திருக்கும் இவர் தமிழில் நிலையான இடத்தைப் பிடிக்காமல் சொந்த ஊருக்குத் திரும்பமாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கிறார்.

# ஆவியோடு பே...

திரையுலக மறைபக்கம் 214 தமிழ்நாட்டிலிருந்து மயன்

**வை**கையில் இருந்து புயலாக வந்த நகைச்சுவை நடிகர் தனக்கு ஆவி மூலம் ஒரு சோதிடர் அருளாசி வழங்கியதாக கோடம்பாக்கத்தில் சொல்லி வைக்க, அந்த விஷயம் வெகுவிரைவாகப் பரவி 'ஆவி சோதிடர்' கூறும் அருளாசி அங்கு பிரபலமாகி விட்டது. சினிமா வாய்ப்புக்கள் இல்லாதவர்களும் சினிமாவில் தமது மார்க்கெட் இறங்குமுகமாக இருப்பவர்களும் 'ஆவி சோதிடரை' அணுக ஆரம்பித்தார்கள்.

இவர்களது படையெடுப்பாலோ என்னவோ 'ஆவி சோதிடர்'களின் எண்ணிக்கையும் அங்கு இப்போது அதிகரித்து விட்டது.

அண்மையில் பெண் ஆவி சோதிடர் ஒருவரை அணுகியுள்ளார் 'முக்கழகி' நடிகை. ஒரு காலத்தில் தமிழில் முன்னணியில் இருந்த இவருக்கு இப்போது சுத்தமாகப் படவாய்ப்புக்கள் இல்லை. சின்னத்திரையிலும் இதே நிலைதான். நடிகையின் நிலைமை ஆட்டம் கண்டுள்ளதால், அடுத்து என்ன செய்யலாம் என்ற கேள்விக்கு விடை தேடி ஆவி சோதிடத்தை நாடியுள்ளார்.

தன் எதிர்காலம் குறித்து அந்த ஆவி சோதிடரிடம் விவாதித்த நடிகை, தமிழக முன்னாள் அமைச்சருடனான விவகாரம், சினிமா, அரசியல், மணவாழ்க்கை எனப் பல்வேறு விடயங்களைப் பற்றிக் கேட்டுள்ளார்.

# மஹிமாவின் காதல்கள்

இந்திய டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸைக் காதலித்து வரும் இந்தி நடிகை மஹிமா சௌத்ரி இதுவரை இந்தக் காதல் சங்கதியை மறுத்தே வருகிறார்.

இருப்பினும் தான் பிரபல ஹொலிவூட் நடிகர்களான சில்வெஸ்டர் ஸ்டலோன், மெல் கிப்ஸன், பிராட் பிட் ஆகியோரைக் காதலிப்பதாகக் கூறி வருகிறார்.

# தமிழ்த் தவிர்ப்பு

'வாழ்க்கை' தொலைக்காட்சித் தொடரைத் தொடர்ந்து பானுப்பிரியா தெலுங்கு-மலையாளப் படங்களில் நடித்து வருகிறார். தற்போது ஜெயராம் ஜோடியாக 'நைனா' என்ற மலையாளப் படமொன்றில் நடித்து வரும் பானுப்பிரியா ஏனோ தமிழ்ப் படங்களில் நடிப்பதைத் தவிர்த்து வருகிறார்.

# சினி விசிட்

# இடுப்புக்கு ஆபத்து

சிம்ரானின் ஸ்பெஷாலிட்டியே அவரது இடுப்புத்தான். இதனால் தானோ என்னவோ அவரை 'ஸ்லிம்'ரான் எனச் செல்லமாக அழைக்கிறார்கள்.

இவருக்கு சில காலமாக செல்லமாய் தொப்பை விழ ஆரம்பித்துள்ளது. இடுப்புக்கு வந்திருக்கும் இந்த ஆபத்தை சிம்ரான் விடுவாரா என்ன?

வீட்டில் தினமும் அரைமணி நேரம் கடுமையான உடற்பயிற்சி செய்து தொப்பையைக் கரைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.




# ஆகாஷின் 'சேலஞ்ச்'

'ரோஜாவனம்' படத்தில் அறிமுகமான ஆகாஷ் அதன் பின் 'கற்றது காதல் அனவு' படத்தில் ஒப்பந்தமானார். இந்தப் படத்தின் படப்பிடிப்புக்கள் பாதியிலே நின்று விட தெலுங்குப் படவுலகில் நுழைந்தார்.

தெலுங்கில் பல படங்கள் கிடைக்க, அங்கேயே பிஸியாக நடித்து வருகிறார். தெலுங்கில் ஆக்ஷன் படங்களில் ஆகாஷ் நடித்து வருவதால் இவரை அங்கு 'சின்ன அர்ஜுன்' என்று அழைக்கிறார்கள். அண்மையில் இவர் நடித்த 'சேலஞ்ச்' என்ற தெலுங்கு படம் வெற்றிகரமாக ஓட, அதைத் தமிழில் மொழி மாற்றி வருகிறார்கள். தமிழிலும் 'சேலஞ்ச்' என்றே பெயரிடப்பட்டுள்ளது.




# அம்மன் வேடத்தில் விஜயசாந்தி

'மன்னன்', 'தடயம்' ஆகிய படங்களை அடுத்து விஜயசாந்தி நடிக்கும் நேரடித் தமிழ்ப்படம் 'பண்ணாரி அம்மன்'. இதில் விஜயசாந்தி அம்மன் வேடத்தில் நடிக்கிறார்.

'கண்ணாத்தாள்', 'திருநெல்வேலி' ஆகிய படங்களை இயக்கிய பாரதி கண்ணன் இப்படத்தை இயக்குகிறார்.

தமிழகத்தின் கோவை மாவட்டத்தில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்றைப் பின்னணியாக வைத்துத் தயாராகும் இந்தப் பக்திப் படத்தில் வரும் அத்தனை கதாபாத்திரங்களும் கோவைத் தமிழ் பேசி நடிப்பது குறிப்பிடத்தக்கது.

'அசத்தல்' படத்தைத் தயாரித்த எஸ்.ராஜாராம் இந்தப்படத்தைத் தயாரிக்கிறார்.

# மினி சினி

- 'வல்லரசு' வெற்றிப்படத்தை இயக்கிய மகாராஜன் அடுத்து 'அரசாட்சி' என்ற படத்தை இயக்குகிறார். இதில் அர்ஜுன் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக முன்னாள் உலக அழகி லாரா தத்தா நடிக்கிறார்.
- 'ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ' படத்தை அடுத்து சத்யராஜை வைத்து 'சவுண்ட் பார்ட்டி' படத்தை இயக்கி வரும் ஆர்த்திகுமார், மேலும் இரண்டு படங்களை சத்யராஜை வைத்து இயக்கவுள்ளார்.
- மலையாளத்திலிருந்து திவ்யா உன்னி, அபிராமி ஆகியோர் தமிழில் நடித்து வருகிறார்கள். தமிழில் வாய்ப்பில்லாமல் போன கௌசல்யா, சங்கீதா (ரசிகா) ஆகியோர் மலையாளத்தில் பிஸியாக நடிக்கிறார்கள்.
- ஒளிப்பதிவாளர் தங்கன் பச்சான் தயாரித்து இயக்கும் 'அழகி' படத்தில் தனது மகன் அரவிந்த் பச்சானை பார்த்திபனுக்கு மகனாக நடிக்க வைத்துள்ளார்.
- சரணின் 'அல்லி அர்ஜுனா'வில் மனோஜ் ஜோடியாக நடிக்கும் ரிச்சா பலோட் தமிழில் புதிய படங்களில் நடிக்க ஒப்புக் கொள்ள மறுத்து வருகிறார். ஆனால் தெலுங்கில் நடிக்க வரும் வாய்ப்புக்களைத் தவற விடுவதில்லை.
- கே.ரங்கராஜ், ராமராஜன் ஆகியோரிடம் உதவியாளராகப் பணியாற்றிய ராஜ்மோகன் 'சல்யூட்' என்ற படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தை 'மனுநீதி', 'சவுண்ட் பார்ட்டி' போன்ற படங்களின் தயாரிப்பாளர் ஜி.ஆர் தயாரிக்கிறார்.
- தமிழில் பிஸியாக நடித்து வரும் மும்தாஜ் இந்தியில் தயாரான கலைப்படம் ஒன்றில் நடித்துள்ளார். 'பந்த்' என்ற பெயரில் தயாரான இப்படம் விரைவில் அங்கு வெளியாகவுள்ளது.
- கார்த்திக்-மாளவிகா இணைந்து நடித்த 'லவ்லி' தெலுங்கில் தயாராகவுள்ளது. தெலுங்கு 'லவ்லி'யை தமிழில் இயக்கிய ஷக்தி தான் இயக்கப் போகிறார்.

# பழிவாங்கும் ரோஜா

'கருப்பு ரோஜா' படத்தைத் தயாரித்துக் கையைச் சுட்டுக் கொண்ட ஆபாவாணன் 'கங்கா ஜமுனா சரஸ்வதி' தொலைக் காட்சித் தொடரைத் தயாரித்து வருகிறார்.

இதைத் தொடர்ந்து மீண்டும் பெரிய திரைக்குத் தாவியுள்ளார். ரோஜா, நாசர், குஷ்பு ஆகியோர் நடிக்க ஆபாவாணன் தயாரிக்கும் படம் 'இரண்டு பேர்'. இப்படத்தை 'சுந்தரபுருஷன்', 'வி.ஐ.பி' ஆகிய வெற்றிப்படங்களை இயக்கிய எஸ்.டி.சபா இயக்குகிறார். இப்படத்தின் கதையை பிரபல எழுத்தாளர் இந்துமதி எழுதியுள்ளார்.

தன் கணவனைச் சிலர் சூழ்ச்சி செய்து கொன்றுவிட, வெகுண்டு எழுந்து, தனது கணவனின் சாவுக்குக் காரணமானவர்களைத் தேடிப் பிடித்துப் பழிவாங்குவதுதான் படத்தின் கதை.

இதில் பழிவாங்கும் பெண்ணாக நடிக்கிறார் ரோஜா.

## ...கும் நடிகைகள்

...றைவெல்லாம் கனவாகக் கேட்டு, ஆவி சோதிடத்தில் ...ன சில பரிகாரங்களை நடிகைக்குச் சொல்லியிருக்கி... அந்தச் சோதிடர்.

...நடிகையும் மனநிறைவுடன் ஆவி நல்ல வழிகாட்டும் என்ற ...க்கையுடன் சோதிடருக்குப் பெரும் பணத்தையும் ...த்து விட்டுச் சென்றுள்ளார்.

...ழகி' நடிகையைப் போல் சில பிரபல ...ரையுலக நடிகைகளும் ஆவி சோதிடத்தில் அதீத ...க்கை கொண்டுள்ளனர்.

...ற்ற பூ' நடிகை, 'ரயில்' நடிகை போன்றவர் ...முக்கியமான முடிவுகள் எடுப்பதென்றால் முத ... ஆவிசோதிடரைக் கலந்தாலோசித்து விட்டுத் ... எந்த முடிவையும் எடுப்பார்கள்.

...இவர்களது வழியை இன்னும் எத்தனை ...கைகள் பின்பற்றப் போகிறார்களோ?






## லைலா மறுப்பு

'தீனா', 'பார்த்தேன் ரசித்தேன்', 'தில்' ஆகிய படங்களின் வெற்றியால் முன்னணிக்கு வந்திருக்கும் லைலா, இனி மேல் வயதான கதாநாயகர்களுக்கு ஜோடியாகத் தான் நடிக்கமாட்டேன் என்று கூறியுள்ளார்.

# தடுமாறுகிறது தமிழ்த்திரையுலகு

தமிழ்த்திரையுலகிற்கு இப்போது இறங்கு முகம்தான். சில வருடங்களுக்கு முன் இந்திய மொழிகளிலேயே அதிகமான படங்கள் தயாரிக்கப்படுவது தமிழில் தான். ஆனால் இப்போது நிலைமை தலைகீழ். தமிழில் தயாராகும் படங்களின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

பெரும் படாதிபதிகள் பலர் இப்போது படத்தயாரிப்பை நிறுத்தி விட்டார்கள். இருப்பினும் சில புதிய தயாரிப்பாளர்கள் வராமல் இல்லை. இந்தச் சூழ்நிலையில் துணிந்து படமெடுத்தாலும் பல்வேறு பிரச்சனைகளுக்கு அவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

பணப்பிரச்சனை, திரைப்படத் தொழிலாளர் பிரச்சனை, விசிடி பிரச்சனை என்று பல்வேறு பிரச்சனைகள். இந்த நேரத்தில் தொடங்கப்பட்ட பல படங்கள் பாதியிலே நிறுத்தப்பட்டு விட்டன. சமீபத்தில் தொடங்கப்பட்டு நிறுத்தப்பட்ட படங்கள் இவை.

அஜித் நடிக்க சரண் இயக்குவதாகத் தொடங்கப்பட்ட 'ஏறுமுகம்' நிறுத்தப்பட்டு விட்டது. இருப்பினும் அஜித்திற்குப் பதிலாக விக்ரமை நடிக்க வைக்க முயற்சிகள் நடக்கின்றன.

விஜய் நடிக்க விக்ரமன் இயக்குவதாக அறிவிக்கப்பட்ட 'மௌனமே காதலாகி' படமும் நிறுத்தப்பட்டுள்ளது. இப்போது விஜய்க்குப் பதிலாக சூர்யா அல்லது பிரசாந்தை நடிக்க வைக்கப் பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன.

கார்த்திக்கை வைத்து கேயார் தயாரிப்பதாக அறிவிக்கப்பட்ட பெயரிடப்படாத புதிய படமும் நிறுத்தப்பட்டு விட்டது. கார்த்திக் சொன்னபடி படப்பிடிப்புக்கு வராததால் படத்தையே நிறுத்தி விட்டதாகத் தயாரிப்புத் தரப்பு கூறுகிறது.

அர்ஜுன் நடிக்க பிரமாண்டமாகத் தொடங்கப்பட்ட 'அசோகா' நிறுத்தப்பட்டுவிட்டது. காரணம் கதைப் பிரச்சனை. இப்படத்தின் கதையும் அஜித் நடிக்கும் 'ரெட்' படத்தின் கதையும் ஒன்றாக இருப்பதை அறிந்து 'அசோகா'வை நிறுத்திவிட்டார்கள்.

அடுத்தது 'வேலாயுதம்'. மம்மூட்டி கதாநாயகனாக நடிக்கும் 'வேலாயுதம்' படத்தை நிறுத்தி விட்டார்கள். மம்மூட்டியிடம் கதையைச் சொல்லி சம்மதம் பெற்று படப்பூஜைக்கு ஒழுங்கு செய்தார்கள். ஆனால் மம்மூட்டி அப்படத்தில் தான் நடிக்கவில்லை என்று கூறி விட்டார். காரணம் கதை கூறி சம்மதம் பெற்றவர்கள் சம்பளம் பற்றிப் பேசவில்லை. முற்பணமும் கொடுக்கவில்லை. இதனால் 'வேலாயுதம்' படமும் நிறுத்தப்பட்டு விட்டது.

பிரபு நடிக்கும் 'மாமன்' படமும் நிறுத்தப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. பிரபுவுடன் ரம்பா ஜோடி சேர்ந்து நடிக்கும் இப்படத்தை 'ஜாட்டி' படத்தை இயக்கிய பரமேஷ்வர் இயக்கினார். சில நாட்கள் நடந்த இப்படத்தின் படப்பிடிப்புகள் தயாரிப்பாளரிடம் பணமில்லாததால் நிறுத்தப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி படங்கள் நிறுத்தப்பட்டதற்குக் கூறப்பட்ட காரணங்களில் எவை உண்மை என்று தெரியவில்லை. இப்படியே போகுமானால் தமிழ்த்திரையுலகு மோசமாகி விடும் என்பதுதான் உண்மை.

## பாக்யராஜுக்கு என்ன நடந்தது?

அகில இந்திய அளவில் சிறந்த திரைக்கதை ஆசிரியர் கே.பாக்யராஜ். அவரது திரைக்கதை உத்திக்காகவே பல படங்கள் வெற்றிபெற்றன. தொடர்ந்து பல வெற்றிப் படங்கள் கொடுத்த அவரது கதைகள் தமிழில் மட்டுமன்றி தெலுங்கு, இந்தி மொழிகளில் படமாக்கப்பட்டு சக்கைபோடு போட்டன.

அப்படிப்பட்ட பாக்யராஜிற்கு கடந்த சில வருடங்கள் சோதனையாக அமைந்து விட்டன. கோடிக் கணக்கில் கடன். வட்டி குட்டி போட்டு மீள முடியாத நிலையில் இருக்கிறார். சில வருடங்களுக்கு முன் அவர் தயாரித்து வெளியிடத் தயாராக இருக்கும் 'கபடி கபடி' படம் கூட இன்னமும் விற்பனையாகாமல் கிடக்கிறது.

இந்த இக்கட்டான நிலையில் இருந்து தப்பிக்க வழியில்லாததை அடுத்து தான் குடியிருந்த பங்களாவை விற்றுக் கடன்களை அடைத்துள்ளார்.

வாடகை வீட்டில் தற்போது குடியிருக்கும் பாக்யராஜ் 'கபடி கபடி' படத்தை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அத்துடன் இரண்டு படங்களில் நடிக்கும் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளார். இந்தப் படங்களில் ஒன்றை சுந்தர்.சி இயக்கவுள்ளார்.



அஜய்-ரஞ்சனா படம்: லவ்மேரேஜ்

## காதோடு சொல்லுகிறோம்

'...டைப் புயல்' நடிகருக்கும் 'கண்ணழகி' நடிகைக்குமிடையிலான ...' வெளியாகியதை அடுத்து இருவரும் மாறி மாறி மறுப்புத் ...வித்து வந்தாலும் அதில் எவ்வித உண்மையும் கிடையாது. ...காது காதலுக்கு முதலில் சிவப்புக் கொடி காட்டிய தாய்க்குலம் ...வேறு வழியில்லாமல் சம்மதம் தெரிவித்து விட்டா... எப்படியும் வரும் வருடத்தில் இருவருக்கும் திருமணம் ...க்கும் என்பது உறுதியாகி விட்டதாம்.

'பாண்டவர்' நிலத்தின் பெயரில் படமெடுத்து வரும் ...ழுத்து மன்னனின் பெயர் கொண்ட இயக்குநர், ...எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அப்படத்தின் நாயகி... தன்னால் அறிமுகமான நடிகையுடன் நெருக்கமாக ...ந்து வருகிறாராம். தன்னை அறிமுகப்படுத்தியவர் ...காரணத்திற்காக இயக்குநருக்கு இசைவாக ... நடந்து கொண்டாலும், இவர்களது நட... படப்பிடிப்புக் குழுவினரை முகம் சுளிக்க ...கிறதாம்.

'சித்தி' தொடரைப் போலவே 'ரயில்' நடி...யின் குடும்ப வாழ்க்கையும் குழப்பமாக ...கிறதாம். நடிகையின் கணவரான ...' நடிகரது கடைசிப் படத்தில் ... சேர்ந்த நடிகை உருவில் புதிய ...ச்சனை உருவாகியுள்ளதாம். ... மூத்த நடிகையுடன் கணவர் ...' பாடும் விஷயம் 'ரயில்' ...நடிகைக்குத் தெரியவர, பேசா... கணவரிடமிருந்து விலகிப் ...தும்படி அந்த மலையாள ...ரை மிரட்டியுள்ளா...

'தேனிசைத் ...ன்றலாக' வழங்கி ... இசையமைப் ...ர் இளம் ... ஒருவரு... நெருங்கிப் ... வருகிறா... இதுபற்றி ...சேரித்த போது, ... ஒரு தீவிர பக்திமான். ...ப் பெண் ஒரு ஆதிபராசக்தி ... இது 'பக்தி' நெருக்கமே தவிர ...வேறொன்று மில்லை' என்று கூறினாராம். ...சையமைப்பாளர். 'பக்தி' பகல் வேஷமாகி...ல் இருந்தால் சரிதான்.

## தாய் மகளுக்காற்றும்...

நடிகையாக வரும் மகளுக்கு அவரது தாய்க்குலம் ஆற்றும் உதவி மிக மிக ...க்கியமானது. வாய்ப்புக்களைப் பெற மகள் அப்படி இப்படி அனுசரணையாக ...ந்துகொள்ளும் போது தாய்க்குலம் அதைக் கண்டு கொள்ளக்கூடாது.

இந்த விஷயத்தில் முன்னாள் கவர்ச்சி நடிகை அனுராதா ஒரு படிமேலே போய் மகளைத் ...டிக்கொடுத்து வருகிறார்.

படப்பிடிப்புத்தளமோ, படவிழாக்களோ எதுவென்றாலும் மகள் அபிநயஸ்ரீ செல்லும் இடங்களுக்...கெல்லாம் அம்மா அனுராதாவும் ஆஜராகி விடுகிறார்.

மகள், இளம் நடிகர்கள் மற்றும் திரையுலகப் புள்ளிகளின் அருகே சற்று நெருக்கமாக அமர்ந்து அரட்டையடிப்பார். ...வ்வளவு நேரம் அரட்டையடித்தாலும் அம்மா கண்டுகொள்வதே இல்லை.

'ஏன் அவருடன் இவ்வளவு நேரம் நின்று பேசினாய்?' என்றில்லாமல் 'ஏன் அவருடன் பேசவில்லை?' என்று கேட்குமளவுக்கு ...தவியாக இருக்கிறார் அம்மா அனுராதா.

## விக்ரம் நடிக்கும் 'காசி'

'சேது', 'தில்' படங்களின் வெற்றியை அடுத்து விக்ரம் நடித்து அடுத்து வரவிருக்கும் சில படங்களும் இரண்டெழுத்துப் பெயரில் வரும். அந்த வரிசையில் புதிதாக வரும் படம் 'காசி'. வினயன் இயக்கத்தில் மலையாளத்தில் பெரு வெற்றி பெற்றதோடு பல விருதுகளையும் வென்ற படம் 'வாசந்தியும் லட்சுமியும் பின்னே ஞானும்'. இந்தப் படம்தான் இப்போது 'காசி' என்ற பெயரில் தமிழில் தயாராகிறது.

மலையாளத்தில் கலாபவன் மணி நடித்த பார்வையற்றவர் வேடத்தில் தமிழில் விக்ரம் நடிக்கிறார். இப்படத்தின் இயக்குநர் மற்றும் நடிகநடிகையர் தேர்வு நடந்து வருகிறது.

## கவர்ச்சியா? ஊச்!

கே.பாக்யராஜ்-ஜெயராம் இணைந்து நடிக்கும் 'ரொம்ப படிச்சவங்க' படத்தில் பாக்யராஜிற்கு ஜோடியாக நடிக்கிறார் மும்தாஜ்.

இதுவரை உரித்த கோழியாகக் காட்டப்பட்ட மும்தாஜின் உடம்பை, புடவையில் மூடி நடிக்க வைக்கிறார்கள். இதில் கவர்ச்சிக்கு விடைகொடுத்துவிட்டு முழுக்க முழுக்க சேலை கட்டிக் கொண்டு நடிக்கிறார் மும்தாஜ்.

## ஜோதிகாவின் நண்பர் படம்

அண்ணனுக்குப் பார்வை குறைவு. தம்பியால் பேசமுடியாது. மற்றொரு தம்பிக்குக் காது கேட்காது. இந்தக் கதையில் திருமான அண்ணன் தம்பிகளான ராஜு சுந்தரம், பிரபுதேவா, நாகேந்திர பிரசாத் ஆகியோர் நடிக்கிறார்கள்.

ஜோதிகா கதாநாயகியாக நடிக்கும் இப்படத்தைத் தயாரிப்பவர் ஜோதிகாவின் நண்பர் சந்தீப். இயக்கம் கே.சபாபதி.

# கண்களின் வார்த்தைகள்




குழந்தையும் நாயும் ஒருவரை ஒருவர் பார்க்கும்போது நமக்குப் பயமாக இருக்கிறது. பயங்கரமான தோற்றத்தையுடைய இந்த 'புல் டோக்' (BULL DOG) இன நாய் குழந்தையை ஏதாவது செய்து விடப் போகிறதோ என்ற பயம் தான்.

ஆனால் நாம் பயப்படும்படி எதுவும் நடக்காது. மேற்கத்திய நாட்டவர்கள் நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளைத் தமது பிள்ளைகளைப் போல் வளர்க்கிறார்கள்.

தமது சொந்தப் பிள்ளைகளை சில வேளைகளில் செல்லப் (பிராணி) பிள்ளைகளின் கவனிப்பில் விட்டுவிடுவார்கள்.

படத்தில் மழலை மொழி பேசும் 9 மாதக்குழந்தையும் பேசவே முடியாத 6 வயது நாயாரும் கண்களால் பேசிக்கொண்டபோது 'க்ளிக்' செய்யப்பட்ட படம் தான் இது.

# பள்ளி

பள்ளியே -என்
துன்பங்கள் இறக்கின்ற;
இன்பத்தை இறைக்கின்ற;
பாரியின் தேர்
***
கவலைகள் மறந்து;
கண்ணீரும் தொலைந்து;
கல்வித் தேசத்துள்-என்னைப்
புதைக்கின்ற
புனிதக் களம்!
***
மாணவப் புஷ்பங்களின்
மந்திரப் புன்னகையால்...
மனக் காயங்கள் கருகிடும்-அது
மருந்தகம்.
***
கரும்பலகையில் எழுதுகையில்
இதயத்துக் கரும்புள்ளிகள்
அழிந்திடும்.
***
ஒவ்வொரு
மணியின் ஒலிப்பிலும்
புதிதாய்ப் பிறந்து;
புயலாய் எழுந்து;
புதுமையை மணக்கிறேன்.
***
பள்ளி வளவின்
ஒவ்வொரு புள்ளியையும்
பூரிப்பாய் ஸ்பரிசிக்கையில்
இதயத்து வலி
இல்லாமற் போகும்.
***
ஆனாலும்
கடைசி மணியின்
காட்டுக் கதறல்
வீட்டு நினைவை
மீட்டுக் கொடுக்க..
கவச வாகனத்தைக்
கண்டு....
கவிழும் உயிராய்..
ஒரு கவிதை நிலவு
மீண்டும்
இறந்து விழும்.

'வன்னிமகள்'-அநுராதபுரம்.

# (ப)சுமை நினைவுகள்

நினைவுகள்
இத்தனை பலமானதா?
***
என்றோ கடந்துபோன
ஒரு சோக நாளை
சிந்தனைக்குள்
செருகி விடுகிறதே
***
இதயத்தின்
ஒரு மூலையில்கிடந்து
அந்த நினைவுகள்
இன்னும் ஊசலாடுகிறது!
***
இரவின் உச்சியில்
குந்தியிருக்கும் நிலாமுதல்
இயற்கையின் எல்லா
அமைவுகளும்
எனக்காக அழுகின்றன.
***
ஓரிராட்சத
நிகழ்வும்
இதயத்தில்
ஒட்டிக் கொள்ளும் போது
பசுமை நினைவாகிறது.
எனின்
நீ என்னைப்
பிரிந்த நாள்தான்
என் பசுமை நினைவா?

ஒலுவிலூர்.ஏ.எம்.ஸாலிஹ்.

# அறிவாயோ?....

வாடிய பூவாக இருந்தேன்.
பனித்துளியாய் விழுந்து
பாசம்தனை தந்தாய்
தந்ததும் தூரப்போனதும்
ஏனோ...
***
ஆறுதலாய்
அன்புடன் உறவாடினாய் என்று
அடிமை நானும்
அன்பை யாசித்து
நேசித்து பார்த்திருந்தேன்-ஆனால்
நெருப்பாய் சுட்டெரித்து
என்னை வெந்தணலில்
வேகவிட்டாய்
கருணையே இல்லையா...
கரையாத உன் நெஞ்சம்.
***
வெறுமையான-என்
மனவானில்-நீ
வெண்ணிலவாக வந்தாய்
என்று நானும் இருந்தேன்-ஆனால்
என் கனவுச் சிறகுகளை
விரித்து விட்டு நீயோ
மறைந்ததும் ஏனோ?...
என் இதயம் இங்கே
ஊமையாய் அழுகிறது
அறிவாயோ?....

மாவடியூர்-செம்பருத்தி.

**தேன் கிண்ணம்**

# கடலில் சிந்தும் கண்ணீர்த் துளிகள்

அந்த அந்தி நேரப் பொழுதினில்
நட்ட நடுக்கடலினை நோக்கி
என் வள்ளத்தில் ஏறி,
துடுப்பையும் கையிலெடுத்து
மெல்ல மெல்ல நகர்கின்றேன்.
***
என் அன்பு மனைவியும்
ஆறு வயது என் மகனும்
வைத்தகண் வாங்காமல்
கண் கலங்கி நிற்க,
அவர்களை விட்டும் மெல்ல மெல்ல
விலகிக் கொண்டிருக்கின்றேன்.
***
இது என் தொழில்தான்.
இரண்டு வாரங்களாக இயற்கையின் தடையால்
என் குடும்பத்தின் வயிறு காய்ந்து போனது.
பொறுத்திருக்க முடியவில்லை.
ஒரு முடிவில் இன்று என் தொழிலுக்குச்
செல்கின்றேன்.
***
சில்லென்ற காற்றில்
மனைவியின் நினைவுகள்
என் மனதைத் துலாவிச் சென்றது.
***
இருள் சூழ்ந்த நடு நிசியில்
கடல் விளக்கினை துணை கொண்டு
வலையைக் கையிலெடுத்து
கடலில் போடுகின்றேன்.
***
எங்கும் மௌனம்.
சில நாட்களாக நடந்த
இயற்கையநர்த்தத்தில்...
நான் மட்டும் நடுக்கடலில்.
***
விடி வெள்ளி பிரகாசித்துக் கொண்டிருந்தது.
வலையில் சிக்கிய மீன்கள்
தப்பியோட முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.
குடும்ப வண்டிக்கு எரிபொருள்
கிடைத்துவிட்ட மகிழ்ச்சியுடன்
வலையினை உருவிக் கொண்டிருக்க...
ஏதோ திடீர் சத்தத்தால்
என் இதயம் நின்று போனதாய் உணர்ந்தேன்.
***
அதிவேகப் படகில்
ஆயுதம் தரித்த நபர்களின் பிடியில்
இன்னும் சில நொடிகளில் கைதியாவதை
நானும் உணர்ந்து கொண்டேன்.
***
நாளைக் காலையில்
என் மனைவியும்
பாடசாலை உடையுடன் என் மகனும்
கரையில் காத்துக் கொண்டிருக்கும்
காட்சி, கானல் நீராய்..
என் கண்களில் தெரிகின்றது.


எம்.முகம்மட் ஜலீஸ்-சவூதி அரேபியா.

# அறிவழகே அழகு

அழகே அழகே அழகென்று
ஆடி ஓடி அலைகின்றோம்
அழகுச் செல்வம் நமக்குள்ளே
அமையக் காண்பர் அறிஞரே,
***
ஆடை அணிகள் அணிந்தாலும்
அவற்றால் அழகு கண்டாலும்
கோடை மாரி என்றெல்லாம்
கூடுங்காலம் வளரழகு
***
காலம் எல்லாம் துணையாகக்
கல்வி அழகுச் செல்வத்தை
பால பருவத் திருந்தே
படித்துப் படித்துத் தேடுவோம்.
***
துள்ளிக் குதித் தாடிடும்
பள்ளிப் பருவம் கருவாகி
அள்ளிக் கொடுத்தும் குறையாது
அழகுச் செல்வம் வளர்கல்வி.
***
தேடத் தேடச் செல்வமதி
தேய்பிறை யில்லா வளர்பிறையே
மூட நம்பிக்கையெல்லாம்
ஓடச் செய்யும் உயர்மதியே,
***
போகும் இடத்தில் புகழுண்டு
பொன்னா பரணத்தால் பகையுண்டு
சாகும் காலம் அதுவரைக்கும்
தனிப்புக ழுடலை வளரவைக்கும்.

'வெற்றிமகன் கலாசூரி'-மட்டக்களப்பு.


# பேனா நண்பர்கள்




பெயர்:
எஸ். இருதயநாதன்,
வயது: 18
முகவரி:
125, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
ரி. சத்யவதி.
வயது: 21
முகவரி:
6ம் வட்டாரம்,
கும்புறுப்பிட்டி திருமலை.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
எச். சஜீத்
வயது: 18
முகவரி:
162ஏ, எருக்கலம்பிட்டி,
பாலாவி.
பொழுது போக்கு:
கிரிக்கெட்.




ஜோகிரி மோல்டி என்பவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். மிகச் சிறந்த சர்க்கஸ் கோமாளி. அவருடைய நகைச்சுவை நடிப்பு பிரிட்டிஷ் மக்களிடையே மிகவும் பிரபலமாக இருந்தது.

அதே நகரில் ஹமில்டன் என்ற கைராசிக்கார மருத்துவர் இருந்தார். ஒருநாள் அந்த மருத்துவரிடம் ஒருவர் வந்தார். வந்தவருடைய முகவாட்டம் மருத்துவரின் மனத்தை வாட்டியது.

# வாழ்வின் இலக்கணம்

"உங்களுக்கு உடம்பு சரியில்லையா?" என்று அவர் கேட்டார். "உடம்பில் ஒரு குறைபாடும் இல்லை டொக்டர். மனசு தான் சரியில்லை" என்றார் வந்தவர்.

"அப்படி என்ன கவலை? மனம் விட்டு என்னிடம் கூறுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். கவலையை இருக்கும் இடம் தெரியாமல் செய்து விடுகிறேன்" என்றார் மருத்துவர்.

"மனம் எந்த நேரமும் குழப்பத்தால் தத்தளிக்கிறது. நான் மகிழ்ச்சியுடன் சிரித்துப் பல வாரங்களாகி விட்டன. வாழ்க்கையே விரக்தியாக இருக்கிறது. தற்கொலை செய்து கொள்ளலாமா என்று பல தடவை யோசித்து இருக்கிறேன்.

வாழ்க்கையின் பிடிப்பிலிருந்து இறந்து விடவே விரும்புகிறேன். வாழவே பிடிக்கவில்லை.. இதற்கு என்ன செய்வது?" என்று அழாத குறையாக அந்த மனிதர் கூறினார்.

"இவ்வளவுதானா? கவலைப்படாதீர்கள். சிரிக்கப் பழகிக் கொள்ளுங்கள். வாழ்க்கைமீது உங்களுக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டு விடும்" என்று மருத்துவர் அறிவுரை கூறினார்.

"எப்படி சிரிக்கப் பழகிக் கொள்வது என்றுதானே தெரியவில்லை. நீங்கள்தான் வழிகாட்ட வேண்டும். எவ்விதம் சிரிப்பது என்று கற்றுக் தரவேண்டும்" என்றார் அந்த மனிதர்.

நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். இன்றிரவு நடைபெறும் சர்க்கஸ் காட்சிக்குச் செல்லுங்கள். அங்கே கிரி மோல்டி என்ற கோமாளி பல விதமான வேடிக்கைகளைக் காண்பிக்கிறார்.

அவரது செயல்களும் சொற்களும் உங்களை வயிறு குலுங்க சிரிக்க வைக்கும். அப்படிப்பட்ட தமாஷ் பேர் வழி அவர். சர்க்கஸ் முடிந்து வெளியே வரும்போது உங்கள் மனம் லேசாக ஆகி விட்டிருப்பதை உணருவீர்கள்" என்றார் மருத்துவர்.

"எப்படி இதனைக் கூறுகிறீர்கள்" என்று மருத்துவரிடம் கேட்டார். "நான் சர்க்கஸுக்கு சென்று அனுபவித்த படியினால்தான் இப்படிக் கூறுகிறேன்" என்றார்.

சிகிச்சைக்காக வந்தவர் கலகல வென்று சிரித்தார். பிறகு சொன்னார், "டொக்டர் மேக்கப் போடாமல் இருப்பதனால் உங்களுக்கு அடையாளம் தெரியவில்லை என்று நினைக்கிறேன். நான்தான் அந்த கிரிமோல்டி" என்றார் மருத்துவர். அதிர்ச்சி அடைந்தார்.

இவரைப் போன்றுதான் நாமும் இருக்கிறோம். நம்மிடம் இருக்கும் சிறப்புத் தன்மைகளைக் கொஞ்சம்கூட உணர்ந்து கொள்ளாமல் மகிழ்ச்சி அடையாமல் இல்லாததைப்பற்றி ஏங்கிக் கொண்டிருக்கிறோம். வேதனைப்படுகிறோம்.

இந்த நிலை இனிமேல் நமக்கு வேண்டாம். இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சி அடைந்து, அதனை அனுபவித்து இன்பமாக வாழப் பழகிக் கொள்வோம். இதுதான் வாழ்வின் இலக்கணமாகும்.

# இந்தவாரம் உங்கள் பலன்

**30.09.2001 தொடங்கி 06.10.2001வரை**

**சோதிட மாமணி தில்லை**

### மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக்குறை நீங்கும். பொருள்வரவு, காரியானுகூலம் ஏற்படும். தொழில் விடயங்களில் அவதானம் தேவை. உத்தியோகஸ்தர்கள் எதிலும் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### இடபம்:
(கார்த்திகை பின்முக்கால் ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) குடும்ப நன்மை,தொழில் பேறு,முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவு சுமாராக அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### மிதுனம்:
(மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) காரியானுகூலம், தொழில் பேறு நன்மை தரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருள் வரவுண்டு. உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்,) காரியானுகூலம், செய்தொழிலில் நன்மையுண்டு.பொருள்வரவு சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

### சிங்கம்:
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) முயற்சிகளில் வெற்றியுண்டாகும். குடும்பத்தில் நன்மையும், பொருள் வரவும் உண்டாகும். வெளியிடப் பயணங்களில் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். உத்தியோகஸ்தர்களுக்கு தொழில் நிலையில் பிரச்சனைகளைத் தரும். மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை காட்டும்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### கன்னி:
(உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) மனக்குறை நீங்கும். பொருள்வரவும், காரியானுகூலமும், ஏற்படும். வார இறுதியில் நல்ல நிகழ்வொன்று குடும்பத்தில் ஏற்பட்டு மகிழ்வு தரும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபடைவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் கஷ்டங்கள் தீரும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், பொருளாதார நன்மையுண்டாகும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 03.

### விருட்சிகம்:
(விசாகத்து பின்முக்கால், அனுஷம், கேட்டை) முயற்சிகளில் வெற்றியுண்டாகும். மறைமுக எதிர்ப்புக்கள் நீங்கும். பொருள் வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள், முதலீடுகளில் அவதானத்துடன் செயற்படுவது நல்லது

அதிஷ்ட நாள்: திங்கள்
அதிஷ்ட இலக்கம்: 07.

**கிரக நிலை**

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன் |
| தனு | - செவ்வாய், கேது |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், இராகு |
| சிங்கம் | - வெள்ளி |

சந்திரன், கும்பம், மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### தனு:
(மூலம், பூராடம், உத்திராடத்து முதற்கால்,) தொழில் விருத்தியும், பணவரவும் உண்டு. எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியுண்டாகும். உத்தியோகஸ்தர்கள் திட்டமிட்டுக் கரும மாற்றுவது நன்மை தரும். மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த குழப்பநிலை நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள், மத்திம இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 06.

### மகரம்:
(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை,) எடுத்த கருமங்களில் சிறு தடைகள் ஏற்படும். குடும்பத்தில் வீண் மனஸ்தாபங்களுக்கு இடமுண்டு. உத்தியோகஸ்தர்கள், மேலதிகாரிகளை பகைத்துக் கொள்வர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### கும்பம்:
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி, (முன்முக்கால்,) மனக்குறை நீங்கி மகிழ்வு ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிலவும். வெளியிடப் பிரயாணங்களில் அவதானத்துடன் இருக்கவும். உத்தியோகஸ்தர்கள் எதிலும் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள் வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி) மனக்கவலை மறையும். எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியுண்டாகும். பணவரவு சிறிது பாதிப்படையும் உத்தியோகஸ்தர்கள் சிறிது பிரச்சனைகளுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள், குறைந்த இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 03.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## தண்ணீர் தண்ணீர் தண்ணீர்



பொதுவாகக் குளிக்கும்போது பச்சைத் தண்ணீரில் குளிப்பது மிகவும் நல்லது. தூக்கமின்மை, எரிச்சல், களைப்பை நீக்குகிறது. வியர்வை, எரிச்சல், தண்ணீர் தாகம் போன்றவை தண்ணீரைக் குடிப்பதனால் நீங்குகின்றன.

இதயத்திற்கு நலம் செய்வதிலும் உடலைச் சுத்தமாக வைத்திருப்பதிலும் தண்ணீர் முக்கிய பங்கு வகிக்கிறது.

பச்சைத் தண்ணீரில் குளிக்கும் போது எல்லா உறுப்புக்களும் சுறுசுறுப்பாகி சோம்பலை இல்லாதொழிக்கிறது. குளிப்பதால் பசி ஏற்படுகிறது.

தினமும் குறைந்தது 2 லீட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும் தண்ணீர் அதிமாகக் குடிக்காதவர்களுக்குத்தான் மலச்சிக்கல் வருகின்றது. தண்ணீர் பற்றாக்குறை உள்ளவர்களின் உடலை அவர்களது தோலை வைத்தே கண்டுபிடித்துவிடலாம்.

தண்ணீர் அதிகம் குடிக்காதவர்களுக்கு வறண்ட சருமமாக இருக்கும். தண்ணீர் அதிகம் குடிப்பவர்களுக்கு குடல் சம்பந்தமான நோய்கள் வருவது 80 சதவீதம் குறைவு என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

சிறுநீராகக் கோளாறுகள், சிறுநீரகக் கல் போன்றவை தண்ணீர் பற்றாக்குறையினாலேயே வருகின்றன.

## பழங்களின் மருத்துவ குணங்கள்



**மாம்பழம்**

சமிபாடின்மை, அதிக இரத்த அழுத்த நோயுள்ளவர்கள் மாம்பழம் சாப்பிடுவது நல்ல பயனைக் கொடுக்கும். இதில் விட்டமின் 'ஏ' அதிகம் இருப்பதால் நல்ல கண்ணொளியைத் தரும்.

**அப்பிள்**

அப்பிள் எளிதில் சமிபாடடையும் பழமாகும். குழந்தைகளுக்கு அப்பிளைக் கூழ காக்கிக் கொடுத்தால் அவர்களுக்கு ஏற்படும் வயிற்று உபாதைகளுக்கு நல்ல பலனைக் கொடுக்கும்.

**தக்காளி**

விட்டமின்கள் 'ஏ'யும் 'சி'யும் தக்காளியில் அதிகம் உள்ளன. ஊளைச் சதையைக் குறைக்கும். நீரிழிவு நோயைத் தணிக்கும். தோல் வியாதி, களைப்பு போன்றவற்றையும் நீக்கும்.

**பேரீச்சை**

மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு போன்றவற்றைத் தணிக்கிறது. பல் ஈறுகளைப் பலப்படுத்துகிறது. உடலுக்குத் தேவையான இரும்புச் சத்தை இதிலிருந்து அதிகம் பெறலாம்.

**எலுமிச்சை**

விட்டமின் 'சி' இதில் அதிகம் உள்ளது. வயிற்றுக் கடுப்பு, பித்தம், தாகம் ஆகியவற்றுக்கு மிகவும் நல்ல பலனை அளிக்கிறது இது.

**மாதுளை**

குளுக்கோஸ் நிறைய உள்ளது. குடல், இருதயம், சிறுநீரகம் ஆகியவற்றை நன்கு இயங்கச் செய்ய மாதுளம் பழம் சிறந்தது.

**ஒரேஞ்ச்**

இரும்புச் சத்து, விட்டமின்கள் அதிகமுள்ளன. சின்னம்மை, தைஃபொயிட் சயரோகம் உள்ளவர்களுக்கு இது மிகவும் நல்லது. உடலுக்கு வலு சேர்க்கும்.

## பட்டுச் சேலை பரிசுப் போட்டி

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KD

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-10-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## பதுளை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான் ☞

அன்னி கிங்ஸ்லி
45, மகியங்கனை வீதி, பதுளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம் அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




நவீன எழுத்துலக வேந்தன் **சுஜாதா**



வைரவன் இத்தாலியிலிருந்து தனக்கு ஃபோன் செய்ததை அனிதா ஏனோ மதுவிடம் சொல்லவில்லை.

"மது... எனக்குச் செத்துப் போகலாம் போல இருக்கு."

"இதுக்கா செத்துப் போவாங்க? என்ன பைத்தியம் நீ? அவவ அமெரிக்கா போறதுக்காக ஜாதி விட்டு ஜாதி எல்லாம் கல்யாணம் பண்ணிக்கறாளுங்க. ஆனா, நீ...? உங்க குடுமி, உங்க பாஷையோட, உங்க வூட்டு நாய்க் குட்டி மாதிரி ஒரு பையன் வந்து ப்ளேன் டிக்கெட்டை வெச்சுக்கிட்டு உனக்காகக் காத்துக்கிட்டு இருக்கான். அதைவிட அதிர்ஷ்டம் கெடைக்குமா சொல்லு?"

"பச்!"

"போ, பைத்தியமே... உனக்கு நல்லது எது கெட்டது எதுன்னு தெரியாம இருக்கற."

"பாட்டனி ரெக்கார்ட் வேணும்!" என்றாள் அனிதா.

அடுத்த வாரம் சுரேஷ் திருப்பதி போயிருப்பதாகச் சொன்னார்கள். மகாதேவன் அவர்களிடம் கல்யாண ஏற்பாடுகளைப் பற்றி விசாரிக்கப் போய் திரும்பி வந்தபிறகு ஒரு விஷயம் விநோதமாகச் சொன்னார்.

"யாருமே முகம் கொடுத்துப் பேசலை" என்ற மகா தேவன் தொடர்ந்து,

"பிள்ளை வீட்டுக்காராளோல்லியோ... அப்படித்தான் இருப்பா! ஒரு வேளை வரதட்சனை கேப்பாளோ... நம்ம அந்தப் பேச்சையே எடுக்கலையே? கூட வந்த அக்காக்காரி பாக்கிற பார்வையிலிருந்தே தெரிஞ்சது, ஜாடைமாடையா... நாம யாருக்கும் வரதட்சணை கொடுத்ததே இல்லையே கமலம்.." என்றார்.

"எதுக்கும் நீங்க பளிச்சுன்னு கேட்டுருங்கோ!"

"மாப்பிள்ளை பையனையே கேட்டுரலாமே?"

**தி**ருப்பதி போய்விட்டு வந்ததும் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களிடம் விசாரிக்க மகாதேவன் சென்றபோதும் யாரும் பிடி கொடுத்துப் பேசவில்லை!

"ஏற்பாடெல்லாம் பண்ணிண்டிருக்கோம்னு சொல்லத்தான் வந்தேன்!" என்றார் மகாதேவன்.

அந்த மாமி சுற்றி வளைத்துக் கடைசியில், "எங்க சுரேஷ் வருஷக் கடைசில கல்யாணத்தை வெச்சுக்கலாம்னு இப்ப சொல்றான். ஒண்ணும் அவசரப்பட வேண்டாம்னு சொல்றான்" என்றாள்.

"அவசரப்பட்டாச்சே, பி எஃப் லோன் எல்லாம் எடுத்தாச்சே... சத்திரம் புக் பண்ணி அட்வான்ஸ் குடுத்தாச்சே!" என்றார் மகாதேவன்.

"அதனால என்ன! கான்ஸல் பண்ணிடுங்கோ!"

மகாதேவன் ஆச்சரியப்பட்டு, "ஏன், ஏதாவது தப்பா நிகழ்ந்து போச்சா?" என்றார்.

"அதெல்லாம் இல்லை."

"பின்னே?"

அப்போது அறைக்கு வெளியே வந்த சுரேஷ், "லுக் மிஸ்டர் மகாதேவன்... அமெரிக்கால ஒரு வென்சர் காப்பிட்டலிஸ்ட் கிட்டேயிருந்து எனக்கு ஒரு வாய்ப்பு தேடி வந்திருக்கு. ஸ்வீடன்ல போய் ஒரு பெரிய ஸாஃப்ட்வேர் காண்ட்ராக்ட்டுக்கு எங்க கம்பெனிய ஸ்பான்ஸர் பண்றா..!" என்று சொல்ல...

"அதனால?"

"அதனால, இப்ப உடனே ஒரு வாரத்தில நான் ஸ்வீடன் போக வேண்டி இருக்கு. இப்பப்போய் கல்யாணம் அது இதுன்னு அவசரப்பட்டா..?"

"நிச்சயதார்த்தம் ஆயிடுத்தே மாப்பிள்ளை. அப்ப அத்தனை அவசரப்பட்டிருக்க வேண்டாமே?"

"நீங்க சொல்றதைப் பார்த்தா, நாங்க தான் ஏதோ பெரிசா அவசரப்படுத்தின மாதிரின்னா..." என்றாள் அந்த மாமி.

மகாதேவன் சினத்துடன், "நீங்க தானம்மா அவசரப்படுத்தினீங்க-நாங்க இல்லை! அடுத்த வாரமே கல்யாணம்னீங்க நீங்க!"

"மிஸ்டர் மகாதேவன்... அப்போ அப்படி.. இப்போ இப்படி.. இடையில நிறைய சேஞ்ச் ஆய்டுத்து. டேக் இட் ஈஸி! உங்க டாட்டரை நான் கமிட் பண்ண சொல்லலை. ஆமா... நிச்சயதார்த்தம் நடந்தாலும் என்ன போச்சு! வேற நல்ல இடம் வந்தா நீங்க தாராளமா கல்யாண ஏற்பாடு பண்ணலாம்" என்றான் சுரேஷ்.

மகாதேவன். "எனக்குப் படபடன்னு வருது. ஒரு வாய் தண்ணி கொடுங்கோ" என்றார்.

வீட்டுக்குத் திரும்பினதும் மகாதேவன் முதல் காரியமாக "அனிதா, இங்கே வா" என்று அதட்டலாகக் கூப்பிட்டார்.

அவள் பாட்டனி ரிக்கார்டு நோட்டு எழுதுவதை முடித்துக்கொண்டு போன போது...

"வான்னா உடனே வரமாட்டியா? அவ்வளவு அலட்சியமா உனக்கு?"

அனிதாவுக்குப் அவரைப் பார்க்க பயமாக இருந்தது. முகம் சிறுத்துப்போய் கோபத்தால் உதடுகள் துடித்தன. அப்பாவை இந்தக் கோலத்தில் எப்போதாவதுதான் பார்த்திருக்கிறாள். ஏதோ ஒரு சொத்து விஷயமாக அவருடைய பெரியப்பா மகளுடன் சண்டை வந்தபோது அவர் உதடுகள் துடித்திருக்கின்றன.

"என்ன ஆச்சு.. மாப்பிள்ளைப் பையனோட சண்டை போட்டியா? அவனைப் பிடிக்கலைன்னு ஏதாவது சொன்னியா?"

"இல்லையே! ஐயோ, இது என்ன...?" என்றாள்.

"பின்ன ஏன் அவா 'கல்யாணம் இப்ப வேண்டாம். தள்ளிப்போடலாம்'னு சொல்றா..."

"எனக்கு என்ன தெரியும்?"

இதற்குள் கமலம் வந்து "என்னவாம்?" என்றாள்.

"போனா பிடிகொடுத்தே பேசலை! கல்யாணம் இப்ப வேண்டாம்கறா... சீக்கிரம் கல்யாணம் முடிச்சுரணும்னு நமக்கு விருப்பமிருந்தா வேற இடம் பார்க்கறதுக்கும் அவாளுக்கு ஆட்சேபனை இல்லையாம்!"

"ஐயோ...!"

"நிச்சயதார்த்தம் ஆனப்பறம் பேசற பேச்சா இது?"

"பிள்ளையைப் பெத்துட்டா என்ன வேணா பேசறதா? இவ கல்யாணம் நின்னு போயிடுத்துன்னு தெரிஞ்சா மத்தவா எப்படி ஜாதகம் கொடுப்பா?"

அனிதா, "அப்பா இதில் எனக்கு ஏதும் சம்பந்தமில்லை; நான் போகலாமா?" என்றாள்.

"இரு... நீ என்னவோ சொல்லித்தான் அந்த மாதிரி திடீர்னு மனசு மாறிட்டா..."

"நான் ஏதும் சொல்லவே இல்லை. என்னை ஏன் இப்படி அபாண்டமா சொல்றார் அப்பா?" என்றாள் கண்ணீருடன்.

"பின்ன எதுக்காக இப்படி சுவிட்ச் போட்டாப்போல மாறணும்..?"

"எதுக்காக மாறினாலும் அனிதா அதுக்குக் காரணம் இல்லை. அவ ஏதும் சொல்லியிருக்க மாட்டா... அனிதா, நீ ரூமுக்குப் போ..." என்றாள் கமலம்.

"இரு... அன்னிக்கு கார்ல வந்து எறங்கினியே... அது யாரு?"

"அதான் சொல்லியாச்சேப்பா... வைரவன்னு ஒருத்தர்... அவர் எங்க காலேஜுக்கு டொனேஷன் தந்தார்..."

"அவ்வளவுதானே? காதல் கீதல்னு ஏதும் இல்லை தானே?

"ஏன் இப்படி அசிங்கமா எல்லாம் கேள்வி கேக்கறீங்க?"-கமலம் கேட்டாள்.

"இதெல்லாம் உனக்குத் தெரியாது... இந்த நாள்ல அவாள்லாம் சுதந்திரமானவா! காதல்னு ஒண்ணு புதுசா வந்திருக்கு! உனக்குத் தெரியாது! உன் பொண்ணு லேசுப்பட்டவ இல்லை! முதல்லயிருந்தே இந்தக் கல்யாணத்தில இவளுக்கு இஷ்டமில்லை. அதை எப்படியாவது நிறத்திடணும்னு கருக்கட்டிண்டு பண்ணிட்டா..."

அனிதா அவரை அடிபட்ட கண்களுடன் பார்த்தாள்.

தன் அறைக்கு வந்தபோது அனிதாவக்குப் படிப்பில் மனசு ஓடவில்லை... 'என்ன காரணமாக இருக்கும்? எதனால் திடீர் என்று வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள்? ஒரு வேளை...'

'அனிதா, எங்கிட்ட சொல்லிட்டல்ல... பிராப்ளம் ஸால்வ்டு!'

'இந்தக் கல்யாணம் நின்றதில் அல்லது தள்ளிப் போடப்பட்டதில் ஏன் எனக்குச் சந்தோஷமில்லை? ஏன் எனக்குப் பயமாக இருக்கிறது? வைரவனுக்கு ஃபோன் பண்ணியது தப்புதான். ஆனால், வைரவனுக்கும் சுரேஷுக்கும் என்ன சம்பந்தம்?'-குழப்பமாக இருந்தது.

கூடத்தில் அவள் விமரிசிக்கப்பட்டாள்.

"எப்பப் பார்த்தாலும் ஃபோன் ஃபோன்னு உசேனியா கடைலேயே பழிகிடக்கிறது... அந்த குஜராத்திப் பொண்ணு வந்தா மணிக்கணக்கிலே குசுகுசுன்னு பேசிக்கிறது... இதையெல்லாம் கவனிக்கலைன்னு நினைச்சியா? உம்பொண்ணு லேசுப்பட்டவ இல்லை. என்னவோ சொல்லி அந்தப் பையன் மனசைக் கெடுத்திருக்கா!"

"அவளையே சொல்லிண்டிருக்கீங்களே... ஒண்ணு சொல்றேன் கேட்டுக்குங்கோ... உங்க அக்கா இருக்காளே. அவ ஏன் இந்தக் காரியம் பண்ணியிருக்கக் கூடாது?"

"அக்காவா! என்ன உளர்றே?"

"அவளுக்குத்தான் கல்யாணத்துக்கு அவ பொண்ணு வனிதா இருக்காளே! நல்ல வரன்னு எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்த, இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி மொட்டைக் கடுதாசி ஏதாவது எழுதிட்டாளோ என்னவோ.. யாருக்குத் தெரியும்?"

"என்ன சொன்னே..?" என்று அப்பா கோபத்தின் உச்சத்தில் கத்தினார்.

"இப்ப கேட்டுடறேன்... இப்பவே அக்காவைக் கேட்டுறேன்... இதில தப்பான அபிப்பிராயம் வேண்டாம். இப்பவே கேட்டுடறேன்!" என்றார்.

[அனிதா வருவாள்...]

# புகையிலை

புகையிலை போடும் பழக்கம் பீர்பாலுக்கு இருந்தது. மன்னர் எத்தனையோ முறை சொல்லிவிட்டார். ஆனாலும், பீர்பாலால் அந்தப் பழக்கத்தை விட முடியவில்லை.

பீர்பால்மீது பொறாமை கொண்ட அமைச்சர்களுக்கு, பீர்பாலின் இந்தப் பழக்கம் மிகவும் அருவெருப்பாக இருந்தது. எப்படியாவது இதைச் சொல்லி பீர்பாலை அவமானப்படுத்த நினைத்தனர்.

ஒரு நாள் அரண்மனைத் தோட்டத்தில் அக்பர், பீர்பால் மற்றும் மூத்த அமைச்சர்கள் அனைவரும் காற்றாட உலாவிக் கொண்டிருந்தனர். அப்படியே முக்கியமான விஷயங்களைப் பேசுவது வழக்கம்.

அப்போது தோட்டத்து வேலியோரத்தில் புகையிலைச் செடி ஒன்று தானாகவே முளைத்திருந்தது. தெருவில் சென்ற கழுதை ஒன்று வேலிக்குள் தலையை நீட்டி புகையிலைச் செடியின் இலையை தின்ன முயன்றது.

இலையை கடித்தவுடனே அதன் காரம் பிடிக்காததால் செடியை விட்டு விட்டுச் சென்றது.

இதைக் கவனித்த மூத்த அமைச்சர்,

"மன்னர் பிரானே! நம் பீர்பால் விரும்பிச் சுவைக்கும் புகையிலை கேவலம் அந்தக் கழுதைக்குக் கூடப் பிடிக்கவில்லை," என்றார்.


எல்லாரும் அதைக் கேட்டு 'கொல்' என்று சிரித்தனர். பீர்பாலும் சிரித்துக் கொண்டே,

"அமைச்சர் அவர்களே! சரியாகச் சொல்லிவிட்டீர்கள். புகையிலை எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. ஆனால், என்ன செய்வது கழுதைகளுக்கெல்லாம் புகையிலை பிடிப்பதேயில்லை," என்றார்.

தம்முடைய அறிவுத் திறத்தால் தங்களையே கழுதையாக்கி விட்டார் பீர்பால் என்பதை உணர்ந்ததும் மூத்த அமைச்சர் முகத்தில் ஈயாடவில்லை.







1 முதல் 62 வரையுள்ள இலக்கங்களை ஒரு பென்ஸில் கொண்டு கோடு இழுத்துப் பாருங்கள். மறைந்திருப்பது என்னவென்று தெரியும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **06.10.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **414**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 412

பரிசுக்குரியவர்:
ஏ. கிருபாஷினி,
அம்பக்கோட்டை தமிழ் வித்தியாலயம், கெங்கல்ல.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பாத்திமா றுஸ்கா நளீர், மத்திய கல்லூரி, (தேசிய பாடசாலை) மூதூர். | எஸ். ரஷீமா, தமிழ் மகா வித்தியாலயம் (தே.பா), பசறை. |
| எம். முகுந்தன்–எம். கஜேந்திரன், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழு.-04. | அருள்தாஸ் நிபர்சன், சென். மேரிஸ் பாலர் பாடசாலை, பேசாலை. |
| எஸ். கவிஷாலினி, இந்து மகா வித்தியாலயம், புஸ்ஸல்லாவ. | ரி. றீனாஸ், புத்தளம் வீதி, சிலாபம். |
| எம். பிரியதர்ஷினி, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13. | பாத்திமா பர்வின், அல்-அஸார் மத்திய கல்லூரி, தெஹியங்கனை. |
| எம். யுவனி, றோயல் ஆங்கில பாடசாலை, மாத்தளை. | இரா. விகாஷினி, ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன். |

## விடுகதைகளும் விடைகளும்

1. அனல் மேல் கறுப்புக் குதிரை,
அதன் மேல் மாறி மாறிக் குதிக்கிறான்
வெள்ளைக்காரன்.
அவை என்ன?

2. நீ செய்வதை நான் அப்படியே செய்வேன்,
நீ சொல்வது எதையும் நான் செய்யமாட்டேன்.
நான் யார்?

3. நான் எப்போதும் உள்ளே இருப்பேன்,
வெளியே வந்து நல்ல காற்றைச்
சுவாசித்தால் இறந்து போவேன்.
நான் யார்?

4. இருண்டதோர் காட்டிலே மிரண்ட
பன்றியைப் பத்துப்பேர் துரத்தி,
இரண்டுபேர் குத்தினர்.
அது என்ன?

5. வெள்ளைக்குதிரையும் கறுப்புக்
குதிரையும் மாறி மாறி ஓடும்,
யாராலும் அவற்றை நிறுத்த முடியாது.
அது என்ன?

6. வளைந்து வளைந்து போவேன்
பாம்பும் அல்ல; வழி நெடுக நீர்
கொடுப்பேன் மழையும் அல்ல;
காடு மலை சுற்றி வருவேன் கரடியும்
அல்ல;
கடலிலே மூழ்கிடுவேன் மீனும் அல்ல.
நான் யார்?

7. மரகதமணியாய்ப் பிறந்தேன்;
பொன்மணியாய் வளர்ந்தேன்;
முத்துமணியாய் வெடித்தேன்;
உலகைக் காக்கும் தாயுமானேன்.
நான் யார்?

8. வெள்ளை நிலத்தில் கறுப்பு விதை
போட்டேன்;
வாயால் எடுக்கலாம், கையால் எடுக்க
முடியாது.
அது என்ன?

### விடைகள்

(1) தோசைக்கல்- தோசை
(2) கண்ணாடி
(3) மீன்
(4) தலைமுடி-பேன்
(5) பகல்-இரவு
(6) ஆறு
(7) நெல்-அரிசி-சோறு
(8) எழுத்து


தொகுப்பு: கே. ரவீந்திரன்

## கூடுகள்



கழுகு இனத்தைச் சேர்ந்த ராஜாளிக்கும் பருந்துக்கும் சரியாகக் கூடு கட்டத் தெரியாது. இதனால் இவை மலைப்பொந்துகள், இருக்குகள் போன்ற இடங்களை கூடுபோலப் பயன்படுத்தி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன.

***




கடற்பறவைகளான சீகல் மற்றும் பிளெமிங்கோ போன்ற பறவைகள் கரையோரப் பகுதிகளில் குழிவான இடங்களை ஏற்படுத்தி அதன் மேல் சகதியை மேலாக அள்ளிப் போட்டு முட்டையிடும். குஞ்சுகள் பொரித்ததும் குஞ்சுகளே மரங்களுக்குச் சென்று கூடுகளை அமைத்துக் கொள்கின்றன.

***



ஆபிரிக்கக் காடுகளில் அதிகம் காணப்படும் கொரில்லா குரங்குகளும் இந்தோனேசியா நாட்டின் காடுகளில் உள்ள சிம்பன்ஸி குரங்குகளும் மற்றும் சில மனிதக் குரங்குகளும் சமதளக் கூடுகளை மரங்களில் அமைத்துக் கொள்கின்றன.

## பம்பிள் பீ



'பம்பிள் பீ' எனப்படும் பெரிய தேனீக்கள் தேன் கூட்டில் வசிப்பதில்லை. அடர்த்தியான புல்வெளி மற்றும் பெரிய வலைகளில் வசிக்கும். எலி வளைகளைக் கூடத் தாங்கள் தங்குவதற்கு ஏற்ற தற்காலிக இடமாக மாற்றிக் கொள்ளும். மழைக்காலம் முடிவடைந்ததும் ராணித் தேனீ தனது வளையில் இருந்து வழி உண்டாக்கி, அப்படியே தவழ்ந்து வெளியேறிப் புது இடம் தேடும்.

பொதுவாக இந்த ராணித்தேனீ புது இடம் தேடும்போது பூனைகள் அதிகம் வசிக்கும் இடங்களையே தேர்ந்தெடுக்கும். அப்போது தான் இவை கஷ்டப்பட்டு இடும் முட்டைகள் மற்றும் தேனைச் சாப்பிட்டு விடும் எலிகளின் தொல்லையில் இருந்து தப்பிக்கலாம்.

பூனைகள் அதிகமாக இருந்தால் எலிகள் வராது. எனவேதான் ராணித் தேனீ இப்படியான இடங்களைத் தேர்ந்தெடுக்கிறது. ■

# காதல் துரோகி

நிர்மலா-கண்களில் ஏற்பட்ட நீரோட்டத்துடன் முகத்தில் வாட்டத்துடன் அமைதியாக அந்த 'இன்டர் சிட்டி' பஸ்ஸில் அமர்ந்திருந்தாள். அவள் மனம் ஓயாத கடல் அலைகளைப் போல அலை மோதிக் கொண்டிருந்தது. அவளுக்கு வீட்டில் மாப்பிள்ளை பார்த்திருக்கிறார்களாம். உடனடியாக புறப்பட்டு வரும்படி வீட்டிலிருந்து கடிதம் வந்திருந்தது. அவள் கொழும்பில் விடுதியில் தங்கி வேலைப் பார்க்கிறாள். கடந்த மூன்று வருடங்களாக அவள் வேலை செய்து வருகிறாள். சொந்த இடம் நுவரெலியா-நிர்மலா நல்ல அழகானவள். சிவந்த நிறம். மலர்ந்த முகம். எல்லோரிடமும் கலகலப்பாகப் பழகுவாள். ஆனால் மிகவும் கவனமாக இருப்பவள்.

மதியழகன்- கண்டியைச் சேர்ந்தவன். கலகலப்பாக பழகக் கூடியவன். கவர்ச்சியான முகத் தோற்றத்தைக் கொண்ட அவனிடம் பெண்கள் இயல்பாக பழகினார்கள். தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராக இருப்பவன். அவன் வேலை முடிந்து தன் விடுதிக்கு பஸ்ஸில்



தான் பயணம் செய்வான். அவன் பயணம் செய்யும் அதே பஸ்ஸில் தான் நிர்மலாவும் பயணம் செய்வாள். ஒரு முறை நிர்மலா பஸ்ஸில் பயணம் செய்துக் கொண்டிருந்தபோது, அவளின் மணிப்பர்ஸை யாரோ முடிச்சுமாறி கையகப்படுத்தி விட்டிருந்தது. அவள் டிக்கெற் எடுப்பதற்காக தேடியப் போதுதான் தெரிந்தது. அவள் வியர்த்து விட்டாள். என்ன செய்வதென்று தெரியவில்லை. அவளின் தவிப்பை மதியழகன் கவனித்துவிட்டான். அவன் உடனடியாக அவளுக்கும் சேர்த்தே பயணச் சீட்டு வாங்கியதுடன் சீட்டை அவளிடமே கொடுத்தான். அவள் நன்றியுடன் அவனைப் பார்த்தாள்.

மறுநாள்- அவள் அவனிடம் சீட்டுக்கான பணத்தை கொடுக்க முற்பட்டப் போது அவன் புன்னகையுடன் மறுத்து விட்டான். அதற்குப்பின் அவர்கள் நிறைய பேசினார்கள். மனம் விட்டு பேசினார்கள். அடிக்கடி சந்தித்தார்கள். நிர்மலா மதியழகனை நேசித்தாள். மனமார நேசித்தாள். அவன் இல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லையென்றளவுக்கு அவனை உயிராக நினைத்தாள். ஆனால் மதியழகனின் மனதிலுள்ளதைப் பற்றி அவளுக்கு ஒன்றுமே தெரியவில்லை. அவனும் அவளை நேசிக்கிறானா... இல்லை வெறும் நட்புதானா? ஏனென்றால் அவன் பல பெண்களுடன் பழகுபவன்-அந்த பழக்கம் அவளுக்கு தவறாகப் படவில்லை. அவளால் தன் மனதிலுள்ள காதலை அவனிடம் சொல்ல முடியவில்லை. அவன் மறுத்துவிட்டால்- அவனை ஏளனம் செய்து விட்டால்- அதை அவளால் தாங்க முடியாது.

மதியழகன் முதலில் நிர்மலாவை நேசித்தது உண்மைதான். அவளையே மணம் முடிக்கவும் நினைத்திருந்தான். ஆனால் எப்போது ப்ரியாவை சந்தித்தானோ அப்போதே அவன் மனம் மாறி விட்டது. ப்ரியாவும் கண்டியைச் சேர்ந்தவள் தான். அவள் தந்தை ஒரு பெரிய வியாபாரி.

**பாலா.சங்குபிள்ளை**

அவருக்கு நான்கைந்து கடைகள் இருக்கின்றன. ஏராளமான சொத்து. நிர்மலாவை விட ப்ரியா அழகென்று சொல்ல முடியாது. ஆனால் பணம் இருக்கின்றதே. அவ்வளவு பெரிய சொத்துக்கு அவள்தானே ஒரே வாரிசு. எனவே காதலை விட காசுதான் பெரிதென அவன் முடிவு செய்தான். நல்ல வேளையாக அவன் தவறியும் தன் மனதில் இருந்ததை நிர்மலாவிடம் சொல்லவில்லை. அதுவும் நல்லதாக போய்விட்டது. போனவாரம் நிர்மலாவிடம் அவன் தன் மனதிலிருந்ததை மிக நிதானமாக பதற்றமில்லாமல் சொல்லிவிட்டான்.

"நிர்மலா உன்கிட்டே என்னோட சில அந்தரங்க விஷயங்களை சொல்லலாம்னு நினைக்கிறேன். எனக்கு வீட்ல கல்யாணம் பேசிட்டாங்க. பொண்ணுக்கூட கண்டியைச் சேர்ந்தவள்தான். நல்ல வசதி. நெடுநாளா எனக்கு அமெரிக்கா போகணும்னு ஆசை. அந்த ஆசை இந்த கல்யாணத்துனால சரிவரும்னு நினைக்கிறேன். நீயே சொல்லு- அதிஷ்டம் வீட்டுக்கதவை தட்டுறப்போ அதை தட்டிக் கழிக்கப்பார்த்தா நஷ்டம் யாருக்கு.. அதுனாலதான் இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன். நீயும்கூட சீக்கிரமா நல்ல இடம் வந்தா கல்யாணம் செஞ்சிக்கோ. என்னோட கல்யாண அழைப்பிதழ் நிச்சயமா உனக்கு வரும். கட்டாயமா வரணும். என்ன சரிதானே..."

அவன் மிக இலகுவாக அவளிடமிருந்து கழன்றுக் கொண்டான். அவளின் சலனமற்ற மனதில் சஞ்சலத்தை உண்டாக்கி விட்டு, இப்போது சத்தமில்லாமல் மாறி விட்டான். அவள் அழுதாள். வேலைக்குக் கூட போகாமல் நாள் முழுவதும் அழுதுத் தீர்த்தாள். நினைவால் கட்டப்பட்ட அவளின் காதல் கோபுரம் வெறும் கனவாகி போய்விட்டது. இனி என்ன செய்வது? உடைந்துப் போன இதயத்துடன் இறுதி வரை இப்படியே இருந்துவிட வேண்டியது தானா? இதற்கிடையில்தான் நிர்மலாவுக்கு மாப்பிள்ளை பார்த்திருப்பதாகவும் உடனடியாக வரும்படியும் அவளுக்கு வீட்டிலிருந்து கடிதம் வந்திருந்தது.

நிர்மலா-சிந்தனை கலைந்தவளாக நன்றாக சாய்ந்து உட்கார்ந்துக் கொண்டாள். அப்போது வெளியே- மதியழகனின் குரல் கேட்டது. அவன் வாகன சாரதியுடன் பேசிக் கொண்டிருந்தான்.

"எப்படியாவது ஒரு இடமாவது பார்த்து தர முடியாதா... இன்றைக்கு கண்டியில் எனக்கு 'திருமண நிச்சய தார்த்தம். முக்கிய விஷயமாக ஒரு இடத்துக்குப் போய் நேரமாகிவிட்டது. இந்த பஸ்ஸில் போனால் தான் சரியான நேரத்துக்கு போக முடியும்... கொஞ்சம் தயவு பண்ண முடியுமா...?"

அவன் சாரதியுடன் மன்றாடிக் கொண்டிருந்தான். நிர்மலா சட்டென இருக்கையை விட்டு எழுந்தாள். மதியழகனை அழைத்து அவள் இருக்கையில் உட்கார விட்டு, அவள் அடுத்த பஸ்சுக்காக காத்திருந்தாள். மதியழகன் அவளுக்கு நன்றி கூறினான்.

அடுத்த பஸ் ஒரு மணித்தியாலம் கழித்து வந்தது. அவள் அதில் ஏறினாள். அது சாதாரண பஸ்ஸானபடியால் மிக குறைந்த வேகத்தில் ஓடியது. சுமார் ஒரு மணி நேரமிருக்கும். பஸ் சட்டென ஒரு குலுக்கலுடன் நின்றது. பயணிகள் அனைவரும் பரபரப்புடன் வேகமாக இறங்கினார்கள். நிர்மலாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவளும் பஸ்ஸை விட்டு இறங்கினாள். அங்கே ஒரே கூட்டமாக இருந்தது. அவள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஓடினாள். அங்கே படுபாதாளத்தில் பஸ் ஒன்று விழுந்து நொருங்கிப் போயிருந்தது. அந்த பஸ் நிர்மலா வர இருந்த பஸ். மதியழகன் பயணம் செய்த பஸ். அதில் பயணம் செய்த பலர் படுகாயமடைந்திருந்தனர். சிலர் இறந்தும் போயிருந்தனர். இறந்தவர்களில் மதியழகனும் ஒருவன். அவள் உயிரற்ற அவனின் உடலைப் பார்த்து குமுறிக்குமுறி அழுதாள்: ஆனால்- அவன் அவளுக்கு செய்த துரோகத்துக்காகத்தான் இப்படியான தண்டனையை அடைந்து விட்டான் என்று பாவம் அவளுக்கு தெரிய நியாயமில்லை. இப்படியான காதல் துரோகிகளுக்கு இத்தகைய தண்டனைகள் தேவைதான்...

# எண்ணங்கள்

"ரகு உங்க மதரோட ரெண்டு சிறு நீரகமும் செயலிழந்து போச்சு. ஸோ உடனடியா ஒரு மாற்று சிறு நீரகம் பொருத்தணும். இல்லைன்னா அவங்க உயிருக்கு ஆபத்துதான்!" என்றார் டாக்டர் கமலா.

"இல்ல டாக்டர் எங்க அம்மாவை எப்படி சரி காப்பாத்தணும். எனக்கு எல்லாமே எங்க அம்மாதான் டாக்டர்!"

"இங்க பாருங்க ரகு, நீங்க அல்லது உங்க மனைவி ரெண்டு பேர்ல யாராவது ஒரு சிறு நீரகத்தை டொனேட் பண்ணுங்க. ரெண்டு பேரோட பிளட் குருப்பும் உங்க மதரோட ஸேமாத்தான் இருக்கு. டைம்ம



**எஸ்.மனோகரன்-ஹட்டன்**

வேஸ்ட பண்ணாம சீக்கிரம் ஒரு முடிவுக்கு வாங்க!" என்று கூறி அங்கிருந்து அகன்றாள் டாக்டர் கமலா.

ரகுவோ இடிந்து போனான். 'இயல்பாகவே எரிந்து விழும் சுபாவம் கொண்டவள் சுமதி. அவளிடம் இதை எப்படி எடுத்துச் சொல்வது? அப்படியே எடுத்துச் சொன்னாலும் இதற்கு அவள் சம்மதிக்க போவதில்லை. மாமியார் என்றாலே எதிரி என்றும் மடக்கி மட்டம் தட்டி வைக்கப்பட வேண்டியவள் என்பதுதானே எம் பெண்கள் மத்தியில் நிலவும் பொதுமையான கருத்து. இதை தட்டிக் கழிக்க ஆயிரம் காரணங்கள் சொல்வாளே.. அவளை எப்படி சமாளிப்பது.' என்றெல்லாம் பலவாறு குழம்பிப் போனான் ரகு.

அதிர்ந்த முகத்தோடு வராந்தாவுக்கு வந்தான் ரகு அங்கே...! சுமதி

"அத்தைக்கு எப்படிங்க இருக்கு. ஏதாவது பிராபிளமா..?" என்றாள்.

"இல்ல சுமதி பயப்படுற மாதிரி எதுவும் இல்ல. ஆனா எனக்காக இன்னைக்கு மட்டும் இங்கிருந்து அம்மாவ உன்னால பார்த்துக் கொள்ள முடியுமா...?" என்று வினாவ,

"என்னங்க அது என்னோட கடமை. நீங்க போய் காலையில வாங்க. நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று மலர்ந்த முகத்துடன் வழி அனுப்பி வைத்தாள் ரகுவை.

மறுநாள்.

"மிஸ்டர் ரகு உண்மையிலே நீங்க அதிஷ்டசாலிதான். சுமதி மாதிரி ஒரு மனைவி கிடைக்க என்ன புண்ணியம் செய்தீங்களோ..? 'ஸி இஸ் வெரி கிரேட்' உங்க அம்மாவோட ஆப்பரேசன் சக்ஸஸ். அதுக்கு காரணமே உங்க மனைவிதான். அவங்களுக்குதான் நீங்க தேங்க்ஸ் பண்ணணும்!" என்றார் டாக்டர். என்னால் என் காதுகளையே நம்ப முடியவில்லை. வார்த்தைகள் வர மறுக்கின்றன. தடுமாற்றத்துடன்.

"சுமதி உனக்கெப்படி இதெல்லாம் தெரியும்...?"

"நீங்கள்தான் எதையுமே சொல்லாம மறைச்சீங்க. ஆனா டாக்டர் எல்லா விஷயத்தையும் சொன்னாங்க. ஏங்க தெரியாமதான் கேட்கிறேன். மருமகள் மாமியார் என்றால் கட்டாயமா சண்டை போட்டுக்கணுமா என்ன...? இந்த சமூகம் ஏன் மாமியார். மருமகள் என்றால் ஏதோ கீரியும் பாம்புமாகத்தான் இருப்பாங்கன்னு தப்பு கணக்கு போடுது. என்னைப் பொருத்த வரை உங்க அம்மாதான் எனக்கும் அம்மா!" என்று அடுக்கிக் கொண்டே போனாள் சுமதி.

ஆனால் ரகுவால் பேசமுடியவில்லை. அவள் பாதங்களை தொட்டு தழுவுகிறான். கண்ணீர் அவள் பாதங்களை நனைக்கிறது. அவன் கண்ணீருக்குக் காரணம் மகனாய் இருந்து ஒரு தாய்க்கு செய்ய வேண்டிய கடமையை தவற விட்டமைக்காக அல்ல. உயர்வான பெண்ணினத்தின் மீது கொண்டிருந்த தவறான எண்ணங்களுக்காக....

# என்று தணியும் இந்த நகைகளின் மோகம்?

அம்மன் கோவில் திருவிழா என்றாலே அல்வையூர் மக்களுக்கு கொள்ளை சந்தோஷம். என்னதான் போரினால் உயிரிழப்பு, பணக்கஷ்டம், இடம்பெயர்ந்த அவல வாழ்வு என்று சொல்லொணாத துன்பங்கள் நெஞ்சைப் பாறாங்கல்லாக அழுத்தினாலும், அந்த அம்மனிடம் தங்கள் பிரச்சனைகளைச் சொல்லும் போது, நெஞ்சு எப்படி இலேசாகிப் போகிறதென்பது அவளுடைய பக்தர்களுக்கு மட்டும் தான் தெரியும். அன்று புதிய சித்திரத்தேர் முதன் முதலாகக் கோவிலைச் சுற்றி உலா வரப் போகிறது. ஊரே கோவிலில் ஒன்று திரள்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. சிவானந்தம், மனைவி சந்திரா, கனடாவிலிருந்து வந்திருந்த பேத்தி லாவண்யா மூவரும் எல்லோரையும் போலவே பரபரத்துக் கொண்டிருந்தார்கள்.

சிவானந்தம் அரைமணிக்கு முன்பே வேட்டி, சால்வை அணிந்து கொண்டு பொறுமை இழந்தவராகக் குரல் கொடுத்தார்.

"ஏண்டீ! இண்டைக்கு அம்மனுக்குத் தானே விசேஷம்? உங்களுக்கு ஒன்றும் இல்லையே. நான் வெளிக்கிட இரண்டு மணித்தியாலத்துக்கு முதல் இரண்டு பேருமா உள்ளே போனியள். என்னதான் செய்யிறியளோ? பத்து மணிக்கு தேர் இழுக்கிறதெண்டவை. இப்ப பத்தரை ஆச்சு! நான் முன்னுக்குப் போறன். நீங்களிரண்டு பேரும் ஆறுதலா பின்னேரமா வந்து சேருங்கோ" என்று சிவானந்தம் தோளில் போட்ட சால்வை இடுப்பில் கட்டிக் கொண்டு புறப்பட்டார்.

"தாத்தா! இதோ நான் ரெடி" என்று லாவண்யா ஓடி வந்தாள்

"அம்மா லாவண்யா! இஞ்சை கொஞ்சம் வா; இந்தப் பட்டுச் சீலை ஒழுங்காவே பிளீற்ஸ் நிக்காதாம். ஒருக்கால் கையாலை நீவி விட்டு, இந்த அட்டியலையும் பூட்டி விடு மேனை. இந்தச் சுரை கையிலை நிக்காமல் நழுவி விழுகுது." அரை குறையாக உடுத்தியபடி வெளியே வந்த சந்திரா பேத்தியைப் பார்த்ததும் பேயறைந்தது போல் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

காதில் ஒரு சின்ன றோல்கோல்ட் தோடு. கழுத்தில் கறுப்புக் கயிற்றில் பிளாஸ்டிக் மணி கோர்த்து செய்யப்பட்ட மெல்லிய நெக்லஸ், கையில் றப்பர் போல் ஒற்றை வளையம், நுனியில் சீராக வெட்டப்பட்டு தோளில் பரந்திருந்த பளபளத்த மயிர், கணுக்கால்வரை நீண்ட பாவாடை,



இறுக்கமான மேற்சட்டை, இத்யாதிகளுடன் லாவண்யாவைக் காணவும் சந்திராவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

"இதென்னடி கலிகாலம்? உந்தக் கோலத்திலை கோயிலுக்குப் போனால், அல்வாய்ச் சனம் உன்னை மதிக்குமே பிள்ளை? என்ரை சங்கிலி காப்பையும் தோட்ட வேலைக்காக இந்த மனுசன் அடைவு வைச்சுத் தொலைச்சிட்டுது. இப்ப பக்கத்து வீட்டுப் பவானியட்டை ஒரு சங்கிலியும் பின் வீட்டு கனகம்மாட்டை ஒரு சோடி காப்பும் வேண்டி வைச்சிருக்கிறன். மானத்தை இழந்து பல்லைக் காட்டி வேண்டி வைச்சதை போடாமல், இதென்ன குறத்தியள் மாதிரி பாசி மணி மாலையளைப் போட்டு எங்கடை கௌரவத்தைச் சந்தி சிரிக்க வைக்கிறாய். இஞ்சை நான் போட்டிருக்கிற நெக்லஸ்கூட அன்னத்திட்டை கடனா வாங்கினது. அவளுக்கு வருத்தம் வந்தபடியால் நான் தப்பினன். பிள்ளை! கோயிலுக்கு எத்தினை சனம் வரும் தெரியுமே? வாற பொம்பிளையள் முதல்லை பாக்கிறது இந்த உடுப்பையும் நகையளையும் தான். என்ரை ராசாத்தி! இதைப் போடு மேனை. நீ கனடாவிலை இருந்து வந்து இப்பிடி மூளியாப் போனால் எங்கடை குடும்பமானம் என்னாகிறது?" மூச்சு விடாமல் படபடவென்று பொரிந்த சந்திராவுக்கு ஆற்றாமையிலும் இயலாமையிலும் மூச்சிரைத்தது.

"ஏண்டி இவளே! இப்ப என்ன கோயிலுக்கு கும்பிடப் போறியா, அல்லது உன்ரை உடுப்பையும் நகைகளையும் காட்டப்போறியா? இரவல் நகை வேண்டிப் போட்டுக் கொண்டு போகாட்டால், அம்மாள் என்ன உன்னைக் கண்டவுடனை முகத்தைத் திருப்பி விடுவாவா? எப்பதான் இந்தப் பெண்கள் திருந்தப் போகிறார்களோ?" சிவானந்தம் பெருமூச்சு விட்டார்.

"உங்களுக்கு ஒரு இழவும் தெரியாது. அங்கை தெரிஞ்சவை கண்டால் நாக்கைப் பிடுங்கிற மாதிரியல்லோ கேள்வி கேப்பினம். போன தேருக்கு என்ரை தாலியையும் அடைவு வைச்சிட்டியள். கோயிலுக்குப் போக, 'ஏண்டீ! உன்ரை புருஷன் தாலியைக் கூட விடமாட்டாரா' எண்டு என்ரை மச்சாள் பரிதாபமாகக் கேட்டபோது, நான் அழுத அழுகை உங்களுக்கெங்கை தெரியப் போகுது?" அந்த சம்பவத்தை நினைக்க அப்போதும் சந்திராவின் கண்கள் நீரில் நிறைந்தன.

"அம்மாளாச்சி இந்தப் பொம்பிளையளை திருத்தி நல்ல பக்தைகளாக உன்ரை சந்நிதானத்திற்கு வரப்பண்ணம்மா. உனக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும் தாயே!" மனக்குமுறலுடன் தலைக்கு மேல் கையைக் கூப்பினார் சிவானந்தம்.

"தூ? பொம்பிளையளின்ரை மனசைப் புரிஞ்சு கொள்ளாத மனுசன். அவர் கிடக்கட்டுமம்மா. இந்தச் சங்கலியையும் ஒரு சோடி காப்பையுமாவது போடு பிள்ளை. எங்கடை இனஞ்சனம் கனடாவுக்குப் போனாலும், எங்கடை குடும்பம் பிச்சைதான் எடுக்குது எண்டு கிசுகிசுப்பினம்." கெஞ்சினாள் சந்திரா.

"பாட்டீ! பிளீஸ், என்னைக் கம்பெல் பண்ணாதேங்கோ. கனடாவிலை யங் கேர்ல்ஸ் பவுண் நகையே போடுறேல்லை. உடம்பை ஸ்லிம்மா வைச்சுக் கொண்டு, சிம்பிளா றோல்ட்கோல்ட் நகையளையும் போட்டு லிப்ஸ்ரிக், நெயில் பொலீஷ், ஐடெக்ஸ் என்று அலங்காரம் செய்தால் தான் ஃபாஷன். இப்பிடிக் கிலோ கணக்கிலை நகை ஸ்ரான்ட் மாதிரி சில வயசு வந்தவர்கள் தான் கோயிலுக்கு, கலியாண வீட்டுக்கு வருவார்கள். இதெல்லாம் உங்கடை ஜெனரேஷனோடை போகட்டும். எங்களை ஏன் பாட்டீ உங்களைப் போல கர்நாடகமாக்கிறியள்" லாவண்யா சிணுங்கினாள்.

"நீ வாம்மா. உதுகளை இந்த ஜென்மத்திலை திருத்த முடியாது. இழவு வீட்டுக்கு போறதெண்டாலும் கடன்பட்டாவது ஒரு சங்கிலிகாப்பாவது வாங்கிப் போட்டுக் கொண்டு போனால் தான் கௌரவமாயிருக்கும் எண்டு நினைக்கிற இந்த சமுதாயம் இருக்கிறவரை எங்களைப் போல நடுத்தரவர்க்கத்து ஆம்பிளையளுக்கு விடிவில்லை. ம்.. என்ன செய்யிறது?" நீண்ட பெருமூச்சுடன் சூனியத்தை வெறித்தார் சிவானந்தம்.

"ஐயோ, என்ன பாவஞ் செய்தனோ? அவள் கனகம், ராணி, கமலா, பாப்பா எண்டு எல்லாரும் வருவாளுகளே. அவளுகள் என்ரை பேத்தியைக் கண்கொத்திப் பாம்பு மாதிரிப் பாத்திட்டு நான் நாக்கைப் பிடுங்கிற மாதிரி எல்லோ கேள்வி கேக்கப் போகிறாளவை. ஏண்டீ உங்கடை பரம்பரையிலை யாருமே ஒரு குண்டு மணி நகைகூட சொந்தமா வைச்சிருக்கிறேல்லையோ எண்டு இளக்காரம் பண்ணுவாளவை. எல்லாம் என்ரை தலை விதி! அம்மாளே? நீயெண்டாலும் இந்த மனுசனுக்கு மூளையிலை உறைக்கத் தக்கதா சொல்லமாட்டியா? இண்டைக்கு அங்கை வந்து என்ரை இனஞ் சனத்திட்டை என்ன பாடுபடப் போறனோ? அம்மா! என்னைக் காப்பாற்று தாயே!" சந்திரா மனமுருகி வேண்டினாள்.

"எதெதுக்கு அம்மாளைக் கூப்பிடுறதெண்டு ஒரு விவஸ்தையே கிடையாது? நகை போடாமல் கோயிலுக்கு போனால் ஒண்டும் நஷ்டம் வரப் போறதில்லை. மனசிலை களங்கமில்லாமல் நல்ல நினைவோடை வா. அது போதும் அந்த அம்மாளுக்கு. நிச்சயமா உன்ரை நகையையோ உடுப்பையோ அவ பாக்க மாட்டா. அதற்கு நான் பொறுப்பு. வா பிள்ளை. தேர் வடக்கு வீதிக்கு வந்திடும்." மளமளவென்று நடையைக் கட்டினார் சிவானந்தம்.

"கட்டின பெண்சாதிக்கு கழுத்து நிறைய நகையளை வாங்கிப்போட்டு மற்றவைக்கு முன்னாலை தலை நிமிர்ந்து நடக்க வைக்கத்துப்பில்லை. கதைக்க மட்டும் குறைச்சலில்லை. அவள் விமலா, பதினைஞ்சு திருவிழாவுக்கும் கட்டப் பதினைஞ்சு சீலை வைச்சிருக்கிறாளாம். அவள் சொல்ல என்ரை வயிறு பற்றி எரிஞ்சதை இந்த மனுசனுக்குத் தெரியப் போகுதா? நான் பாவி இந்தக் குடும்பத்திலை வந்து வாழ்க்கைப்பட்டு என்ன பாடு படுறன்!" புறுபுறுத்தபடி சந்திரா கணவனைப் பின் தொடர, பாட்டியின் மனத் தாங்கலுக்கு அர்த்தமே புரியாமல் முழித்தபடி லாவண்யா பேரனுடன் இணைந்து கொண்டு கோவிலை நோக்கி நடந்தார்கள்.

**அல்வையூர் காந்தி-அருணாசலம்-கனடா**

**அசத்தல் தொடர் 04**

சந்திரமோகனின் கண்களில் கொத்தாகத் திகைப்பு... கொஞ்சம் ஸீரியசானார்.

லீமா தொடர்ந்தாள். "இப்போ இந்த எலக்ட்ரோ ஐ ப்ராஜெக்ட்டின் கடைசி கட்டத்தில் வந்து நிற்கறேன் டாக்டர். அந்தக் கடைசிக் கட்டம் வெற்றியடையறது உங்க கையில்தான் இருக்கு. அதுக்காக இங்கே வலுக்கட்டாயமா கொண்டு வந்தது."

"நான் என்ன செய்யணும்..?"

"நான் உருவாக்கியிருக்கும் விஷுவல் மின் துடிப்புக்களை மனித மூளையின் ஸெரிப்ரல் கார்ட்டெக்சோட இணைக்க உதவணும்."

"அனுமதி கிடைக்கலை. உயிர்ப்பலிகள் சாத்தியம்ங்கறதால அனுமதி தர மறுத்துட்டாங்க. சட்ட விரோதமாத்தான் இதை நான் செய்யப்போறேன்."

"இந்த சட்ட விரோதமான காரியத்துக்கு நான் துணை போக தயாராயில்லை."

"அட, இப்படிச் சொல்றதுக்காகவா உங்களை இப்படி கூட்டிட்டு வந்திருக்கோம்."

"என் உயிரே போனாலும் சரி... நான் இந்த விபரீத பரிசோதனைக்கு ஒத்துழைப்புத் தரமாட்டேன்."

ஹோட்டல் காம்பவுண்டுக்கு அப்பால் தெரியும் சுறுசுறுப்பான போக்குவரத்துச் சாலையில் அவன் கண்கள் நிலைத்திருந்தன. மனசு தீவிரமாய் யோசித்தது.

'எப்படியாவது இந்த வேலையை வாங்கிவிட வேண்டும்.'

இந்த வேலைக்கான விளம்பர வாசகம் மனசுக்குள் ஸ்டில் போல ஒட்டியிருந்தது.

'ஒரு மருத்துவ நிறுவனத்தில் லேப் அசிஸ்டென்ட்டாகப் பணி புரிய ஆரோக்கியமான இளைஞர்கள் தேவை. கல்வித் தகுதி. ஏதேனும் ஒரு பட்டம். சம்பளம் ரூ 8,000+அலவன்ஸ். தங்களைப் பற்றிய விபரங்களை ஒரு பாஸ்போர்ட் சைஸ் புகைப் படத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய முகவரி: த.பெ. எண். 1018....

இன்டர்வியூ முடிந்து வெளியே வந்த ஒரு இளைஞனை மிச்சமிருந்தவர்கள் ஆர்வமாய் மொய்த்தார்கள்.

# ஓடாதே! ஒளியாதே!

"இது சாத்தியமே இல்லை..."

"ஏன் சாத்தியமில்லை?"

"இயற்கையோடு நம்மாலே போட்டி போடவே முடியாது. ஏன்னா இயற்கையில் கண்ணுக்கும், மூளைக்கும் இடையில் கோடிக்கணக்கான கனெக்ஷன்!"

"அதைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்க டாக்டர். இது சிலிக்கன் யுகம். ஒரு சின்ன சிலிக்கன் சிப்பில் லட்சக்கணக்கான சர்க்யூட்களை அடக்கி வெக்கறயுகம். கண்ணுக்கும், மூளைக்கும் இடையிலான அந்த ஏராளமான கனெக்ஷன்களை ஒரு எளிய சிப் வடிவத்துக்கு நான் கொண்டு வந்திருக்கேன். இதோ பார்த்தீங்களா!"

ஆட்காட்டி விரலில் நுனி அளவுக்கே இருந்த அந்த மைக்ரோ சிப்பைக் காட்டினாள் லீமா.

"இந்த சின்ன சிப்பை மூளையில் எந்த இடத்தில் பொருத்தினா ட்ரான்ஸ்ட்யூசரின் மின் துடிப்புக்களை மூளையின் கார்ட்டெக்ஸ் பகுதி முழுமையா வாங்கிக்கும்ன்னு நீங்க கண்டுபிடிச்சு சொல்லணும்."

சந்திரமோகன் பெருமூச்சு விட்டார். "புரியுது... இந்த சிப்பை மூளைக்குள் பொருத்தமான இடத்தில் பொருத்திட்டா-கண்கள் இல்லாமலே மன பிம்பங்களை உண்டாக்க முடியும்-ட்ரான்ஸ்ட்யூசரின் உதவியால்!"

"சரியா புரிஞ்சிட்டிங்க..."

"அதாவது மின்சாரப் பார்வை-இன்னும் சொல்லப் போன செயற்கைப் பார்வை! பார்வை இல்லையேன்னு இனி யாருமே கவலைப்படத் தேவையில்லை. மூளையைத் திறந்து சிப்பைப் பொருத்தி ட்ரான்ஸ்ட்யூசரை முகத்தில் மாட்டிக்கிட்டா போதும்."

"எஸ் டாக்டர்! ஆனா காஸ்ட்லி. பெரிய பணக்காரங்களுக்கு மட்டுமே உபயோகப்படும். பரவலான புழக்கத்துக்குக் கொண்டு வர்றப்ப செலவை குறைக்க வாய்ப்பிருக்கு."

"அவசரப்பட்டு கற்பனை உலகில் சஞ்சரிக்காதே. மனித மூளையில் சிப்பைப் பொருத்தறது-பொருத்தறதுக்கான இடத்தை லொகேட் பண்றதும் சுலபமான விஷயமில்லை."

"எங்களைப் போல ஆட்களுக்கு அது கஷ்டமான விஷயம்தான். ஆனா நியூரோ சயன்சில் பழந்தின்னு கொட்டை போட்டு இருக்கும் உங்களைப் பொறுத்தவரை அது சுலபமான விஷயம். அதனாலதான் உங்களை இங்கே கூட்டி வந்திருக்கேன்."

"மூளையில் பரிசோதனைங்கறது விளையாட்டுக் காரியமில்லை. கரணம் தப்பினா மரணம். இந்தப் பரிசோதனைக்கு தைரியமா தலையைத் தர யார் தயாரா இருப்பாங்க?"

"அதைப் பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம். எல்லா ஏற்பாடுகளையும் நான் செஞ்சு தரேன். ஹோட்டல் சவேராவில் நாளைக்கு இண்டர்வியூ நடக்கப்போகுது. அந்த இண்டர்வியூவில் ஒரு தலை தேர்ந்தெடுக்கப்படும்."

"இன்டர்வியூவா?"

"ஆமா. லேப் அஸிஸ்டென்ட் தேவைன்னு விளம்பரம் தந்திருக்கோம். நிறைய விண்ணப்பங்கள் குவிஞ்சிருக்கு."

"ஆசை காட்டி கான்டிடேட்டை எடுத்து அவன் சம்மதமில்லாமலே பரிசோதனையை மேற்கொள்ள திட்டமா?" -

சிரித்தாள் லீமா. "சம்மதம் கேட்டா பலியாடை வெட்டறோம்."

"இது கொலைக்குச் சமம்."

"டாக்டர்களின் கத்திபட்டு இறந்தா அதுக்குப் பேர் கொலையில்லை டாக்டர்."

"இந்த மாதிரி பரிசோதனைக்கு அரசாங்கத்தின் அனுமதி வேணும்."



"உங்க உயிர் போனா பரவாயில்லைன்னு விட்டுருவீங்க. உங்க ஒரே மக ஆர்த்தியின் கற்போ, உயிரோ பறி போகுதுன்னா அதே மாதிரி விட்டுருவீங்களா டாக்டர்?"

சந்திரமோகனிடம் அதிர்ச்சி.

"என்ன சொல்றே?"

தன்கையிலிருந்து கார்ட்லெஸ் டெலிஃபோனில் எண்களை அமுத்தி ரிசீவரை அவரிடம் நீட்டினாள் லீமா.

"உங்க மகளோட பேசுங்க."

"ஆர்த்தி..." வாங்கி பேசினார்.

ஆர்த்தியின் பயந்த குரல் ரிசீவர் வழியே கேட்டது.

**கிரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஷ்குமார்**

"அப்பா... நீங்க எங்கிருக்கீங்க? நீங்க போன கொஞ்ச நேரத்திலேயே ரெண்டு பேர் நம்ம வீட்டுக்குள்ளே புகுந்து என்னை துப்பாக்கி முனையில் மிரட்டி உக்கார வெச்சிருக்காங்க. நீங்க ஆல்வா ஆஸ்பிட்டல் போகலையாம். இவங்க உங்களைக் கடத்தி இருக்காங்களாம். இவங்க சொல்ற வேலைக்கு நீங்க ஒத்துழைப்புத் தரலைன்னா... என்னை.. என்னை... அப்பா எனக்கு பயமா இருக்குப்பா..." அழுதாள் ஆர்த்தி.

லீமா புன்னகைத்தாள்.

சந்திரமோகன் உறைந்து போய் அவளைப் பார்த்தார்.

✪✪✪

ஹோட்டல் சவேரா.

அறை எண் பதினெட்டுக்கு எதிரே வராந்தாவில் ஃபைல்களோடு இளைஞர்கள் காத்திருந்தார்கள்.

முரளி ஓரமாய் நின்றிருந்தான்.

"என்னாச்சு?"

"போகச் சொல்லிட்டாங்க."

"ரிசல்ட்...?"

"ரிசல்ட்டெல்லாம் தெரியலை. வீட்டுக்குப் போகலாம்ன்னு சொல்லிட்டாங்க."

"என்ன கேட்டாங்க...?"

"அவங்க என்ன எதிர்பார்க்கறாங்கன்னே தெரியலை. ஃபைல் நிறைய ஸ்போர்ட்ஸ் சர்டிபிகேட்ஸ் காட்டினேன். டிஸ்டிங்ஷன் மார்க் வாங்கிருக்கேன். அதையெல்லாம் விட்டுட்டு சில படங்களையும், புள்ளி வெச்ச சார்ட்களையும் காட்டி படிக்கச் சொல்றாங்க. என்ன தெரியுது அந்தப் படத்துலன்னு திரும்பத் திரும்பக் கேக்கறாங்க. வீட்டுல யார் யார் இருக்காங்கன்னு உப்புச் சப்பில்லாத கேள்விகள்."

"ஹோப் இல்லையா?"

"சுத்தமா இல்லை. ஏற்கெனவே ஆளை செலக்ட் பண்ணி வெச்சிட்ட மாதிரித்தான் தோணுது. என்னைக் கேட்டா இந்த இன்டர்வியூவே ஐ வாஷ்ன்னுதான் சொல்லுவேன்."

மிச்சமிருந்தவர்களை வெறுப்பேற்றி விட்டு வராந்தாவில் கரைந்தான் அவன். முரளிக்குக் கவலையாய் இருந்தது. அடுத்தடுத்து இன்டர்வியூ முடிந்து வருகிற எல்லோருமே ஏறக்குறைய இதே போல் சொல்ல-தளர்ந்தான்.

ஒரே ஒரு இளைஞன் மட்டும் புன்னகை முகத்தோடு வந்தான். இன்டர்வியூ நடத்தியவர்கள் அவனை மட்டும் சற்று நேரம் காத்திருக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். நம்பிக்கை தவழும் முகத்துடன் காத்திருந்தான் அவன்.

அவனோடு பேசிப் பார்த்ததில் முரளிக்கு ஒரு விஷயம் புரிந்தது. அவனை ஏன் இருக்கச் சொன்னார்கள் என்ற காரணத்தை ஒருவாறாக யூகம் செய்து கொண்டான் முரளி.

அந்த யூகம் சரியானால் ஒரு பொய்யை சொல்லித்தான் அந்த வேலையைப் பெற முடியும் என்பதும் புரிந்தது. **(வரும்)**

# உளவுத் துறையினருக்கு டிமிக்கி கொடுத்த வீரப்பன் மனைவி

சந்தனக்கடத்தல் மன்னன் வீரப்பன் பற்றிய செய்திகள் தமிழகத்தில் ஓய்வதேயில்லை. அவரது அரசியல் தொடர்பு குறித்தும், ஆட்கடத்தல்கள் தொடர்பாகவும் அடிக்கடி செய்திகள் வெளியாகும். இப்போது வீரப்பனின் மனைவி முத்துலட்சுமியைக் காணவில்லை என்று தேடுகிறார்கள். பாடசாலையில் படித்த தனது மகளுடன் முத்து லட்சுமி தலைமறைவாகி விட்டதாக கூறப்படுகிறது. எங்கே போயிருப்பார் என்று முடியை பிய்த்துக்கொள்கின்றது இந்திய உளவுத்துறை.



"தமிழக-கர்நாடக அதிரடிப் படைகள் வீரப்பன் தேடுதல் வேட்டையைத் தீவிரமாக நடத்திவரும் வேளையில் தமிழகக் காவல்துறையின் உளவுப் பிரிவுகள் வேறொரு வி.ஐ.பி.யை சல்லடை போட்டுத் தேடி வருகின்றன.

அந்த வி.ஐ.பி. -வீரப்பன் மனைவி முத்துலட்சுமி.

மேட்டூரில் பெட்டிக்கடை நடத்தி அதில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் பிழைப்பு நடத்தி வருவதாகச் சொன்ன திருமதி வீரப்பன், கடந்த மூன்று மாதங்களாகத் தன்னைச் சுற்றி இருந்த போலீசாரின் கண்காணிப்பு வளையத்தையும் மீறி தற்போது அப்ஸ்காண்ட் ஆகி விட்டார்.

சேலம் மாவட்டத்துக்கு வெளியே நடந்த தமிழர் வாழ்வுரிமை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பல மாநாடுகளில் தொடர்ந்து முத்துலட்சுமி கலந்து கொண்டு வந்தார். இப்படி அவர் வெளியூர் போகும் போதெல்லாம் அவரைக் கண்காணிக்க 'ஷேடோ வாட்ச்' எனப்படும் நிழல் கண்காணிப்பு வளையம் அமைக்கப்பட்டது. அப்போதெல்லாம் அவர் யார் யாரைச் சந்திக்கிறார் என்று அவரது ஒவ்வொரு அசைவுகளையும் கண்காணித்து வந்தது உளவுத்துறை. இப்போது கொஞ்சம் அசட்டையாக இருந்ததன் விளைவு... முத்துலட்சுமியைக் காணவில்லை. உளவுத்துறைக்கு இது புதிய தலைவலி.

வீரப்பனின் மகள் வித்யாராணி மேட்டூர் செயிண்ட் மேரீஸ் பள்ளியில் படித்து வந்தாள். மேட்டூரிலேயே தனது தாய் முத்துலட்சுமி இருந்தபோதிலும் பள்ளியின் விடுதியிலேயே அவள் தங்கிப் படித்து வந்தாள்.

ஆனால் இந்த ஆண்டு நான்காம் வகுப்பைத் தொடர வேண்டிய நிலையில் கடந்த மே மாதம் 20-ம் தேதி வித்யாராணியின் டி.சி. பெறப்பட்டுள்ளது. மிகவும் ரகசியமாகப் பள்ளியில் இருந்து மகளை அழைத்துக் கொண்டு எங்கோ சென்று விட்டார் முத்து லட்சுமி. நெருப்பூரில் உள்ள அவரது அப்பா வீட்டிற்கும் அவர் செல்லவில்லை.

அவர்களை இன்று வரை கண்டு பிடிக்க முடியாமல் தத்தளிக்கிறது உளவுத் துறை. திருச்சியில் உள்ள ஒரு பெரிய பள்ளிக்கூடத்தில் தனது மகளைப் படிக்க வைக்கப் போவதாகச் சொல்லியே டி.சி.யைப் பெற்றிருந்திருக்கிறார் முத்துலட்சுமி என்ற தகவல் உளவுத் துறையினருக்குக் கிடைக்கவும் அங்கு விரைந்தது உளவுத்துறை.

ஆனால் முத்துலட்சுமி சொன்னதாகக் கூறிய அந்தப் பள்ளியிலும் வித்யாராணி சேர்க்கப்படவில்லை. அந்தப் பெயரில் எந்தக் குழந்தையுமே தங்கள் பள்ளியில் சேர்க்கப்படவில்லை என்று பள்ளி நிர்வாகம் தெரிவிக்க, தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது உளவுத்துறை.

திருச்சி, சிதம்பரம், கடலூர், பாண்டி, கோவை, பெங்களூர் என பல ஊர்களில் தேடியும் அவர்களுடைய இருப்பிடத்தை இன்றுவரை கண்டறிய முடியவில்லை.

வீரப்பனின் மனைவியையும், மகளையும் தீவிரமாகப் பொலீசார் தேடுவதன் முக்கியத்துவம் பற்றி அண்மையில் அதிரடிப்படையில் இருந்து ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர் கூறியதாவது:

"நடிகர் ராஜ்குமார் மீட்பு முயற்சியின் கடைசிக் கட்டத்தில் சூரியசக்தியில் இயங்கும் சோலார் செல்லுலர் போன் மூலம் வீரப்பன் அவனது மனைவி முத்துலட்சுமியுட னும் மகளுட னும் மூன்றரை மணி நேரம் பேசியிருக்கிறான். இந்த தொலைபேசி உரையாடலில் குடும்பம், பாசம் என்ற செண்டிமெண்டுகளே அதிகம். அதுதான் ராஜ்குமாரை வீரப் பன் விடுவிக்கக் காரணமும்கூட

இப்போதும் அப்படி ஒரு சென்டிமெண்ட் ஏற்பட்டிருக்கலாம். அதற்காக முத்துலட்சுமி தனது கணவனைச் சந்திக்க காட்டுக்குத் தனது மகளையும் அழைத்துச் சென்றிருக்கக்கூடும் என்று உளவுத்துறை உறுதியாக நம்புகிறது. அவர்கள் காட்டின் எல்லைப் பகுதியில்தான் எங்கோ இருக்கக்கூடும் என்றும் உளவுத் துறை நம்புகிறது. ஒரு வேளை அது உண்மையாக இருந்தால் அவர்களையே துருப்புச் சீட்டாக வைத்து வீரப்பனை எளிதில் பிடித்து விடலாம் என்பதே அவர்களது எண்ணம். அதனால் தான் இவ்வளவு தீவிரமாக அவர்களைத் தேடிப்பிடிக்க முயற்சிகள் நடக்கின்றன" என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஒருவேளை அப்படியும் இருக்குமோ?

# எஸ்.டி.எஸ். தொடர் 70

## கனடா வாசகரின் கூற்று

மட்டக்களப்புத் தமிழகத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி எவ்வாறு பரவியது. இதற்கான கால தேச வர்த்தமானங்கள், சாதகபாதகமான அம்சங்கள், கட்சியின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தவர்கள் போன்ற அம்சங்களைத் தொகுத்தளிக்கும் நோக்குடன்தான் இத் தொடர் ஆரம்பிக்கப்பட்டது.

திரு.எஸ்.டி சிவநாயகம் அவர்கள் மட்டக்களப்பு மாநிலத்தின் சமுதாய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து பணிபுரிந்தவர். பல துறைகளிலும் மட்டக்களப்பு மாநிலம் முன்னேற வேண்டும் என்று சிந்தித்துச்செயற்பட்டவர். அவருடைய மறைவை கால்கோளாக வைத்தே இத் தொடருக்கு ஈழத்தின் இணையற்ற எழுத்துச் சிற்பி எஸ்.டி.சிவநாயகம் என்று மகுடமிட்டேன்.

இத்தொடரின் காரணத்துக்கு அனுசரணையான ஒரம்சம் பகுத்தறிவு இயக்கம், இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆகியவற்றின் இணைப்பு, தோற்றுவாய் என்பன இணைக்கப்பட்டன.

தமிழ் காங்கரசை உருவாக்கிய திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் அமைச்சராகச் சேர்ந்து தமிழ் மக்களின் பாராளுமன்ற பிறப்புரிமையை சரி அரைவாசியாகக் குறைக்கும் பாதகமான சட்டம் நிறைவேற்றப்படுவதற்குச் சாதகமாக இருந்தார் என்பது வரலாற்று உண்மை. இதனைக் குறிப்பிடும்போது, 'இந்நாடு சுதந்திரமடைந்து முதலாவது பாராளுமன்றம் அமைக்கப்பட்டதும், இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்ட மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை சரி அரைவாசியாகக் குறைத்தது. இச்சட்டத்துக்கு மாறாகப் பேசி வந்த திரு.பொன்னம்பலம் அவர்கள் தமது அமைச்சர் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தார் என்பதைக் குறிப்பிட்டிருந்தேன்.

"இன்று மலையகத் தமிழருக்கு விழும் அடி நாளை இலங்கையின் பூர்வீக குடிகளெனக் கூறிக்கொள்வோருக்கும் விழும்!" என்று தந்தை செல்வா அவர்கள் கூறியதையும், அவருடைய பாராளுமன்ற உரையையும் தந்திருந்தேன்.

இம்மசோதா முதலாவது பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட முதலாவது மசோதா என்று பொதுப் படையாகக் குறிப்பிட்டேன். வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்து சரியான காலத்தையும் மசோதா இலக்கத்தையும் குறிப்பிட வேண்டும் என்ற அவசியம் இருக்கவில்லை. ஏனெனில் இச்சம்பவம் உண்மையிலேயே இடம் பெற்ற ஒன்று.

இருப்பினும் கனடா- மொன்ரியலில் வசிக்கும் திரு.ஜி.எஸ்.செல்லத்துரை அவர்கள். கட்டுரை ஆசிரியர் வரலாற்றை திரிவுபடுத்தி எழுதுகிறார்; சொந்தக் கற்பனையையும் பொய்யான தகவல்களையும் எழுதுகிறார் என்ற குற்றச்சாட்டுகளுடன் கூடிய நெடிய கடிதத்தை வரைந்துள்ளார்.

இருப்பினும் இந்திய-பாகிஸ்தானியக் குடியுரிமைச் சட்டம் 1949ம் ஆண்டின் 3ம் இலக்கம் கொண்ட சட்டமாகும்' என்றும் இம்மசோதாவுக்கு திரு.பொன்னம்பலம் தனது ஒப்புதலையும் அளித்துள்ளார் என்பதையும் மறக்காமல் குறிப்பிட்டுள்ளார்.

இம்மசோதா பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டதையும் இதற்கு திரு.பொன்னம்பலம் அவர்கள் வாக்களித்தார் என்பதையும் திரு.செல்லத்துரை அவர்கள் மறுக்காமல் ஒப்புக் கொண்டுள்ளார் என்பதையும் ஆதாரபூர்வமாக பாராளுமன்ற நடவடிக்கைப் பதிவேடான 'ஹன்சாட்'டையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். இந்த விவரங்களைத் தந்தமைக்காக அவருக்கு வாசகர்கள் சார்பில் நன்றி தெரிவிக்க வேண்டியது நமது கடமையாகும்.

சட்டத்துக்கான திகதியையும் இலக்கத்தையும் நான் குறிப்பிடாமல் விட்டமைக்காகக் கொதித்தெழும் திரு.செல்லத்துரை அவர்களின் கூற்றுக்கு அவர் தமிழரசுக் கட்சி மீது கொண்டிருக்கும் வெறுப்புணர்ச்சி தான் காரணம் என்பதை, அவருடைய நீண்ட கடிதத்தின் 5ம் பக்கத்தில், அவர் 'சுதந்திரன்' பத்திரிகையையும் தமிழரசுக்கட்சியையும் பொருத்தமில்லாமல் சாடியிருப்பதிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

திரு.செல்லத்துரை அவர்கள் எழுதியுள்ள கடிதம் முழுவதையும் வாசகர்களுக்குத் தருவது இயலாத காரியம் என்பதனால், சில முக்கியமான பகுதிகளை மட்டும் இங்கு தருகிறேன்.

"இந்திய-பாகிஸ்தானியக் குடியுரிமைச் சட்டம் முதலாவது பாராளுமன்றத்தில் முதலாவது பிரேரணையாக முன்வைக்கப் பட்டது" என்றும் "இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டம் அமுலாக்கப்படுமானால், இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்படவிருக்கும் தீமையை நன்குணர்ந்த திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் குடியுரிமைச் சட்டத்திற்குச் சார்பாக வாக்களித்தார்." எனக் குறிப்பிட்டுள்ளமை உண்மைக்குப் புறம்பானது மட்டுமல்லாமல், தவறான வரலாற்றுக் குறிப்பாகவும் உள்ளது.

திரு.இரா.பத்மநாதன் கூறியிருப்பது போல "இந்திய-பாகிஸ்தானியக் குடியுரிமைச் சட்டம் முதலாவது பாராளுமன்றத்தில் முதலாவது பிரேரணையாக முன்வைக்கப்படவில்லை. இச்சட்டம் 1949ம் ஆண்டின் 3ம் இலக்கம் கொண்ட சட்டமாகும்.

உண்மையில் எந்தச் சட்டத்தினால் மலையக மக்களின் குடியுரிமை எவ்வாறு பறிக்கப்பட்டதென்பதை நோக்குவோம்.

1948ம் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. அன்றைய இலங்கையின் பிரதமராக இருந்த டீ.எஸ்.சேனநாயக்கா, பிரதமராக வந்தவுடன் செய்த முதல் வேலை இந்திய வம்சாவழி மக்களுக்குக் குடியுரிமையையும், வாக்குரிமையையும் இல்லாமல் செய்தமையாகும்.

இதற்காக 1948ம் ஆண்டின் 18ம் இலக்கம் கொண்ட இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை (Ceylon Citizenship ACT No. 18 Of 1948) அவர் கொண்டுவந்தார். இந்தச் சட்டம் தான் முதலாவது பாராளுமன்றத்தில் மலையக மக்களின் குடியுரிமையைப் பறித்த சட்டமாகும்.

இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தபோது திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கண்டித்துப் பேசி, இந்த நாள் இலங்கை வரலாற்றில் ஒரு கறுப்பு நாள் என வர்ணித்து இச்சட்டத்திற்கு எதிராக வாக்களித்தார். இச்சட்டத்திற்கு எதிராக அன்று தமிழ் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்றத்தில் இருந்த அனைவரும் எதிர்த்து வாக்களித்தனர்.

ஆதாரம்: இலங்கைப் பாராளுமன்றப் பதிவேடு (கன்சாட்) வெள்ளிக்கிழமை 20ம் திகதி ஆகஸ்ட் மாதம் 1948ம் ஆண்டு (Friday August 20th 1948 Munute of the House of Representative-Hasard)

இந்தச் சட்டம்தான் மலையக மக்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தது.

1948ம் ஆண்டின் 18ம் இலக்கம் கொண்ட இலங்கைக் குடியுரிமைச் சட்டம் (Ceylon Citizenshiop Act No:18 of 1948) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதால் மேற்கூறிய அனர்த்தங்களுக்கு மலையக மக்கள் உள்ளாக்கப்பட்டார்கள்.

இந்தச் சட்டத்தினால் மலையக மக்கள் குடியுரிமையையும், வாக்குரிமையையும் இழந்ததினால் நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்பினாலும் அன்றைய காலத்தில் இந்திய பிரதமராக இருந்த ஜவகர்லால் நேருவிற்கும், இலங்கை பிரதமராக இருந்த டீ.எஸ்.சேனநாயக்காவின் அரசாங்கத்திற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பயனாகவும், மலையக மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கத்தோடும் கொண்டுவரப்பட்டது. இந்திய பாகிஸ்தானிய வதிவிட (குடியுரிமை) சட்டம்.

இந்தச் சட்டம் 1949ம் ஆண்டின் 3ம் இலக்கம் கொண்ட இந்திய-பாகிஸ்தானிய வதிவிட குடியுரிமைச் சட்டமாகும்.

(Indian and Pakistani Residents (Citizenxhip ACT No:3 Of 1949)

இச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட போது இச்சட்டத்துக்கு ஆதரவாக திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் வாக்களித்தார். ஏனெனில் 1948ம் ஆண்டின் 18ம் இலக்கம் கொண்ட இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தினால் குடியுரிமையையும், வாக்குரிமையையும் இழந்தோர் மீண்டும் குடியுரிமையைப் பெற வழிவகுத்தது இச்சட்டம்.

இச்சட்டத்திற்கிணங்க குடியுரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது சில தலைவர்களின் தவறான வழிநடத்தல் மலையக மக்கள் நேரகாலத்தோடு விண்ணப்பிக்காது காலம் தாழ்த்தினர். விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு முடிவடைவதற்கு ஒரு சில மாதங்கள் உள்ளபோதுதான் அவசர, அவசரமாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பினார்கள். இக்குறுகிய கால அவகாசத்தில் குடியுரிமைக்கான விண்ணப்பங்களோடு அனுப்பவேண்டிய ஆவணங்களைச் சரிவர சமர்ப்பிக்க முடியாமையினால் பலர் பாதிக்கப்பட்டனர்.

3ம் இலக்கம் கொண்ட 1949ம் ஆண்டின் இந்திய-பாகிஸ்தானிய வதிவிட குடியுரிமைச் சட்டத்தின்கீழ் தான் இலங்கை இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவராக விளங்கிய திரு.எஸ்.தொண்டமான் அவர்களும், இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் தலைவராக இருந்த ஜனாப் அசீஸ் அவர்களும் மீண்டும் குடியுரிமையைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, 18ம் இலக்கம் கொண்ட குடியுரிமைச் சட்டம்தான் (1948ம் ஆண்டின்) மலையக மக்களின் குடியுரிமையையும், வாக்குரிமையையும் பறித்தது.

பாராளுமன்ற விவாதங்களைப் பதிவு செய்துள்ள "கன் சாட்" (Minute of the house of representative) புத்தகத்தைப் பார்த்து வாசித்து அறிந்து கொள்ளலாம். இதை விடுத்து திரு.இரா.பத்மநாதன் அவர்கள் திரு.இராஜாஜியை தனது கூற்றுக்குத் துணையாக இழுத்திருப்பது வேடிக்கையாக இருக்கின்றது. (எஸ்.டீ.சிவநாயகம் தொடர் (63)

சிலருக்கு உண்மைகள் கசக்கும் என்பதற்காக உண்மைகளைக் கூறாதிருக்க முடியாது. எவர் சங்கடப்பட்டாலும் உண்மைகள் உண்மைகள்தான்.

அந்தக் காலத்தில் சுதந்திரன் பத்திரிகையில் தமது சுயநல அரசியலுக்காகத் தமிழரசுக் கட்சியினர் நடாத்திய பொய்யான, அபாண்டமான குற்றச் சாட்டுக்களை 50 வருடங்களுக்குப் பிறகும் உண்மை எதுவென்று ஆராயாது திரு.இரா.பத்மநாதன் எழுதியிருப்பது விசனத்துக்குரியதே.

### இரா.பத்மநாதன்

வரலாறு எழுதுபவர் சொந்தக் கருத்துக்களை எவ்வாறும் எழுதலாம். ஆனாலும் உண்மைச் சரித்திர சம்பவங்களை மட்டும் உள்ளபடி எழுத வேண்டும். வரலாறு என்பது கதையோ, கற்பனையோ அல்ல."

திரு.ராஜாஜி அவர்களை நான் சந்தித்து உரையாடியதையும் சற்றுக்கிண்டலாக திரு.செல்லத்துரை அவர்கள் கூறியிருக்கிறார். 1958 முதல் 1961 வரை சென்னை மாநகரில் நான் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாக இருந்து பணியாற்றியதையும் அக்காலத்தில் நான் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் திரு.செல்லத்துரை அவர்களுக்கு சான்றுகளுடன் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. பேரறிஞர் ராஜாஜி அவர்களை மட்டுமல்ல, அறிஞர் அண்ணா, தந்தை பெரியார், திரு.காமராஜர் போன்ற பெரியார்களை அடிக்கடி சந்தித்து உறவாடியும் இருக்கிறேன். சுதந்திரன், தினகரன் வாரமஞ்சரி ஆகியவற்றில் இத்தகைய எனது அனுபவங்களை அவ்வப்போது எழுதியுள்ளேன் என்பதையும் இங்கு அடக்கமாகவே குறிப்பிட விரும்புகிறேன். **(வளரும்)**



**திரு.இராசதுரை அவர்கள் 'லங்காமுரசு' வெளியிட்ட 1948ம் ஆண்டு அப்பத்திரிகையின் உதவியாளர் குழுவினருடன் எடுத்துக் கொண்ட இப்படத்தில் மேலே (இ-வ) திரு.கே.எம்.ஷா (பித்தன்), திரு.மனுவேல் துரைராஜா, கீழ் வரிசையில் (இ-வ) திரு.அஸீஸ், திரு.தம்பிராஜா, மற்றும் திரு.செ.இராஜதுரை ஆகியோர்.**

# வாரம் ஒரு வார்த்தை!

### 35. முதல் வணக்கம்

கம்பர் ஒரு காவியம் எழுதினார். 'அது எவ்வளவு அழகானது'ங்கறது சொல்லித் தெரிய வேண்டிய ஒரு விஷயம் இல்லையே?

அவர் எழுதினதை எடுத்துச் சொல்ற விதம் இருக்கு பாருங்க அது ஒரு தனி அழகு!

கம்பராமாயண சொற்பொழிவலே கேட்ட ஒரு விளக்கத்தைதான் இப்ப உங்களுக்குச் சொல்லப்போறேன்.

கம்பன் குறிப்பிட்டிருக்கிற ஒரு செய்தியை வச்சுக்கிட்டு அங்கே என்ன நடந்திருக்கும்ன்னு யுகிச்சி சொல்லியிருக்காங்க.

சீதா கல்யாணம் முடியுது.

மண மண்டபத்துலே ஏகப்பட்ட கூட்டம்.

கல்யாணம் முடிஞ்சவுடனே மண மேடையிலேயிருந்து ராமர் எழுந்ரிரிச்சு வர்றார். தொடர்ந்து சீதாபிராட்டியும் வந்துகிட்டிருக்காங்க.

கூட்டத்துலே, இருந்தவங்களுக்கெல்லாம் ஒரு விஷயத்தை தெரிஞ்சிக்கணுங்கறதுலே ரொம்ப ஆர்வம்.

**தென்கச்சி - கோ.சுவாமிநாதன்**

அதாவது சீதையைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட ராமர் யாரை முதல்லே வணங்கப் போறார்?அப்படிங்கறதை தெரிஞ்சிக்கறதுக்க ஆவலோட காத்துக்கிட்டிருக்காங்க!

சீதை பின்தொடர, ராமர் மண மண்டபத்தை சுற்றி வந்துகிட்டிருக்கார். தூரத்துலே தசரதர் உக்காந்திருந்தார். அந்தப் பக்கமா, ராமரும் சீதையும் போனாங்க.

'சரி.. தசரதருக்குத்தான் முதல் நமஸ்காரம்' அப்படின்னு எல்லாரும் நினைச்சாங்க. ஆனா அவங்க எதிர் பார்த்தது நடக்கலை. இவங்க நேரா அவரைத் தாண்டி அப்பாலே போறாங்க!

அடுத்தாப்புலே இருந்தது கௌசலை.

அந்தப் பக்கமா இவங்க போய்கிட்டிருந்தாங்க. ஒகோ... கௌசலைக்குத்தான் முதல் வணக்கம்ன்னு நினைச்சாங்க.

ஏன்னா 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' இதுலே 'அன்னை' தானே முதல்லே வருது! அதனாலே தாயாரைதான் முதல்லே வணங்கனும்ன்னு நினைக்கிறார் போல இருக்கு-அப்படின்னு நினைச்சாங்க.

ஆனா இவரு தாயையும் தாண்டி அப்பாலே போறார்.

குலகுரு வசிஷ்டர் அடுத்தாப்புலே உக்காந்திருக்கார்.

குரு வணக்கம் முதல்லேன்னு நினைக்கிறார் போல இருக்கு அப்படின்னு நினைச்சாங்க எல்லாரும்! அதுவும் தப்பாப் போச்சு. ராமர் வசிஷ்டரையும் வணங்காமே மேலே போறார்.

இதைப்பார்க்கிறார் விசுவாமித்திரர். கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்றார். அவர் முகத்துலே பெருமிதம்.

'அவங்களுக்கு கல்யாணம் பண்ணி வச்சதே நாம தானே! அதனால நம்ம கிட்டே முதல்லே ஆசீர்வாதம் வாங்கணும்ங்கறதுக்காகத்தான் இங்கே வர்றாங்க போல் இருக்கு! அப்படின்னு நினைச்சார் விசுவாமித்திரர்.

ஆனா அவரும் ஏமாந்துட்டார். அவரையும் தாண்டி அப்பாலே போய்க்கிட்டிருந்தாங்க ராமரும் சீதையும்! சரி... அப்படின்னா யாரைத்தான் அவங்க முதல்லே வணங்கப் போறாங்க! தூரத்துலே ஒரு அம்மா நின்னு கிட்டிருந்தாங்க. அவங்க கால்லே ரெண்டு பேரும் விழுந்தாங்க. யார் அந்த அம்மா?

அதுதான் கைகேயி! ராமர் மேலே அளவு கடந்த அன்பு வச்சிருந்த கைகேயி!

கம்பர் தன்னுடைய ராமாயணத்துலே ராமன் கைகேயியை வணங்கினதை மட்டும் தான் குறிப்பிட்டிருக்கார்.

அதை மட்டும் வச்சிக்கிட்டு அங்கே என்ன நடந்திருக்கும்ங்கறதை அழகா படம் பிடிச்சுக் காட்டியிருக்கார் இந்தப் பேச்சாளர். இதுக்கு ஒரு அர்த்தமும் அவர் சொல்லியிருக்கார்.

இது, ராமன் கைகேயியைப் பார்த்து இப்படி சொன்னது மாதிரி இருந்துதாம்! எப்படி?



'என் அவதாரத்தின் ரகசியம் உனக்குத் தெரியும்! சீதையை ராவணன் தூக்கிட்டுப் போகணும். அதை காரணமா வச்சி ராவண வதம் நடக்கணும். அதனாலே என் பங்கை நான் செஞ்சி முடிச்சுட்டேன். சீதையைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். இனிமே உன் பங்கை நீ செய்யணும்! எங்களை காட்டுக்கு அனுப்பி வைக்கணும். அதுக்காகத்தான் உனக்கு முதல் வணக்கம்! "அப்படின்னு சொல்றது மாதிரி இருந்துதாம்.

எழுதின ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்ற விதமும் எவ்வளவு அழகா இருக்கு பார்த்தீங்களா?

எனக்குத் தெரிஞ்ச ரெண்டு நண்பர்கள் இருக்காங்க. ரெண்டு பேரும் தனியா ஒரு ரூம் எடுத்துத் தங்கிட்டு சொந்தமா சமையல் பண்ணி சாப்பிட்டுக்கிட்டு இருக்கிறவங்க.

அதுலே ஒத்தனுக்கு சமையல் தெரியும். இன்னொருத்தனுக்கு கல்யாணம் நிச்சயமாச்சு. அப்போ அவனைப் பார்த்து இவன் ஒரு கேள்வி கேட்டான்.

ஏண்டா... "உனக்கு கல்யாணம் முடிஞ்சவுடனே முதல் நமஸ்காரம் யாருக்குப் பண்ணப் போறே!" ன்னான்.

"முதல் நமஸ்காரம் உனக்குத்தாண்டா!"ன்னான் இவன்.

'ஏன் அப்படிச் சொல்றே?'ன்னு கேட்டான் அவன்.

"நீ சமைச்சுப் போட்டதை கொஞ்ச நாளா சாப்பிட்ட பிறகுதான் சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டா தேவலைன்னு தோணிச்சு! நல்லவிதமா சாப்பிடலாமேங்கறதுக்காக!

இந்த கல்யாணத்துக்கு காரண கர்த்தாவே நீதான். அதனாலே உனக்குத்தான் முதல் மரியாதை!"ன்னான்.

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## உலக சாதனை படைத்த கலிஸ்



**தெ**ன்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான ஜக்ஸ் கலிஸ், ஸிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் உலக சாதனை ஒன்றை முறியடித்துள்ளார்.

ஸிம்பாப்வேக்குச் சுற்றுப்பயணம் செய்த தென்னாபிரிக்க அணி, அந்நாட்டு அணியுடன் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது. முதல் போட்டியில் வெற்றியீட்டியது தென்னாபிரிக்கா. இரண்டாவது போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

ஸிம்பாப்வேக்கு எதிரான முதல் டெஸ்ட்டின் முதல் இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 157 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் எடுத்திருந்தார் கலிஸ்.

இரண்டாவது டெஸ்ட்டில் கலிஸ் ஆட்டமிழக்காமல் 189 ஓட்டங்களை எடுத்திருந்தார். இது டெஸ்ட் போட்டியொன்றின் ஒரு இன்னிங்ஸில் கலிஸ் எடுத்த அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும்.

இது ஒருபுறமிருக்க இரு டெஸ்ட்களில் 157, 42, 189 ஓட்டங்களை எடுத்து 1028 நிமிடங்கள் ஆட்டமிழக்காது மைதானத்தில் நின்றார் கலிஸ். இது ஒரு புதிய சாதனையாகும்.

இதற்கு முன் இங்கிலாந்து அணித் தலைவர் நஸீர் ஹுஸைன் 1021 நிமிடங்கள் மைதானத்தில் ஆட்டமிழக்காமல் இருந்து உலக சாதனை படைத்திருந்தார்.

இரண்டாவது டெஸ்ட்டின் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதுகள் உலகசாதனை படைத்த ஜக்ஸ் கலிஸிற்கே கிடைத்தன.

## இந்திய அணியில் மாற்றங்கள்

**தெ**ன்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்யும் இந்திய அணி கடந்த 24ம் திகதி இந்தியாவில் இருந்து புறப்பட்டது. இதில் முதலில் தெரிவு செய்யபட்ட வீரர்கள் பட்டியலில் மாற்றங்கள் இடம் பெற்றன.

வேகப்பந்து வீச்சாளர்களான ஆஷிஷ் நேஹ்ரா மற்றும் ஸஹீர் கான் ஆகிய இருவரும் காயம் காரணம் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் பதிலாக அஜித் அகர்கார், புதுமுகம் ராகேஷ் பட்டேல் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்கள் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வி.வி.எஸ். லக்ஷ்மனுக்குப் பதிலாக அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஹேமங் பதானியும் இப்போது நீக்கப்பட்டுள்ளார். வலது பாதத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக நீக்கப்பட்டிருக்கும் பதானிக்குப் பதிலாக ஜேக்கப் மார்ட்டின் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா செல்லும் இந்தியா அங்கு தென்னாபிரிக்கா, கென்யா அணிகளுடன் சேர்ந்து முத்தரப்பு ஒரு நாள் தொடரில் விளையாடுகிறது. இதையடுத்து தென்னாபிரிக்காவுடன் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

## எப்போ வருவார்?



**உ**லகின் தலைசிறந்த துடுப்பாட்டக்காரர் சுனில் கவாஸ்கரின் மகன் ரோகன் கவாஸ்கருக்கு இந்திய தேசிய கிரிக்கெட் அணியில் எப்போது இடம் கிடைக்குமோ தெரியவில்லை.

தந்தை கவாஸ்கர் மும்பை அணிக்காக விளையாடினார். ஆனால் மகன் ரோகனுக்கு மும்பை அணியில் இடம் கிடைக்கவில்லை. எனவே மேற்கு வங்க அணியில் (கங்குலியின் அணி) இடம் பெற்று சிறப்பாக விளையாடி வருகிறார்.

தனக்குப் பிடித்த பிரபல மேற்கிந்தியத் தீவு வீரர் ரோகன் கன்காயின் பெயரில் முன் பாதியை தனது மகனுக்குச் சூட்டியுள்ளார் கவாஸ்கர். எனினும் துடுப்பாட்ட ஸ்டைல், நிற்பது, நடப்பது, ஓடுவது எல்லாம் அச்சொட்டாக தந்தையைப் போல் இருக்கிறார் மகன். ஒரு சின்ன வேறுபாடு. தந்தை வலதுகை மட்டையாளர். மகன் இடது கை மட்டையாளர்.

"மிகவிரைவில் இந்திய அணியில் இடம் பிடிப்பேன்" என நம்பிக்கை தெரிவிக்கிறார் ரோகன்.

முன்னாள் இந்திய கப்டன் அஸாருதீன், கவாஸ்கர் மீதுள்ள கோபத்தில் ரோகனை ஓரம் கட்டியதாகவும் தற்போதைய கப்டன் கங்குலி இவருக்கு ஆதரவு கொடுப்பதாகவும் கூறப்படுகிறது.

எவ்வித சர்ச்சையிலும் சிக்கிக் கொள்ள விரும்பாத ரோகன் இவற்றை மறுத்து வருகிறார்.

# முகக் குறிப்பே முதல் தகுதி

இலக்கிய நயம் தருவது முழடில்யன்

**ம**டியில் படுத்திருந்த அம்மங்காதேவியின் தலையை அரவிந்தனின் ஒரு கை தாங்கியிருந்தது. மறுகை அவள் வயிற்றுக்குக் குறுக்கே கிடந்தது. அந்தக் கையின் அசைவை விரும்பியோ என்னவோ அம்மங்கா படுத்திருந்த நிலையிலேயே உடலைச் சிறிது அசைக்கவும் செய்தாள்.

மெதுவாக அவன் வயிற்றுப்புறம் நோக்கிப் புரண்டவள், அவன் மரக்கட்டைபோல் எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருப்பதையறிந்து, "என்ன யோசனை?" என்று மெல்ல வினவினாள்.

அரவிந்தன் திடுக்குற்றவன் போல் குனிந்து அவள் விழிகளுக்குள் தன் பார்வையை இறக்கினான். பிறகு "நமக்குள் காதல் வந்த விதம் பற்றி யோசித்தேன்" என்று சொன்னான்.

"என்ன கண்டுபிடித்தீர்கள்?" கூடவே சில்லறையைக் குலுக்கிச் சிந்தினாள்.

சிரித்தபோது குலுங்கிய அவள் உடலையும், அப்படிக் குலுங்கித் திரும்பியதால் அவன் தொடையில் அழுந்திய அவள் உடல் பாகங்களின் மென்மை அழுத்தத்தையும் உணர்ந்து நிலைகுலைந்தவனாக அரவிந்தன் சிறிது நேரம் பேசாதிருந்தான்.

அவளிடம் நிலைகுத்தியிருந்த தன் விழிகளை மெல்ல எடுத்துத் தொலைதூரத்தில் நாட்டினான். பிறகு அவன் உதடுகள் அசைந்தன.

"நாமிருவரும் கண்களால் பார்த்துக் கொண்ட போது கொஞ்சம் வந்தது. ஸ்பரிசம் பட்டுக்கொண்ட போது இன்னும் கொஞ்சம்.. பேசி மனதை அறிந்த பிறகு காதல் முழுமையாக நமக்குள் வந்துவிட்டது.."

"ஆகா!" என்றாள் பாராட்டுவதுபோல. பிறகு கைகளால் அவன் முதுகைச் சுற்றி வளைத்தாள். முகத்தை அவன் நெஞ்சருகே கொண்டு சென்று, "இப்போ இங்குதானா அது இருக்கிறது?" என்றுகேட்டு, நெஞ்சில் முத்தமிட்டுக் கட்டிக் கொண்டாள்.

அவள் சேலையை மீற முயன்று கொண்டிருந்த மார்பகங்கள் அவன் வயிற்றில் புதைந்தன.

உணர்ச்சியலைகளில் திக்குமுக்காடி அவள் புரண்டதில், சேலை கலைந்தது. முதுகுப்புறமாக அவள் இறுக்கியிருந்த கச்சை முடிச்சு அவன் கைகளில் உராய்ந்தது.

கச்சைக்குள்ளே இரு பச்சைத் தெங்குக் காய்களை முடிந்து வைத்திருக்கிறாள் என்பதைக் கண்... பார்க்காமலேயே அவனுடல் உணர்ந்தது.

அனிச்சைச் செயலாக அவன் கண்கள் அங்கே சென்றன. பிரமாண்ட எழுச்சிகளை அடக்க முயன்ற கச்சைத் துணியின் தோல்வியை அவன் கண்டான். தெறித்து விடுவதுபோல் இறுக்கிக் கிடந்த கச்சையின் விளிம்புகள் சற்றே புடைத்திருந்தன. பிதுங்கிய இடங்கள் பிறைச்சந்திர வடிவில் ஒளிவீசின.

அந்த அழகுகளிலிருந்து பார்வையை வலுக்கட்டாயமாகப் பிடுங்கி எடுத்துக் கொண்ட அரவிந்தன், அவளது முன் கழுத்தை நோக்கி முகத்தைக் குனிந்தான். கழுத்தருகே கொண்டு சென்று உதடுகளைப் புரட்டி மெதுவாக அழைத்தான், "பெண்ணே!" என்று. அவள் மதுரமாக நகைத்து, "நான் பெண் என்பதை இப்பொழுதுதான் புரிந்துகொண்டீர்களா?" என்று கேட்டாள்.

"உன்னைப் பெண் என்று அறிவிக்கத்தான் ஏராளமான தடயங்களை என்மீது இழைய விட்டிருக்கிறாயே, தவிரவும்..." என்று சொற்களை முடிக்காமல் விட்டான் அரவிந்தன்.

"தவிரவும்..?" என்பதைக் கேள்வியாக்கி முணுமுணுத்தாள் அம்மங்கா.

"என் கைச் சிறைக்குள் நீ. உன் ஆடைச் சிறைக்குள் உன் பெண்ணழகுகள்..." என்றான்.

"அதற்கென்னவாம்?"



"சுதந்திரம் மறுக்கப்படுவதை நான்வெறுக்கிறேன்"

"யார் சுதந்திரத்தை யார் மறுத்தார்கள்?"

"அழகின் சுதந்திரத்தை ஆடைகள் மறுக்கின்றன.."

"அதற்கு?"

"பறவைகளைக்கூட அடைத்துவைத்து அழகு பார்க்க நான் விரும்புவதில்லை..."

"அப்போ என்ன செய்வீர்களாம்?" அவள் ரகசியக்குரலில் கேலியே துள்ளி விளையாடியது.

"கூண்டைத் திறந்து விடுதலை கொடுத்துவிடுவேன்... ஆனந்த விடுதலை!" என்றான் அவனும் ரகசியமாக.

"யார் தடுத்தார்களாம்..?"

அவன் நெஞ்சுக்குள் அசைந்த அவள் உதடுகள் வழியே தேன் பாய்ந்தது. இதயத் துடிப்பு அதிகரிக்க, அத்தனை நரம்புகளும் அவன் மூளைக்குள் தேனைக் கொட்டின. அவள் முதுகுப் புறமிருந்த முடிச்சின் நுனியை அவன் விரல்கள் அசைத்து இழுத்தன.

முடிச்சு அவிழ்ந்ததும் அவன்கையைத் தன் கையால் சட்டென்று பிடித்துக் கொண்டாள்.

அவன் எதிர்ப்பின்றி இருந்தான்.

சற்று நேரம் அவன் பொறுமையைச் சோதித்துத் திருப்தி கண்டவளாக, அந்தக் கையைத் தன் மார்புக்கு எடுத்துச் சென்றாள். அங்கே வைத்து அழுத்தினாள்.

வழவழப்பான மென்மையைக் கைகள் உணர்ந்ததும் அவன் உடலில் சிலிர்ப்பு ஓடியது. ரோமாஞ்சனம் உண்டானது. கூடவேதான் தொட்ட இடத்தில் அந்தப் புஷ்ப உடலின் மிருதுத் தன்மை கெட்டிப்பட்டதையும் உணர்ந்தான்.

"ஆசையில் மிருதுவாகும் மேனி, ஸ்பரிசத்தில் கெட்டிப் படுகிறது..." என்றான் அவள் வழவழத்த கன்னத்தில் தன் கன்னத்தை இழைத்தவாறே.

"அடடா!" என்று கேலிக்குரலில் பாராட்டியவள், "வேறு என்ன ரகசியமெல்லாம் அறிந்து வைத்திருக்கிறீர்கள்?" என்று அவன் காதுமடல்களில் உராய்ந்த உதடுகளால் கேட்டாள்.

"சொல்லட்டுமா?"

"ம்"

"உண்மையைச் சொல்லி விடுவேன்.."

"என்ன உண்மை?" என்றாள், தான் பேசுவது என்ன என்ற உணர்வில்லாமலே,

"காரியத்தில் இறங்காமல் பேசிக் கொண்டிருக்கிறான் முட்டாள் என்று என்னைத் திட்ட நினைக்கிறாய்."

சட்டென்று கோபடைந்தவள்போல் விலக எழுந்தாள். அவன் பிடியை இறக்கிக் கொண்டே, "ஒப்புக் கொண்டு விட்டாய்!" என்று நகைத்தான்.

"என்ன ஒப்புக் கொண்டு விட்டேன்" உஷ்ணம் ஏறிய சொற்களை உமிழ்ந்தாள்.

"நான்சொன்னது சரிதான் என்று உன்கோபத்தால் ஒப்புக் கொண்டாய்..." என்றவன், சற்றுக் கழித்து, "மனதினுள் இருப்பதை யாரும் கண்டுபிடித்துவிட்டால் கோபம் வருவது இயற்கை!" என்று நகைத்தபடியே சொல்லவும் செய்தான்.

"உங்களுக்கு மனதைப் படிக்கும் வித்தை நன்கு தெரியுமாக்கும்?" என்றாள் சினம் வற்றாமல்.

"இந்த நாட்டை ஆள்கிறவன் நான். இதுகூட இல்லாவிட்டால் நீ குப்பை அள்ளத்தான் லாயக்கு என்று திட்டுவார் என் ஆசான்!"

"யார் உங்கள் ஆசான்?"

"வள்ளுவன். ஒருவர் எதுவும் பேசாமலிருக்கும் போதே அவர் என்ன நினைக்கிறார் என்பதை முகக் குறிப்பால் உணருவதுதான் என்போன்றவர்களுக்கெல்லாம் முதல் தகுதி என்கிறார் அவர்."

"நல்ல ஆசானும், கெட்டிக்கார சிஷ்யனும்" என்று சொல்லியபடி அவனை நிலத்தில் வீழ்த்தினாள் அம்மங்கா.

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்
எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கனி.

(குறள்: 701)

## யுவ்ராஜ் சிங் தந்தை கைது

**இ**ந்திய கிரிக்கெட் வீரர் யுவ்ராஜ் சிங்கின் தந்தையாரான, யோக்ராஜ் சிங் என்பவருக்கு காலவரையற்ற விளக்கமறியல் தண்டனை புதுடில்லி நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்டுள்ளது.

1999ம் ஆண்டில் ஜெஸிக்கா லால் என்ற மொடல் அழகி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பான கொலை வழக்குத் தொடர்பாகவே யோக்ராஜ்சிங் மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்றில் சாட்சியமளிக்க தவறியதோடு அழைப்பாணைகளையும் இவர் அவமதித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

புதுடில்லி இரவு கேளிக்கை விடுதியொன்றில் மொடல் அழகி ஜெசிக்காவை யோக்ராஜ் சிங்கின் நண்பரான மனுசர்மா என்பவர் சுட்டு கொன்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாகவே யோக் ராஜ்சிங் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தார்.

தமக்கு மூட்டுவலி ஏற்பட்டதாலேயே நீதிமன்றம் வரமுடியவில்லை என அவர் தெரிவித்திருந்தார். ஆயினும் இக்காரணத்தை ஏற்க மறுத்த நீதிபதி காலவரையற்ற விளக்கமறியல் தண்டனையை அவருக்கு வழங்கினார்.

யோக்ராஜ் சிங்கும் ஒரு முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர். 1981ம் ஆண்டில் இந்தியா-நியூஸிலாந்து கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் அவர் பங்குபற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தியா பதில்கள்

**★ ஒருவன் அறிவாளி என்று ஆவதற்கு எதை எதை எல்லாம் அறிந்திருக்க வேண்டும்?**

கு.மணி, இணுவில்.

*எல்லாவற்றைப் பற்றியும் ஏதாவது அறிந்திருங்கள்; ஏதாவது ஒன்றைப் பற்றி முழுமையாக அறிந்திருங்கள்!*

⊙⊡⊙

**★ தொலைக் காட்சியில் காண்பிக்கப்படும் மெகா தொடர்களைப் பார்ப்பதுண்டா?**

கா.விஜயநந்தினி, வவுனியா.

*அந்த ஒரு வகையில்தான் மின்வெட்டை வாழ்த்தத் தோன்றுகிறது. ஒன்பது மணிவரை தவிர்க்க முடியாமல் தொலைக் காட்சிப் பெட்டிக்கு முன்னால் அமர்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தமும், ஒரே விஷயத்தையே திருப்பித் திருப்பி-அதாவது நடந்த காட்சியை, சம்பந்தப்பட்ட கதாபாத்திரம் வேறொருவருக்கு விளக்கிக் கூறுவதும், பின்னர் அதையே மற்றொருவர் ஃபிளாஷ் பேக்கில் நினைப்பதும், 'இதுதான் நடந்தது' என்று இன்னொரு முறை சொல்லிக்காட்டுவதுமாக அறுத்துத் தள்ளிவிடுவார்கள்-விளக்கிக் காட்டிக் கொண்டிருப்பதுமாக இருக்கவும் முடியாமல் எழுந்து போகவும் முடியாமல் எரிச்சல் படுத்திக் கொண்டிருப்பதிலிருந்து பெரும்பாலும் விடுதலை என்பதில் மகிழ்ச்சிதான். பாலு மகேந்திராவின் கதை நேரம் போல சிக்கென்று மனதில் ஒட்டவும், பாலச்சந்தரின் சிரிப்புத் தொடர்களுக்கும் தான் என் வோட்டு.*

⊙⊡⊙

**★ சிலேடை என்பது என்ன சிந்தியா?**

எஸ்.யோகசுந்தரி, கொழும்பு-15.

*இரு பொருள் வரச் சொற்களை வைத்து விளையாடுதல். உதாரணம்:-*



**காதலித்த போது...**
**உள்ளங்கைத் தேனானேன்**
**ஓர் மதலை பெற்ற பின்னே**
**உள்ளங் கைத்தேனா நான் உனக்கு?**

*மற்றுமொன்று, கவியரங்கில் கண்ணதாசன்:-*

**அவையடக்கம் நான் சொன்னேன்**
**ஆனாலும் எனக்கிந்த அவை-**
**அடக்கம்!**

⊙⊡⊙

**★ காதலுக்கும் மரணத்திற்கும் என்ன தொடர்பு?**

மார்க்கண்டு வாணி, கிரான்.

*மனிதனின் வலிமை பயன்படாமற் போகும் இடங்கள் இரண்டே இரண்டுதான். ஒன்று மரணம்.*
*இன்னொன்று காதல்.*

⊙⊡⊙

**★ நண்பன் ஒரு பெண்ணை உருகி உருகிக் காதலிக்கிறான். எனக்கோ அந்தப் பெண்ணைப் பார்க்கவே சகிக்கவில்லை. இதைத்தான் காதலுக்குக் கண்ணில்லை என்று சொல்கிறார்களா?**

எம்.கருணாகரன், அட்டன்.

*அப்படியெல்லாம் இல்லை. உங்கள் நண்பரிடமே கேட்டுப்பாருங்கள், தன் காதலியின் அழகை அவரால் மணிக்கணக்கில் வியந்து பேசமுடியும். ஜூலியட்டின் அழகு ரோமியோவுக்குத்தான் தெரியுமாம். விடுங்கள்.*

⊙⊡⊙

**★ சிம்ரனிடம் உமக்குப் பிடித்தது எது?**

என்.விஜயரூபன், கொழும்பு-06.

*பிடிப்பதற்கு ஏதுவாயிருக்கும் அந்த இடை. அடடா, அல்வாத் துண்டு!-பழனி பாரதிக்கு நன்றி.*

⊙⊡⊙

**★ போலித்தனங்கள் இல்லாமல் வாழ முடிகிறதா உங்களால்?**

ஆர்.எப்.நஸ்லியா, நிககொள்ள.

*இன்னமும் வெறும் முயற்சியிலேயே காலம் கழிந்து கொண்டிருக்கிறது.*

*முகஸ்துதி கேட்டால் கிளர்ந்தெழும் பெரு மகிழ்வைக் கட்டுப்படுத்திக் கொண்டு, உண்மையையே கேட்க விரும்புவதாக நடிப்பது; அழகான பெண்களைக் கண்டால் சலனப்படுவதை மறைத்துக் கொண்டு, இதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டில்லை என்பது போலக் காட்டிக் கொள்வது; புகழிலே ஆசையிருந்தும், அதைக் கண்டு வெறுப்பதாகச் சொல்லிக் கொள்வது... இவையெல்லாம் சில உதாரணங்கள். இவை உள்ளியல்பாகவே இல்லாமல் அற்றுப் போய்விட வேண்டும் என்பது வெறும் முயற்சி அளவிலேயே இருக்கிறது.*

⊙⊡⊙

**★ தனிமையில் தவிக்கும் மனதுக்கு இதமான கவிதை உண்டா?**

ரு.லதா, அன்புவழிபுரம்.

*வெறுங்கை என்பது மூடத்தனம்.*
*விரல்கள் பத்தும் மூலதனம்.*

⊙⊡⊙

**★ சிந்தியாவின் சமீபத்திய எரிச்சல்?**

ரா.ரஞ்சன் விஜயசிங்க, ராகலை.

*வேறென்ன? தொடரும் மின்வெட்டுத் தான்!*

⊙⊡⊙

**★ மனிதர்கள் எப்படி வாழ வேண்டும்?**

கே.அக்கீத், ஆண்டியாபுளியங்குளம்.

*காதலை அறிந்து மனம் நெகிழ்ந்து, குழந்தைகளை வளர்த்து மனம் விரிந்து, சக மனிதன் துயரத்தை உணர்வதில் மனம் குழைந்து, அதை மாற்ற முயல்வதில் மனம் முந்தியெழுந்து...*

# அபரஞ்சியின் அன்புக்கு ஒரு பரிசோதனை

இராஜபுரி நகரில் இரத்தின வியாபாரிகள் மாதிரி மாறு வேடம் புனைந்த, விக்கிரமாதித்த மன்னனும், மந்திரி பட்டியும் வியாபாரம் செய்து கொண்டிருந்தனர்.

ஒரு நாள் மாலையில் விக்கிரமாதித்தன் மட்டும் விலை மாதர்கள் வசிக்கும் வீதி வழியாக நடந்துச் சென்றார். அந்த வீதியில் ஒரு வீடு மட்டும் கலையழகுடன் மிக அழகாகத் தோற்றமளித்தது. அந்த வீட்டு உப்பரிகையில் ஒரு பேரழகி நின்று கொண்டிருந்ததைக் கண்டார். அவளும் பெரிய காந்தயச் செட்டி என்று பெயர் பூண்டவராக நின்று கொண்டிருந்த விக்கிரமாதித்தனின் பேரழகைக் கண்டு, தனக்கு காளிகாம்பாள் கூறிய விக்கிரமாதித்த மாமன்னர் இவராகத்தான் இருக்கவேண்டும் என்றெண்ணி மாடியில் இருந்து கீழே ஓடி வந்தாள்.

விக்கிரமாதித்தனை தன் மாளிகைக்கு கொடுத்தார். கூந்தலை வாங்கிப் பார்த்த பட்டி ஒரு வகைக் கேலி கலந்த சிரிப்பை உதிர்த்து விட்டு, "தன்னுடைய அழகுக் கூந்தலை வெட்டித் தந்துவிட்டமையினால், அவள் உங்கள் மீது அளவற்ற அன்பு வைத்திருப்பதாகக் கருதுகிறீர்கள். ஆனால் மீண்டும் சொல்லுகிறேன். அண்ணா அவள் உங்களிடமிருந்து ஏதோ ஒரு பெரிய சகாயத்தை எதிர்பார்த்து இத்தனை நாடகம் போடுகிறாள். தாங்கள் இன்றும் அவளிடம் செல்வதானால் நாளை காலை திரும்பும்போது, அவளுடைய மூக்கின் நுனியை அரிந்து தரும்படி கேட்டு வாங்கி வாருங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

இதனைக் கேட்ட மன்னர் விக்கிரமாதித்தனுக்குக் கடும் கோபம் உண்டாயிற்று. விக்கிரமாதித்தன், "நாளை காலை வரும் போது நீர் கேட்டுக் கொண்டபடி அவளுடைய மூக்கின் நுனியை உன்னிடம் கொண்டுவந்து மாதித்தன், "அன்புக்குரிய பெண்ணே நீ என்னை விரும்புவது உண்மையானால் உன்னுடைய மூக்கின் நுனியை அரிந்து தா" என்று கோரினார். அபரஞ்சி சற்றும் தயக்கமில்லாமல் பழங்களை வெட்டுவதற்காக மேசையில் வைக்கப்பட்டிருந்த கூரிய கத்தியை எடுத்து மூக்கின் நுனியை அரிந்தெடுத்தாள். அதனை விக்கிரமாதித்தனிடம் கொடுத்து தெரு வாசல்வரை அவரை அழைத்து கொண்டு வந்து வழியனுப்பி வைத்தாள். அவசர அவசரமாகச் சென்று சத்திரத்திலிருந்த பட்டியிடம் அபரஞ்சியின் மூக்கில் நுனியை எடுத்துக் கொடுத்து, "இதோ பார்... எந்தப் பெண்ணாவது தன் அழகுக்கு மெருகூட்டும் மூக்கை, உண்மையான அன்பில்லாதவரிடம் வெட்டிக் கொடுப்பாளா?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"ஆத்திரப்படாதீர்கள் அண்ணா. இதில் கூட எனக்குச் சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது. எனது சந்தேகம் வலுவடைகிறது. இன்று நீங்கள் மறுபடியும் தாசி அபரஞ்சியிடம் செல்வீர்களானால், அவளுடைய அழகுக்கு மேன்மையூட்டும் இரு மார்பகங்களையும் வெட்டித் தரும்படி கேட்டு வாங்கி வாருங்கள்." என்று மந்திரிப்பட்டி விக்கிரமாதித்தனிடம் கேட்டார்.

இருவரும் அவசர அவசரமாகப் புறப்பட்டு தங்களுடைய இரத்தின வியாபாரத்தைக் கவனிப்பதற்காகச் சென்றனர். மாலையானதும் சத்திரத்திற்குத் திரும்பிய விக்கிரமாதித்தன் அபரஞ்சியிடம் செல்வதற்குப் புறப்பட்டார். பட்டி வழக்கம் போல் "அவளுடைய மார்பகங்களை வெட்டிக் கொண்டு வருவதற்கு மறந்து விடாதீர்கள் அண்ணா" என்று

அழைத்துச் சென்று, உபசரித்து அவரை மகிழ்வித்தாள்.

அபரஞ்சி என்ற பெயருடைய அந்த விலைமகளிடம் மனதைப் பறிகொடுத்தவரான மன்னர் விக்கிரமாதித்தன், அடுத்த நாள் காலை சத்திரத்துக்குச் சென்று அங்கு தங்கியிருந்த மந்திரி பட்டியிடம் தாசி அபரஞ்சியின் பேரழகை வர்ணித்து, அவள் காட்டிய அன்பு பற்றியும் பெரிதாகக் கூறினார்.

இந்த விவரங்களையெல்லாம் கேட்ட மந்திரி பட்டியும், "அந்தத் தாசியினுடைய போலி அன்பில் நீங்கள் சிக்குண்டு விட்டீர்கள். மீண்டும் இன்றும் நீங்கள் அவளிடம் செல்ல எண்ணியிருக்கிறீர்களா?" என்று தருகிறேன்" என்று கூறிவிட்டு இரத்தினக் கற்களையும் எடுத்துக் கொண்டு, பட்டியையும் உடன் அழைத்துக் கொண்டு இருவரும் வழக்கமாக வியாபாரம் செய்யும் இடத்தைச் சென்றடைந்தனர்.

மாலையானதும் வியாபாரத்தை முடித்துக் கொண்டு இருவரும் சத்திரம் திரும்பினர். அவசர அவசரமாக தாசி அபரஞ்சியிடம் செல்வதற்காக புறப்பட்டுக் கொண்டிருந்த மன்னர் விக்கிரமாதித்தனிடம், "அண்ணா மூக்கின் நுனியைக் கொண்டுவர மறந்து விடாதீர்கள்" என்று பட்டி கூறினார். இதைக் கேட்டு விக்கிரமாதித்தன் 'அவளுடைய உண்மையான அன்பை அறிந்து கொள்ளாத அப்பாவியான தம்பி பட்டி, வீணாக அந்த

# மன்னாதி மன்னன்

77

வினவினார்.

விக்கிரமாதித்தனோ, தான் இது காலவரை எந்தப் பெண்ணிடமும் கண்டிராத அளவு இன்பத்தை அவள் தனக்கு அளித்துவிட்டதாகப் பெருமையாகக் கூறினார்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பட்டி. "அண்ணா நீங்கள் ஏமாந்து விட்



நினைவூட்டினார். மந்திரிபட்டியினுடைய கூற்றுக்கு எதுவித பதிலும் சொல்லாத மன்னன் வேகமாக தாசி அபரஞ்சியின் வீட்டுக்குச் சென்றார். அன்றும் அபரஞ்சி அபரிமிதமான வரவேற்பளித்து அதிகளவு இன்பத்தை விக்கிரமாதித்தனுக்கு வழங்கினாள்.

அடுத்த நாள் காலை விக்கிரமாதித்தன் புறப்படும் போது, அவளுடைய இரு சொலகைகளையும் அரிந்து தரும்படி வேதனையுடன் கேட்டார். அபரஞ்சி எதுவிதமான தயக்கமுமின்றி கூரிய வாளையெடுத்து இரு கொங்கைகளையும் வெட்டியெடுத்து ஒரு பட்டுப் பீதாம்பரத்தில் வைத்து விக்கிரமாதித்தனிடம் கொடுத்தாள். அவற்றை சத்திரத்திலிருந்த மந்திரி பட்டியிடம் கொடுத்து, "என்மீது அளவில்லாத அன்பு வைத்திருக்கும் அபரஞ்சியை அவமானப்படுத்துவதற்குத்தானே நீ இவ்வாறு நடந்து கொள்கிறாய். உண்மையான அன்பில்லாத எந்தப் பெண்ணும், தன்னுடைய அங்க அழகுகளையே மூலதன மாக வைத்து தொழில் நடத்தும் சாதாரண தாசி–ஒரு விலை மகள் தன் கூந்தலையும், மூக்கின் நுனியையும், தன் கொங்கைகளையும் அரிந்து கொடுப்பாளா?

தம்பியாகிய உன்னை–மதி மந்திரியாகிய உன்னை கோபித்துக் கொள்ளவோ, அல்லது உன்னை உதாசீனம் செய்து இழந்து விடவோ என்னால் முடியாதிருக்கிறது. இத்தகைய உனது சோதனை அளவு கடந்து விட்டதல்லவா? இன்னும் என்ன பாக்கியிருக்கிறது." என்று சற்று கடுமையாகவே கேட்டார்.

பட்டி புன்னகை பூத்த வண்ணம்" அண்ணா எவ்வாறு இருந்தாலும் அவளுக்கு உங்கள் மீது உண்மையான அன்பு இல்லை என்பது மட்டும் நிச்சயம். அதனை நிரூபிக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது." என்று பட்டி கூறிய போது விக்கிரமாதித்தன் இடைமறித்து "இன்னும் எத்தனை நாட்களுக்குள் நீ நிரூபிக்கப்போகிறாய்?" என்று கேட்டதும்,

பட்டி. "இன்னும் எட்டு நாட்களுக்குள்" என்று பதிலளித்தார்.

மாகள அவளுககுத துளி கூட உங்களம்து அன்பில்லை என்பதை நான் நிரூபிப்பேன். நாளை காலையில் நீங்கள் திரும்பி வரும் போது, அவளுடைய அழகான கூந்தலைக் கத்தரித்துத் தரும்படி கேட்டுப் பாருங்கள்!" என்று மந்திரி பட்டி கூறினார்.

"அபரஞ்சி என்மீது அளவு கடந்த பாசம் கொண்டிருப்பதனால் அவளுடைய உயிரைக் கேட்டாலும் தந்து விடுவாள்" என்று கூறிவிட்டு அபரஞ்சியின் வீட்டை நோக்கிப் புறப் பட்டார் மன்னர்.

அபரஞ்சியின் மாளிகையின் முன்புறத்தை விக்கிரமாதித்த மன்னர் சென்றடைந்ததும், அவருடைய வருகைக்காகவே நாள் முழுவதும் காத்திருந்தவள் போல் துடிதுடித்த அபரஞ்சி, முதல் நாளைவிட மிகவும் மேலான முறையில் மன்னர் விக்கிரமாதித்தனை வரவேற்று உபசரித்து மிக உச்சக்கட்டமான இன்பத்தை வாரி வழங்கினாள்.

மன்னர் விக்கிரமாதித்தன், 'இத்தனை மாசு மருவற்ற அன்பைச் சொரியும் இப்பேதையை போலியானவள் என்ற தம்பி பட்டி கூறுகிறானே' என்று நினைந்து பட்டி மீது சற்றுக் கோபம் கொண்டார். அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும், அபரஞ்சியிடம் இருந்து விடைபெற்றுக் கொண்ட மன்னர் சற்று தயங்கிய வண்ணம், தன்மீது உண்மையான அன்பு இருக்குமானால், அவளுடைய முடியை கத்தரித்துத் தரும்படி கேட்டார். அவள் எந்தத் தயக்கமுமின்றி அவளுடைய முடி அத்தனையையும் கத்தரித்து எடுத்து மன்னர் விக்கிரமாதித்தனுடைய கையில் கொடுத்தாள்.

மன்னர் விக்கிரமாதித்தன் ஒரு குற்றவாளியைப்போல் முடியை வாங்கிக்கொண்டு சத்திரத்தை நோக்கிப் புறப்பட்டார். அவருடைய வருகைக்காகவே காத்திருந்த மந்திரி பட்டியிடம், அபரஞ்சியினுடைய கூந்தலைக்

அழகிய பெண்ணை இம்சிக்க வைக்கிறானே' என்று கவலை கொண்டவராக அபரஞ்சியின் மாளிகைக்கு அவசர அவசரமாகப் போனார்.

அபரஞ்சியின் இல்லத்தில் முதல் இரு நாட்களையும்விட மிக மேலான உபசரிப்பை வழங்கி விக்கிரமாதித்தனை மாளிகைக்குள் அழைத்துச் சென்றாள். வகைவகையான தின்பண்டங்களையும் தித்திப்பான பானங்களையும் விக்கிரமாதித்த மன்னருக்கு உண்ணவும் குடிக்கவும் கொடுத்தாள்.

மூன்றாவது நாளான அன்று மன்னர் விக்கிரமாதித்தனுக்கு வழங்கப்பட்ட இன்பம் மற்ற இரு நாட்களையும்விட மகோன்னதமாக இருந்தது.

அன்றிரவ முழுவதும் மிக மகிழ்ச்சியாகப்

இராஜகுமாரன்

பொழுதைக் கழித்து விட்டு, அடுத்த நாள் காலை புறப்படும் போது பட்டியின் நினைவு விக்கிரமாதித்தனுக்கு வந்தது. அவளுடைய அழகிய மூக்கை அரிந்து தரும்படி எவ்வாறு கேட்பது, என்று விக்கிரமாதித்தன் தயங்கினார். அவருடைய தயக்கத்தைப் பார்த்த அபரஞ்சி "நாதா! தங்களை நான் என் தெய்வத்திற்குச் சமமாக மதிக்கிறேன். எதையோ என்னிடம் மறைக்க முயற்சிக்கிறீர்கள். என்னிடம் எதுவேண்டுமானாலும், என் உயிர் வேண்டுமானாலும் தங்களுக்குத் தரத் தயாராக இருக்கிறேன். என்னிடமுள்ள எது வேண்டுமென்று கேளுங்கள்", என்று அபரஞ்சி கேட்டாள்.

வேதனை நிரம்பிய மனத்துடன் விக்கிர

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:.............. பெயர்:.................... ஒப்பம்:..................



நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி

அபிமான வாசகர் போட்டியில் எட்டாவது: ஒரு முட்டாளாய்த் திகழ்வதற்குரிய முதற் தகுதி என்ன? முடிவுத் திகதி செப்டெம்பர் 30.

மழை ஒருபடி வந்து சேர்ந்தது மனசுக்கு கொஞ்சம் நிம்மதியா இருக்குப் பாருங்கோ. கரண்ட் கட்டெண்டு சொல்லி உயிர் போக வைச்சுட்டாங்கள். கொழும்புக் குச்சியறைகளுக்க முடங்கியிருக்கிற எங்கட சனம் அவிஞ்சு செத்ததுதான் மிச்சம். ஊரோட இருந்த அந்தக் காலத்தில் உந்தக் கரண்டும் கத்தரிக்காயும் எங்க கிடந்தது? துலாவால தண்ணியிறைச்சுக் குளிச்சிட்டுத் திண்ணைப் பாயில சாய்ஞ்சா கண்ணை மூடிக்கொண்டு நித்திர வரும். இங்க எங்கட சனத்துக்கு குழாய்த் தண்ணியும் ஃபனும் இல்லாட்டால் குடிமுழுகிப் போயிடும். குறையாச் சொல்லேல்ல கண்டியலோ. நடப்பத்தான் சொல்லுறன். வீடு, வளவு, வயல், வரம்பு, காணி, கிணறு எல்லாத்தையும் விட்டுட்டு கொழும்புக்கு வந்து குச்சியறைகளில முடங்கியிருக்கச்சொல்லி விதிச்சிருக்குது எங்கட சனத்துக்கு. இந்தக் கேட்டுக்குள்ள கரண்டும் இல்லையெண்டால்...ம். நினைக்கக்க பரிதாபமாத்தான் கிடக்குது. ஆனாலும் பாருங்கோ இந்தக் கரண்ட் கட்டான நேரத்தை எப்பிடிப் புத்தியாக் கடத்திறதெண்டு கொஞ்சம் ஐடியா யோசிச்சனான். உபயோகப் படுதோவெண்டு பாருங்கோ.

பகலில கரண்ட் கட்டாப்போனால் பொடியலுக்கு நல்லஐடியா படத்துக்குப் போறதுதான். ஒரு ஏசி தியட்டரில போய்க் குந்தினால் ஒரு அரைநாள் பொழுது அப்பிடியே போயிடும். படம் முடிஞ்சால் உந்த சொப்பிங் கொம்பிளெக்ஸ்சுகளுக்க நுழையுங்கோ. நல்லா ஜெனரேட்டர் போட்டு வைச்சிருப்பான். (நீங்கள் வருவியலெண்டதுக்காக இல்ல, தன்ர சாமான்கள் பழுதாயிடாமலிருக்க) ஏதோ சாமான்கள் வாங்கிற மாதிரி நல்ல ஆறுதலா உலாத்தித் திரிஞ்சிட்டு சின்னனா ஒரு நெருப்புப் பெட்டிய மட்டும் வாங்கிக் கெண்டு வெளியால வரலாம். பின்னேரமெண்டால் சொல்லித்தரத் தேவையில்லை. இருக்கவே இருக்குது வெள்ளவத்தை பீச். காலாற நடந்ததுமாச்சுது, கரண்ட் கட்டைக் கடத்தினதுமாச்சுது. இந்த கோல்பேசை மட்டும் திறந்து விட்டுட்டாங்களெண்டால் இந்தக் கரண்ட் கட் காலத்தில என்ன சோக்காய் இருக்கும்? அதுவும் இப்ப பனைய நட்டு வைச்சிருக்கிறான். பனைக்குக் கீழ குந்தியிருந்து ஐஸ்கிறீம் சாப்பிட்டால் கடற்கரைக் காத்துக்கு அந்தமாதிரி இருக்காதோ? பகலக் கடத்தப் பலயோசனைகள் இருக்குதுங்கோ. இந்த இரவைக் கடத்திறதுதான் கஷ்டமான காரியமாக் கிடக்குது. இருட்டு ஒரு பக்கம், கறண்ட் கட்டால ஃபனுமில்லாமல் புழுக்கம் மற்றப் பக்கம் படுக்க ஏலுமே? இதுக்கு எனக்குத் தெரிய ஒரேயொரு வழிதான் இருக்கு. பேசாமல் வருத்தமெண்டு சொல்லி ஆசுப்பத்திரியலில சேர்ந்து படுத்திடுங்கோ.

கரண்ட் கட்டப் போக்கவும் கொஞ்ச ஐடியா இருக்கு. இது நீங்கள் நாங்கள் சிந்திக்கற விசயமில்லை. அரசாங்கம் சந்திக்க வேண்டின விசயம். முக்கியமா மழைய வரப் பண்ணுறது எப்பிடியெண்டதுதான். அதுக்கு லேசான வழி எண்னெண்டால், மேகத்தத் திருடுறதுதான். ஒரு சில நாடுகள் ஏதோ காந்தசக்தியைப் பாவிச்சு மேகங்கள மெல்லத் தங்கட நாட்டுக்கு இழுத்துக் கொண்டு போறாங்களெண்டு ஒரு கதை அடிபடுது. அதாலதான் இலங்கைக்கும் மழைத் தட்டுப்பாடு வந்துதோ தெரியாது. நாங்களும் ஒரு வடக் கயித்த பிளேன்ல போட்டுக் கொண்டு போய் மெதுவா இந்து சமுத்திரத்துக்கு மேல உலாத்தித் திரிகிற மேகங்கள இரவோட இரவாக் கட்டியிழுத்துக்கொண்டு வந்து சேத்தால் என்ன? இல்லாட்டால் மற்றொரு ஐடியா இருக்குது. நடக்காதது நடந்தால் மழை வரப்போகுதெண்டு சொல்லுறவையல்லே. அதன்படி அரசாங்கம் ஒருசில அறிவிப்புகளச் செய்தால் தன்ரபாட்டில வரும் மழை. யுத்த நிறுத்தத்த அறிவிக்கலாம். வவுனியாப் பாஸ் முறையை நீக்கியாச்செண்டு அறிவிக்கலாம். பாதுகாப்பு வரி இனிமேல் தேவையில்லையெண்டு அறிவிக்கலாம். இல்லாட்டால் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் வைக்கப் போறதா அறிவிக்கலாம். சரியா நீர்தாங்கும் பகுதியில மழை பெய்ய வேணுமெண்டால் மலையகத் தோட்டத் தொழிலாளருக்கு மாதச் சம்பளம் வழங்கப்படுமெண்டு சொன்னாலே போதும், மழையால அணைக்கட்டெல்லாம் நிரம்பி வழியும். மொத்த நாட்டிலயும் மழை பெய்யிறதெண்டால் இலங்கைய ஒரு மதசார்பற்ற நாடா அறிவிச்சால் போதும். அதுக்கும் மேலா இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு கண்டதா அறிவிச்சால் வருசம்பூராப் பெய்யும் மழை.

எது எப்பிடியிருந்தாலும் இப்ப கொஞ்சம் மழை பெய்யத் தொடங்கியிருக்கிறது நிம்மதி. இது இந்த அமைச்சர்மாரை இருபதாக் குறைச்ச அதிசயத்தால வந்திருக்க வேணுமெண்டுதான் நான் நினைக்கறன். அதோட இந்தக் கொமிஷன்கள் முண்டப் போடுறதுக்கும் அரசாங்கம் இணங்கியிருக்கிறது இன்னொரு காரணமாக இருக்கலாம். எதுவாயிருந்தாலும் மழை வந்தது நல்ல காரியம். அதேவேளையில 'ஏன்டாப்பா இந்த மழை வந்து துலைச்சுது' எண்டு திட்டுறவை கொஞ்சப் பேரும் நாட்டில இருக்கினம். அவை தான் இப்ப லாபம் சம்பாதிக்கிற மின்சார வியாபாரிகள் இவை தனியார் மின்சார நிலையங்களை ஏற்படுத்தி அரசாங்கத்துக்கு கூடுதல் விலைக்கு மின்சாரம் விக்கினம். நீர் மின்சாரம் தட்டுப்பாடு கண்டால் இவையிண்ட மின்சாரத்தத்தான் கூடுதல் விலைக்கு அரசாங்கம் வாங்க வேண்டியிருக்கும். இவையை விட மின்சாரத் தட்டுப்பாட்டை நம்பி ஜெனரேட்டர்கள், எமேர்ஜென்ஸி லைட்டுகள் இறக்குமதி செய்து வைச்சிருக்கிறவைக்கும் மழை வந்தது பிடிப்பில்லைதான். என்ன செய்கிறது வைத்தியருக்கு வருமானம் வேணுமெண்டதுக்காக எல்லாரும் வருத்தக்காறராக ஏலுமே? எல்லாம் சரி, இந்த மழைப் பிரச்சனைக்கு எங்கட வள்ளுவர் ஒரு வழி சொல்லியிருந்தாரே. அதை ஏன் ஒருத்தரும் ட்ரை பண்ணிப்பாக்கேல்லை. அதாவது கண்டியலோ, திருக்குறள் ஒண்டு என்ர அரைகுறை ஞாபகத்தில இருக்குது "தெய்வம் தொழா அள், கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை!" எண்டால் பாருங்கோ. கடவுளுக்குப் பதிலா தங்கட கணவன்மாரைக் கடவுளாத் தொழுகிற கற்புக் கரசிகள் பெய் யெண்டு சொன்ன உடன மழை பெய்யுமாமெண்டு நானில்லை, வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அப்பப் பாருங்கோ, எங்க நாட்டு மனைவிகளெல்லாம் ஒருக்கால் ட்ரைபண்ணிப் பார்த்தால் என்ன?

யாவும் கலப்படமற்ற கற்பனை



அருள் ஜுவலர்ஸ்

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு


# அணிவகுப்பு

சிறார்களுக்கான ஆங்கிலக்கதை ஒன்றின் பெயர் 'பஞ்ச் அன்ட் ஜூடி'. இந்தக் கதைகளில் வரும் நாயகனான பஞ்ச் தான் இந்த அணிவகுப்பிற்குத் தலைமை தாங்கிச் செல்கிறார்.

இந்தக் கதையில் வரும் ஏனைய பாத்திரங்களின் தலைகளை முத்திரை போன்ற அமைப்பில் பொறித்து அவற்றைக் கைகளில் ஏந்திய வண்ணம் பஞ்சைப் பின் தொடர்கிறார்கள் சிறார்கள் சிலர்.

இலண்டன் மாநகரை அண்மித்த ஸ்டாஃபோர்ஷையரில் நடந்த 'ரோயல் மெயில்' விருந்தின் போது இந்த அணிவகுப்பு பவனி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு




# பறப்பு

சர்வதேச விண்வெளி நிலையம் ஒன்று விண்ணில் உருவாகி வருகிறது. அதன் தோற்றம் தான் இது. விண்ணில் பறந்தபடி இருப்பது போல் தோற்றம் கொண்ட இந்த விண்வெளி நிலையத்தில் முழுவேலைகளும் 2004ம் ஆண்டு முற்றுப் பெற்று விடும். இதன் நீளம் 296 அடி. இதன் இறக்கை ஒன்றின் நீளம் 356 அடி. இதன் நிறை 456 தொன்.





# மிதப்பு

அமெரிக்காவில் உள்ள மில்க் ஃபீல்ட் என்னுமிடத்தில் உள்ள வயல்களில் சில வார காலத்திற்கு முன் மர்மமான அடையாளங்கள் தோன்றியுள்ளன. இந்த அடையாளங்களைப் பார்வையிட விண் குதிப்போர்கள் சிலர், விமானத்தில் இருந்து குதித்து, இவ்வாறு அந்தரத்தில் மிதந்த வண்ணம் கைகோர்த்து வட்டமிட்டு இறங்குகின்றனர்.

# 1வது பிறந்த நாள் வாழ்த்து



ஐங்கரன் மனோஷிகன் | 26.09.2001

[illegible]

# அலங்கரிப்பு

அழகிற்கு அழகு சேர்க்கும் அழகிகளுக்கான நவீன ரகப் பாவாடை தான் இது. நூலிழைகளை அழகழகாக வைத்துத் தொங்க விட்டுப் பூக்கள் நட்சத்திரங்கள் போன்ற வடிவங்களைத் துணியில் செய்து, இடையிடையே அந்நூலிழைகளில் செருகித் தைத்துள்ளனர். அழகியின் காலழகை கவர்ச்சியாக இப்பாவாடை காட்டுகிறது. இது ஓர் இரவு உடை ஆகும்.



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் முஹமட் பஸ்மி | 30.09.2001

[illegible]




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 6A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் செப்.30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.